


# நாவாய் மண்ணின் சேவையின்செம்மல்

## S.J.வீரசிங்கம் (வீரா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970 ஆம் ஆண்டு அமரர் வீராவும் அவரின் பாரியாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.செ.யோசேப் வீரசிங்கம்.
# முன்னாள் M.M.C.JP
# வாழ்வியல் வரலாறு

இந்து மகா கடலின் "முத்து" என விளங்கும் ஈழத்திருநாட்டின் மணிமுடியாம் யாழ்ப்பாண நகரின் மேற்குத்திசையில் சிற்றலைகள் முத்தமிட்டுச்செல்லும் மரக்கலங்கள் பண்ணிசை பாடும், கலைவளம் கொண்ட நாவாந்துறைக் கிராமத்தில் அமரர் யோசேப் வீரசிங்கம் 11.11.1934இல் செபஸ்தியாம்பிள்ளை(ரெத்தினம்) ஆசிர்வாதம்மா (சம்பூரணம்) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக பிறந்தார். இவருடன் காலம் சென்ற அமரர்களான அல்பிரட்துரைசிங்கம், திரு.பாலசிங்கம், திரு. அமல சிங்கமும் உடன்பிறந்த சகோதரர்களாவர். இவரது தந்தையார் ரெத்தினம் முற்போக்கு சமூக சிந்தனையும், கல்வியில் அபிமானம் உள்ளவராகவும் விளங்கினார். தமது ஒரு மகனையாவது உயர்கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்று ஆவல்கொண்டு அமரர் வீரசிங்கத்தை ஆரம்ப வகுப்பிலேயே வண.லோங் அடிகளார் அதிபராக இருந்த காலகட்டத்தில் வட பகுதியில் புகழ்மிக்க கல்லூரிகளில் ஒன்றான புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்த்தார். அமரர் அப்போதய S.S.C வகுப்பு வரை கல்வி பயின்று கல்லூரி உதைப்பந்தாட்ட இடதுகால் முன்னணி வீரராகவும் விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கு பற்றி எல்லோரின்பாராட்டுதலையும் பெற்றார்.

அமரர் வீரசிங்கம் கல்லூரியை விட்டு தனது இளம்பிராயத்தில் சமூகப்பணிகளிலும், விளையாட்டிலும் செயல்பட ஆர்வம் கொண்டார். இக்கால கட்டத்தில் பெற்றோர் திருமணம் செய்ய தீர்மானித்ததின் பொருட்டு தனது துணைவியாக காலஞ்சென்ற மூத்தர்மரியாம்பிள்ளை, மரியாம்பிள்ளைசலோமை குடும்பத்தாரின் கனிஷ்ட புதல்வியான எலிசபேத் (மேரிப்பிள்ளை)யை 20.10.1955 இல் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். இல்லற வாழ்வு இனிதே இடம் பெற மூன்று புதல்விகளுக்கும் மூன்று புதல்வர்களுக்கும் பாசமிகு தந்தையானார். புதல்விகளான சிங்கராணி குணசிங்கம்(கந்தன்), மேரிராணி-அன்ரனிப்பிள்ளை (ஆசீர்தாசன்), இந்திராணி-டிடாக்கஸ்(சில்வேஸ்ரர்) ஆகியோரை துணைவர்களாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்சிங்கம் - மாகிறெற் (புஸ்பா), ஜானசன் - மேரிபெரடோபனா(கிறிஸ்ரெலா), ராஜன் மேரிமெற்றில்டா (அஞ்சலீனா) ஆகியோரை துணைவியராகவும் கரம் பிடித்து, திருமண பந்தத்தில் ஒன்றுபட்டு தாயகத்திலும், புலம்பெயர்ந்து கனடாவிலும் பிள்ளை செல்வங்களை நிறைவாகப்பெற்று இன்று கனடா நாட்டில் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அல்லாமலும் அமரரின் பேரப் பிள்ளைகள் கல்வி - விளையாட்டு கலைத்துறைகளில் சிறப்பும் பெற்று வருவதும் தந்தையார் வழியில் தனயர்களும் சமூக ஸ்தாபனங்களில் இணைந்து பணியாற்றியும், உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகத்திலும் செயலாற்றி வருவது கண்கூடு.

அமரர் வீரசிங்கத்தின் வாழ்க்கைப்பயணத்தை சற்று முன்னோக்கி பார்ப்போமாகில் அவரது உணர்வுகள், செயல்பாடுகள், யாவும் தான் பிறந்த கிராமத்தையும், தாம் சார்ந்த சமூகத்தையும், முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்ற இலட்சியத்தை கொண்டவராக விளங்கினார். அதை நிறைவேற்றும் பொருட்டு யாழ் மாவட்டத்தில் பழம்பெருமை வாய்ந்த சனசமூக நிலையங்களில் ஒன்றான சென்மேரிஸ் சனசமூக நிலையத்தில் இணைந்து சமூக சேவைகளிலும் பிரபல்யம் மிக்க பலம் வாய்ந்த அணியான சென்மேரிஸ் கழக உதைப்பந்தாட்ட அணியின் இடதுகால் முன்னணி வீரராக திகழ்ந்து சிறப்புடன் விளையாடினார். 1957ம் ஆண்டில் கழக அணியில் விளையாடி 1963 வரை அணி வீரராகவும் அணித்தலைவராகவும் (கப்டன்) இருந்து பணியாற்றி பல வெற்றிகளை ஈட்டிக்கொடுத்தார். மேலும் சமகாலங்களில் தமது மூத்த சகோதரர்களான அல்பிரட் துரைசிங்கம், பாலசிங்கம் அமலசிங்கம் ஆகிய வீரர்களுடன் கழக அணியில் இடம்பெற்று விளையாடியமை நினைவுகூரத்தக்கது.

அமரர் வீரசிங்கம் சமூகப்பொதுப்பணிகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்த போதும் தம்மை ஓர் அரசியல் அமைப்பில் இணைத்துக்கொள்ள ஆதங்கப்பட்டார். 1952ம் ஆண்டு அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்த ஒரேயொரு தமிழ் அரசியல் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவம் பெற்றார். அன்று முதல் கட்சிப்பணிகளில் தமதுகிராமத்திலும் அதற்கு வெளியேயும் அதிதீவிரமாக செயல்பட்டார். இதற்கு உறுதுணையாக அமரரது மூத்த சகோதரர் அல்பிரட்துரைசிங்கம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் கட்சியில் சிறந்த தொண்டனாக விளங்கியமையால் தலைவர் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டார். கட்சி அரசியல் செயல்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்த வேளையில் முதன்முதலாக 1957ம் ஆண்டு யாழ் மாநகரசபை தேர்தலில் போட்டியிட முன்வந்தார். அமரர் போட்டியிட்ட 11ம் வட்டாரம் தெற்கே 12ம் வட்டாரங்களாக நாவாந்துறை கிராமத்தை உள்ளடக்கிய முஸ்லீம் வாக்காளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட வட்டாரங்களாகும். இந் நிலையில் தமக்கு வெற்றி வாய்ப்பு அரிது என்று தெரிந்தும் துணிவுடன் தேர்தலில் போட்டியிட முன் வந்தது கிராம மக்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. இதன் மூலம் நாவாய் மண்ணிற்கு அரசியல் முகவரியை தேடிக்கொடுத்த பெருமை அமரரைச் சாரும்.

1957ல் நடைபெற்ற யாழ் மாநகரசபைத் தேர்தலில் தோல்வியுற்று ஜனாப் அபுசாலி ஹாஜியார் வெற்றி பெற்றார். அமரர் வீரசிங்கம் தோல்வியுற்ற போதும் அதனை ஏற்று துவண்டுபோகவில்லை. "தோல்வியே வெற்றியின் படிகள்" Failurss are the pillores Success. என்ற ஓர் அறிஞனின் கூற்றுக்கமைய மேலும் தமது வெற்றி இலக்கை கொண்டு பணியாற்றினார். அரசியலில் ஈடுபாடு கொண்ட போதும் சமூகப்பணிகளிலும், விளையாட்டிலும் பங்குபற்றத்தவறவில்லை. ஐந்து வருட காலம் உருண்டோடின. 1962ம் ஆண்டு நாவாந்துறை கிராமத்துக்கு ஒரு தனிவட்டாரம் யாழ் மாநகரசபையில் அமையவேண்டும் என்ற முடிவினை உள்ளூராட்சி அமைச்சு அரச வர்த்தமானி மூலமும் புதினப்பத்திரிகை மூலமும் பகிரங்கப்படுத்தி புதிய வட்டாரம் அமைவதற்கு ஏதுவான பௌதீக-சமூக-பொருளாதாரக் காரணிகளை ஆராய்ந்து சமர்ப்பிக்குமாறு பொது ஸ்தாபனங்களை கோரியிருந்தது. இவ்வறிவிப்பின்படி அமரர் வீரசிங்கம் போன்ற கிராம முன்னணி அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாட்டாளர்களுக்கும், சமூக நலன் விரும்பிகளுக்கும், தம் கிராம இலட்சியக்கனவை நனவாக்க வழி அமைத்துக்கொடுத்தது. சென்மேரிஸ் சனசமூக நிலையத்தின் சார்பாக அறிக்கையினை தயாரிப்பதற்கு அமரர் வீரசிங்கம் உறுதுணையாய் இருந்தார். 1963ம் ஆண்டு சித்திரை மாதம் நாவாந்துறை கிராமம் யாழ் மாநகரசபையில் 20ம் வட்டாரமாக பிரகடனப்படுத்தி புதிய மாநகரசபைக்கான தேர்தல் அதே ஆண்டு டிசம்பரில் தீர்மானிக்கப்பட்டது. இச்செய்தியினை அறிந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தமது வட்டாரப்பிரதிநிதி மூலம் சொந்த வேலைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், கிராமத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவும், அதற்கான வாய்ப்பை அளிக்க இருக்கும் தேர்தலை மிகவும் ஆர்வத்துடன் எதிர்கொள்ளக்காத்திருந்தனர். முதன் முதலாக புதிய வட்டாரத்தேர்தல் நடைபெற இருப்பதால் தேர்தல் களைகட்டத்தொடங்கியது. கிராமத்தில் போட்டியின்றி ஒரு பிரதிநிதியை தெரிவு செய்ய முடியாத துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. சமூக-மத ரீதியாக பிளவு பட்ட மக்கள் பிரதி நிதிகள் ஐவர் தேர்தல் போட்டியில் பங்கு பற்றினர். இத்தேர்தலில் அமரர் வீரசிங்கம் மூன்றாவதாக வந்து தோல்வி அடைந்தார். தோல்வியை ஏற்றுக்கொண்டு மேலும் முனைப்புடன் தமது லட்சியப்பயணத்தை நோக்கி வீறுநடை போட்டார்.

1968ம் ஆண்டு அமரர் CX மாட்டீன் கமிசன் பரிந்துரை செய்த புதிய யாழ் மாநகரசபைக்கான வட்டார நிர்ணயத்தில் 23 வட்டாரங்கள் அமைக்கப்பட்டது. இதற்கான தேர்தல் 25.11.1968 இல் நடைபெற்றது. இத் தேர்தலில் அமரர் வீரசிங்கம் சுயேட்சை வேட்பாளராக (தமிழ் காங்கிரஸ் ஆதரவு பெற்று) போட்டியிட்டு 56 மேலதிக வாக்குகளால்திரு. பெஞ்சமின் யேக்கேப்பை தோற்கடித்து வெற்றிவாகை சூடினார். இவ் வெற்றியை தமது சமூக மக்களுடன் உணர்ச்சி பூர்வமாக பகிர்ந்து கொண்டது மறக்க முடியாத நிகழ்வாகும்.

அமரர் யாழ் மாநகர சபையின் உறுப்பினராக இருந்து தமது கிராம மக்களுக்கு சேவை செய்ய முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டார். அமரரின் சேவைகளில் முக்கியமானவை பழைய சென்மேரிஸ் சனசமூகநிலைய கட்டிடத்தை பொருளாதார ரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்சியடைந்துவரும் சென்மேரிஸ் கடல் அட்டை சங்கத்துக்கு கொடுத்து அதன் மூலம் பெற்ற நிதியைக் கொண்டு சென்மேரிஸ் முத்தமிழ் சங்கத்தினை அமைக்க உதவலானார்.மேலும் கிராம கடல் அட்டைச் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வட பகுதி கூட்டுறவு ஆணையாளர் திரு ரகுநாதன் தலைமையில் ஓர் பணிப்பாளர் சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு சிறப்புடன் பணியாற்றினார்.யாழ் மாநகரசபை பொது நூல் நிலைய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் புதிய நூலகம் நாவாய் கடற்கரை வீதியில் அமைத்து மக்கள் தம் வாசிப்பு அறிவை வளர்க்க உதவலானார். தமது கிராமத்தில் தாழ்ந்துபோன சென்.நீக்கலஸ் கோயில் வீதி,கென்னடி வீதிகளை செப்பனிட்டும் தமது கிராமத்துக்கு குடிநீர் வர வழி சமைத்தும்,கழிவுநீர் ஓட வாய்க்கால் அமைத்தும் புதிய வீதியான மேரி யோசேப் வீதியை அமைத்து, அவ்வீதியை வடக்கே அராலி வீதியுடன் இணைக்க திட்டமிட்டு புதிய குடியிருப்புக்களை அமைக்க முன்னின்று உழைத்தது அமரரின் சாதனைகளில் ஒன்றாகும்.

அமரர் வீரசிங்கம் யாழ் மாநகரசபை உறுப்பினராக பணியாற்றிய போது சகல வட்டார உறுப்பினர்களுடனும் கட்சி பேதமின்றி மாநகரசபை பொது அபிவிருத்தி திட்டங்களில் பணியாற்றியவர். யாழ் மாநகர முதல்வர்களான அமரர் அல்பிரட் துரையப்பா, அமரர் சின்னத்தம்பி நாகராஜா ஆகியோர் தமது பதவிக்காலத்தில் யாழ் மாநகரத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தினை முன்னெடுத்தபோது அமரர் வீரசிங்கமும் துணை நின்று சிறப்புடன் பணியாற்றினார். 1969ம் ஆண்டு மத்தியில் யாழ் புதிய நவீன சந்தைக்கட்டிட ஒரு பகுதியின் சுவரில் கருங்கல்லில் அமரரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நவீன சந்தை திறப்பு நிகழ்வானது யாழ் நகர மக்களினாலும் வர்த்தக சமூகத்தினாலும் பெரிதும் வரவேற்கப்பட்டதை புதினப்பத்திரிகைகள் பாராட்டத் தவறவில்லை.

மேலும் யாழ் நகர மத்திய வீதிகள்,பொது கலை அரங்கம்,பொதுசன நூலகம், சுப்பிரமணியப் பூங்கா, என்பன விஸ்தரிக்கப்பட்டு அழகாக்கப்பட்டது. யாழ் மாநகர மக்கள் இச்சேவையினைக் கண்டு பெரும் மகிழ்ச்சி கொண்டு மாநகர முதல்வரையும் ஏனைய உறுப்பினர்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டத்தவறவில்லை.அமரர் வீரசிங்கத்தின் ஒன்று பட்ட செயல்பாடுகளுக்காகவும், உறுப்பினர்களுடன் கொண்ட நட்பு,பணிகளினால் 1972ம் ஆண்டு ஆவணித்திங்கள் யாழ் மாநகர பிதா அமரர் அல்பிரட் துரையப்பா முன்னிலையில் உதவிமேயராக தெரிவுசெய்யப்பட்டார். சபை உறுப்பினர்களினாலும் மாநகர ஆணையாளரினாலும் பாராட்டுதல்களைப் பெற்றார். உதவி மேயர் பதவியினது அமரரின் ஐந்து வருட சேவைக்கு கிடைத்த பரிசு என்று கூறினால் மிகையாகாது.

அமரர் வீரசிங்கம் யாழ் மாநகரசபை உறுப்பினர் பதவிக்காலத்தின் போது யாழ்ப்பாணத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம், C.X.மார்டின் ஆகியோருடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்.தொகுதி அபிவிருத்தித் திட்ட நிகழ்ச்சிகளில் தவறாது பங்கு-பற்றியும், நிகழ்வுகளில் சிறந்த சொற்பொழிவினையும் நிகழ்த்தியமை நினைவு கூரத்தக்கது. அமரரின் சமூக சேவைகளை கருத்தில் கொண்ட அரசு அன்னாருக்கு சமாதான நீதவான பட்டம் அளித்து கௌரவித்தது. இதனை கிராம மக்கள் வரவேற்று பெருமகிழ்ச்சியடைந்தனர்.

அமரர் வீரசிங்கம் நாவாய் சென்மேரிஸ் சனசமூக நிலையத்தில் இணைந்த காலம் முதல் தமது கருத்து ஆழம் மிக்க பேச்சினாலும், செயல்பாடுகளினாலும், சக அங்கத்தவர்களை கவர்ந்தார்.பல நிர்வாக உறுப்பினர் பதவிகளை வகித்து திறம்பட செயல்பட்டார்.இதனை கருத்தில் கொண்ட நிலைய அங்கத்தவர்கள் அமரர் வீரசிங்கத்தை தலைவராகத் தெரிவு செய்தனர். தலைவராகப் பொறுப்பேற்று நிலையத்தை சிறப்புடன் வழிநடத்திய சமூகசேவையாளன். கலையிலும் சிறப்பாக நாடகத்தில் அபரீத நாட்டம் கொண்டவர். இவரது மூத்த சகோதரர் அல்பிறட்துரைசிங்கம் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்ட "மலர்ந்த வாழ்வு" என்னும் சமூக நாடகத்தை சென்மேரீஸ் முத்தமிழ் மன்றம் அரகேற்றிய போது அமரர் அதில் நீதிபதி பாத்திரமேற்று தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தி ரசிகர்களின் பாராட்டுதலைப்பெற்றார். மேலும் புனித பரலோக அன்னை ஆலயத்தின் முதலாளிமார்சபை உறுப்பினராகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கோயில் அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும், தெரிவு செய்யப்பட்டு ஆலயப்பணிகள் சிறப்புடன் நடைபெற ஒத்துழைப்பினை நல்கினார். கிராமத்தில் உள்ள பழமை வாய்ந்த பாடசாலையை வளர்ச்சி அடையச்செய்ய வேண்டுமென்ற ஆதங்கம் அவரிடம் இருந்தமையால் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் இணைந்து நிர்வாக உறுப்பினராக பணியாற்றினார். இக்கால கட்டத்தில் 1965ம் ஆண்டு அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் யாழ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது நாவாந்துறைப்பாடசாலை அதிபர்களாய் கடமையாற்றிய அமரர் S.நீக்கிலாப்பிள்ளை, அமரர் E.எஸ்தாக்கி ஆகியோருடன் புதிய கட்டிட நிர்மாணப்பணிக்காக தொகுதி நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதியைக்கோரினார்கள். இந்நிதியினைப் பெறுவதற்கு அமரர் வீரசிங்கமும் அதிபர்களுக்குத் துணையாக இருந்து பெற்றுக்கொடுத்தார். ஓலைக்கொட்டிலாக இருந்த பாடசாலை புதிய கட்டிடங்களுடன் பொலிவுபெற்று விளங்கி மாணவர்கள் GCE (O/L) வகுப்புவரை கல்விகற்கும் வாய்ப்பை பெற்றார்கள்.

அமரர் வீரசிங்கம் மனித நேயம் மிக்க பண்பாளனாவர். தம்மிடம் உதவி கோரி வரும் மக்களின் தேவையை அறிந்து செயலாற்றிய சேவையாளன். குறிப்பாகக் கிராமத்தில் வேலை வாய்ப்பில்லாமல் இருந்த படித்த இளைஞர்களுக்கும் வளர்ந்த குடும்பத்தவர்களுக்கும் யாழ் மாநகர சபையிலும், இலங்கைப் போக்குவரத்து சபை (C.T.B) கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் (C.W.E) ஆகிய அரசு சார்பு நிறுவனங்களிலும் அவரவர் தகமைகளுக்கு ஏற்ப வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து அக்குடும்பங்களை வாழ வழி சமைத்த பெருந்தகை என்றால் மிகையாகாது. கிராம மக்களுடனும் அதற்கு வெளியேயும் சமூக - சமய இனபேதம் பாராது சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடனும் அன்புடனும் உறவாடிய பண்பாளன்.

நாவாந்துறைக் கிராமத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சமூக பெரியார்களில் ஒருவாராக தம் வாழ்க்கைக்காலத்தில் பெரும் பகுதியை மக்களின் சேவைக்காக அர்ப்பணித்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கண்ட அமரர் வீரசிங்கம். அமரர் பல அரசியல்வாதிகள்போல் தனக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ சொத்துக்கள் பொருட்கள் சேர்த்து வைக்கவில்லை. பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கறக்கும் பதவிகளில் இருந்த போதும் வாய்ப்பிருந்தும் நேர்மையுடன் செயலாற்றிய பண்பாளன். அமரர் தம் சமூக மக்களில் பலர் நாச்சிக்குடா, பூநகரிப் பிரதேசங்களில் குடியேறி தொழில் வாய்ப்பினைப் பெற்று பொருளாதார முன்னேற்றமடைய உதவலானார். அம்மக்களின் சுகதுக்கங்களில் பங்கு கொள்ளத் தவறவில்லை. இலங்கையில் புதிய அரசியல் தேர்தல் சட்டமன்றங்கள் ஏற்பட்டபோது இளையோருக்கு இடம் கொடுக்க எண்ணி அரசியலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்.

அமரர் வீரசிங்கம் தமது சமூகத்திற்காக நல்லோனாக வாழ்ந்த பெருந்தகை 1995 / 1996 ம் ஆண்டு காலப் பகுதியில் நோய்வாய்ப்பட்டிருந்தார். தமது கண் சிகிச்சைக்காக இந்தியா சென்னை சென்று அதனை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்பினார். கொழும்பில் கடுமையான வருத்தத்தினால் பாதிக்கப்பட்டு 12.07.1996 இல் அமரத்துவமடைந்தார். அமரரின் இறுதி அஞ்சலிக்காக வருகை தந்த கிராம உறவினர்கள். நண்பர்கள் பொதுமக்கள், தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியமை நெஞ்சை விட்டகலாத காட்சியாகப் பதிந்தது

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்" (குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயும் சகோதரர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

## மறைந்த S.J. வீரசிங்கம் (வீரா)

திரு ஜோசப் வீரசிங்கம் அவர்கள் இறையடி சேர்ந்து பதின்நான்கு ஆண்டுகள் நிறைகின்ற இந்நேரத்தில் அவரோடு பழகிய அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

யாழ் நகரில் புகழ்பெற்ற புனித பத்திரிசியார் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த பொழுது அவரும் என்னுடன் கல்வி பயின்றார். படிப்பில் மட்டுமன்று உதைபந்தாட்டம் மற்றும் விளையாட்டுக்களிலும் அவர் வல்லவர். அதன்பின் நான் பத்திரிசியார் கல்லூரியை விட்டு விலகி குருத்துவ கல்விக்காகச் சென்றுவிட்டேன். நீண்ட இடைவெளியின் பின் நான் இளங்குருவாக நாவாந்துறைப் பங்குக்குச் சென்ற பொழுது மீண்டும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கல்லூரியில் பயின்றபோது அவரிடம் காணப்பட்ட ஆர்வமும் சுறுசுறுப்பும் இப்போதும் அவரிடம் இருந்தது. பரலோக மாதா ஆலய பங்குச்சபை உறுப்பினராக ஆர்வத்துடன் செயற்பட்டார். இன்னும் சமூக சேவையிலும் ஈடுபட்டார். அவர் காலத்தில் நாவாந்துறைப் பிரதேசம் பல வகையிலும் முன்னேற்றம் அடைந்ததைக் காணமுடிந்தது. சந்தைக்கட்டிடம், திறந்த வெளியரங்கு என பல்வேறு அபிவிருத்திகள் அவரது முயற்சியினால் நடைபெற்றன.

சமய சமூகப் பணிகளோடு அரசியல் ஈடுபாடும் அவருக்கிருந்தது. தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து மிகத் தீவிரமாக செயற்பட்டார். அக்கட்சியின் 'தூண்" என்று சொல்லலாம். அவரது பொதுப்பணி ஆர்வம் மேலும் வளர்ந்தது. 1968 முதல் 1976 வரை யாழ் மாநகர சபை உறுப்பினராக இருந்து பின்னர் பிரதி மேயராகவும் பணியாற்றினார்.

1955ம் ஆண்டு இல்லற வாழ்வில் புகுந்த இவருக்கு ஆறு பிள்ளைகள் மூன்று ஆண்கள், மூன்று பெண்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது கனடாவில் நலமாக வாழ்கின்றனர். தனது இல்லறப் பொறுப்புக்களையும் செவ்வனே செய்துள்ளார். இவ்விரங்கல் நூலை வெளியிடுவதில் மும்முரமாக உழைத்த மகள் லோறன்சியா வீரசிங்கத்திற்கு எனது நன்றி.

நிறைவாக வாழ்ந்து, நிலைத்த பணி செய்து, நினைவில் நீங்காது வாழுகின்ற திரு. ஜோசப் வீரசிங்கம் அவர்களின் இறைபதம் அடைந்த பதினாலாவது ஆண்டு (12.07.2010) நினைவு கூரலில் நாமும் இணைந்து கொண்டு அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக இறையருள் வேண்டி இறைஞ்சுகின்றோம்.

**யோசேப் கிங்சிலி சுவாம்பிள்ளை**
மட்டு நகர் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் சிறந்த சமூக சேவையாளர்

நாவாந்துறைப் பங்கின் பங்குக் குருவாக 1967 ஆம் ஆண்டு மே மாதத்தில் நான் பொறுப்பேற்ற நாளிலிருந்து அமரர் எஸ்.ஜே.யோசப் வீரசிங்கம் அவர்களை நான் நன்கு அறிந்துள்ளேன். இவர் யாழ் நகரில் மிகப் பிரபல்யமான புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றவர். அந்த நாட்களில் உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார். இவ்வாறு தாம் கல்வி பயின்ற கல்லூரிக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்தார். இவர் ஓர் இளைஞனாய் இருந்தபோதே அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். 1968ஆம் ஆண்டில் யாழ் மாநகரசபையின் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1972 ஆம் ஆண்டில் யாழ் மாநகர சபையின் உதவி மேயராகவும் பதவி வகித்தார்.

அத்துடன் அமரர் வீரசிங்கம் தமது பங்கிலும் ஆர்வத்துடன் சேவை செய்தார். நாவந்துறை தூய பரலோக மாதா ஆலயப் பங்குச்சபையிலும் ஓர் உறுப்பினராகப் பணியாற்றினார். இந்த ஆலய வளாகம் தாழ்வானபடியால் மாரிகாலத்தில் அது வெள்ளக்காடாகக் காட்சி தரும். எனவே இவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மாநசர சபைமூலம் இந்த வளாகத்தில் மண் போட்டு வீதிமட்டத்திற்கு அதை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்தார். அதனால் இப்பங்கின் இளைஞர் விளையாடுவதற்கும் வசதி செய்து கொடுத்தார்.

மேலும் அமரர் வீரசிங்கம் சென் மேரிஸ் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் கடல் அட்டைச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும் அரும் பணியாற்றினார். இவ்வாறு இவர் ஓர் சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்ந்தார்.

**அருள் திரு க.இ.மே.யோசப்**
அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் வரலாற்று நாயகன்

திருவாளர் ஜோசப் வீரசிங்கம் அவர்கள் அமரராகி 14வது ஆண்டில் குடும்பங்களும் நண்பர்களும் மக்களும் ஒன்றாகக் கூடி அவருக்கு நினைவஞ்சலி செலுத்துவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய வாழ்வு மக்களுக்காக நண்பர்களுக்காக, குடும்பங்களுக்காக எப்போதும் இருந்தது. இவர் இலங்கை நாட்டில் யாழ் நகரின் மேற்குக்கரையோரமாக இயற்கை அழகில் அமைந்துள்ள நாவாந்துறை என்ற நாவாயூரில் 1934ம் ஆண்டு பிறந்தவர். அமரர் வீரசிங்கம் இந்த ஊரின் ஓர் சரித்திர புருஷன், வரலாற்று நாயகன். அன்றைய வரலாற்று சூழலில் அவருடைய தன்மையில் அவர் சாதித்தது பல.

அவருடைய வாழ்வைப்பற்றி கூறவேண்டுமாயின் அது இரத்தினச்சுருக்கமாக அவருடைய பெயரிலேயே அமைந்துள்ளது. "ஜோசப் வீரசிங்கம்". ஜோசப் என்ற பெயர் பைபிளில்(விவிலியத்தில்) புதிய ஏற்பாட்டில் புனித சூசையப்பரை குறிக்கும். புனித சூசையப்பரின் வாழ்வு பைபிளில் கிறிஸ்துவின் பிறப்பின் பகுதியில் கூறப்பட்டுள்ளது. அதில் அவர் "நீதிமான்" இறைவனின் திட்டத்திற்கு என்றும் பணிந்து வீர வாழ்வு வாழ்ந்தவர். மனைவி மரியாளை மிகவும் அன்பு செய்தவர். கிறிஸ்துவின் பிறப்பிற்கு முழு ஆயத்தங்களையும் செய்தவர். குறிப்பாக தனது துணிவினாலும் வீரத்தினாலும் குழந்தை யேசுவை பல்வேறு ஆபத்துக்களில் இருந்து காத்தவர். தனது குடும்பத்தை தனது உழைப்பால் நன்றாக வாழ வைத்தவர். அதேபோல் அமரர் வீரசிங்கம் அவர்களும் மக்களுக்காக, தனது குடும்பத்தை காப்பதற்காக, பிள்ளைகளை நல்ல நிலையில் வாழ வைப்பதற்காக பல்வேறு தியாகங்களை செய்தவர். நாவாயூர் மரியன்னை ஆலய வளர்ச்சிக்காக முன்னின்று செயலாற்றியவர். சமயத்தலைவர்களோடும் மிகவும் மதிப்போடு பழகியவர்.

"வீரசிங்கம்" என்ற பெயரை நாம் அலசும் போது இவரின் வரலாறு ஒரு வீர வரலாறாகவே திகழ்ந்தது. இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் மிகவும் துணிவு மிக்கவர்கள். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். துரைசிங்கம், பாலசிங்கம், வீரசிங்கம், அமல சிங்கம் என்று சிங்கங்கள்

போன்று துணிவு மிக்க குழந்தைகளைப் பெற்று அவர்கள் வாழ்வு சமூகத்திற்கு எப்போதும் எதையும் சாதிக்கும் துணிவை, திறனை கொடுக்கக்கூடியதாகவும்,அவர்களின் வழியாக சிங்கத்தினுடைய துணிவு கொண்டு எங்கும் எதையும் செயல்படுத்தி வெற்றிகாணும் சந்ததி உருவாக வேண்டும் என்றும் அன்றே எதிர்பார்த்தார்கள்.அதை நாம் இந்த சிங்கங்களின் வாழ்வில் காணக்கூடியதாக இருந்தது.அவர்கள் எப்போதும் துணிந்த மனநிலையில் வாழ்ந்தார்கள்.

அமரர் வீரசிங்கம் அவர்களின்.வாழ்வை இரைமீட்கும் போது,அவர் இனப்பற்றும், மொழிப்பற்றும், தீவிர உழைப்பும், அயராத முயற்சியும், நீதிவழி நின்று அநீதியை எதிர்த்துப்போராடும் வீர மனப்பக்குவமும் இவரோடு என்றும் குடிகொண்டது என்று கூறலாம். இவர் பிறந்த 1934 இன் சூழலில் இவரின் ஊரின் பெரியார்கள் வெளியே அறியப்படாதவர்களாக, எழுத்துலகுக்கோ, வரலாற்று குறிப்புகளுக்கோ புரியப்படாதவர்களாக, அதேவேளை தங்களது சமய சமூகப்பின்னணியில் நேர்மையோடும்,கடமை கண்ணியத்தோடும் தமக்கே உரிய கலை கலாச்சாரத்தை பேணிக்காப்பவர்களாகவும் வாழ்ந்தார்கள்.குறிப்பாக சமய வாழ்வில், இறைபக்தி வாழ்வில் சிறந்தோங்கி விளங்கினார்கள் என்பதற்கு வரலாற்றுக் குறிப்புகள் உண்டு.

அமரர் வீரசிங்கம் அவர்கள் உயர்ந்த திடகாத்திரமான தலைவனுக்குரிய உடலமைப்பும் வலிமையும் கொண்டவர். ஊரின் உயர்வுக்காக அனைத்துத் துறைகளிலும் உழைத்தவர்.

விளையாட்டுத்துறையில் நாவாயூர் என்ற ஓர் முன்னணி முத்திரை பதித்து. இவர் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்தார். இவரின் விளையாட்டுத்திறமையும் பந்தை ஓங்கி அடிக்கும் வேகமும் பார்போர் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைப்பந்தாட்ட வரலாற்றிலேயே "கோணர் கிக்" மூலமாக அடிப்பதைத் தவிர வேறு யாரிலும் பந்து படாமல் 'கோல்" போவடுது என்பது மிகவும் அபூர்வம்.ஆனால் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் (அன்று முத்த வெளி என்று அழைக்கப்பட்டது.)ஒரு பெரிய உதைப்பந்தாட்டப்போட்டியில் அமரர் வீரசிங்கம் அவர்கள் அடித்த "கோணர் கிக்" வேறு யாரிலும் படாமல் "கோல்" போய் பெரும் வெற்றியை கொடுத்தது.அத்தகைய,சிறந்த, நுட்பமான, பாராட்டுக்குரிய விளையாட்டு வீரனாக அவர் திகழ்ந்தார்.

அவர் தெருவிலே நடந்து வந்தாலும் மைதானத்தில் விளையாட்டு வீரனாக நின்றாலும் அவரது தோற்றமும் வீரமும் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் வன்மை படைத்தது.

நாவாயூர் தொகுதியில் இருந்து யாழ் மாநகரசபை உறுப்பினராக (M.M.C) இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவி மேயராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.இவரின் அரசியல் சாணக்கியம் யாழ் அரசியலில் பல முக்கிய திருப்பங்களுக்கும் யாழ் நகரின் முன்னேற்றத்திற்கும் வழிவகுத்தது. அன்றைய காலத்தில் தனது ஊரை,சமூகத்தை யாழ் அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி இலங்கை அரசின் மந்திரிகளும் தேடிவரும் அளவிற்கு உயர்த்திய சமூகத் தொண்டன். ஊரில் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றியவர்.அன்றைய காலகட்டத்தில் காவல்த்துறையிலோ அல்லது வேறு எந்த அரசுத்துறையிலோ அவருக்கு ஒரு சிறப்பான பெயர் இருந்தது.அக்காலத்தில் எதையும் சாதிக்கும் சாதனையாளனாக விளங்கினார்.

1992ம் ஆண்டு நாவாயூர் புனித பரலோக அன்னை ஆலயப்பொன்விழா ஆண்டு.இதை ஊர் மக்கள் பக்தி நிறைந்த நன்றி ஆண்டாகக் கொண்டாடினார்கள்.அப்போது நான் இந்தியாவில் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை என்ற இடத்தில் அமைந்துள்ள "புஷ்பவனம்" ஆசிரமத்தின் அதிபராக பணியாற்றிய காலம்.இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தனது கண் சிகிச்சைக்காக இலங்கையில் இருந்து இவர் இந்தியா வந்து எமது மடத்தில் ஒருசில நாட்கள் தங்கி இருந்தார். அந்நாட்களில் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாற்கு, பீலிக்ஸ் அவர்களின் துறவற வாழ்வின் 50வது வருடத்தைப்பூர்த்தி செய்த விழாவின் போது முன்னாள் யாழ் ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகையுடன் S.J.வீரசிங்கம் (வீரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் உண்டான நோவுகளின் மத்தியிலும் அவர் என்னோடு ஊரின் ஆலய பொன்விழா நிகழ்வுகள் ஆகஸ்ட் ஆவணி 15ம் திகதி நடைபெறவுள்ளது பற்றியும் அப்போது வெளியிடப்படவுள்ள பொன்விழா மலர் பற்றியும் எடுத்துக்கூறி, நான் அதற்கு ஆசியுரை கட்டாயம் எழுதவேண்டும்.என்று எழுத வைத்து எடுத்துச்சென்று வெளியிட்டதோடு ஆலய பொன்விழா நிகழ்வுகள் சிறந்த முறையில் அமைய உறுதுணையாக இருந்தார்.

அவருடைய உரையாடலில் "சமூக வளர்ச்சிக்கு கல்வி மிகவும் முக்கியம்.சமூகவளர்ச்சி கல்வியில்தான் தங்கியுள்ளது. என்று அடிக்கடி வலியுறுத்திக்கூறினார். தனது குடும்பத்தை மிகவும் அன்பு செய்து வந்தார்.தனது பிள்ளைகளும் வெளிநாடு சென்று நன்றாக உழைத்து முன்னேற வேண்டும் என்று ஆசித்தார்.அந்தக்கனவை நனவாக்கினார்.இன்று அவரின் மனைவியும் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் "கனடா" நாட்டில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

அவரது ஆன்மா இறைவனில் என்றும் இன்பம் காணவும்,அவர் ஆசித்த சமூக வளர்ச்சித் திட்டங்கள் வளர்ச்சி பெறவும், இறைவனின் ஆசி மக்களுக்கும் அவரின் குடும்பத்திற்கும் தொடர்ந்து கிடைக்கவும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

**வண. அ. ம. ஸ்ரீபன், செ. தா. சபை**
உயர் தலைவர்
செபமாலை மாதா சபை
கார்மெலறம்
பெங்களூர்-560 035
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் 14ஆம் ஆண்டின் நிறைவின் நினைவு.

பாசம்மிகு குஞ்சிஐயா, நீங்கள் மண்ணை விட்டு மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடினாலும், நீங்கள் மனமாற மக்களுக்கு செய்த பணி எம் மனக்கண் முன் நிற்குதய்யா, பெற்ற பிள்ளையும் சரி மற்றோர் பிள்ளையும் சரி படிப்பறிவில் முன்னேற நீர் வழிவகுத்தீர். கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவிக்கரம் கொடுத்தீர்.

சமாதான நீதிவானாக இருந்து மக்கள் துன்பம் கண்டு துயர் துடைத்தீர். உமது சொல்லுக்கும், செயலுக்குமேற்ப வீரசிங்கம் என்ற பெயருடன் வாழ்வில் வீறு நடைபோட்டீர்.

மக்களின் குறைகளை மகிழ்வுடன் நீ ஏற்று உள்ளக் குமுறல்களுக்கு உடனேயே தீர்வு கண்ட செம்மலே உம் பணியை நாம் மறப்பது எப்படி? பெற்ற பிள்ளைகளைப் போல் எங்களையும் அரவணைத்தீர். பாசம் உங்களின் உடன் பிறப்பாயிற்று. நேசமுடன் உதவி செய்யும் உறுதி கொண்ட உங்கள் அன்பு வழி. நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாதையா.

அன்புடன்
பெறா மகள்
**அருட் சகோதரி**
**மேரி எமலின் ஆசீர்வாதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகளின் சமர்ப்பனம்

அன்பாலே ஏழை மக்களின் இதயத்தைக் கவர்ந்த எமது சிறிய தந்தையின் 14வது ஆண்டின் நினைவு தினத்தில் அவரைப் பற்றிய எனது சிந்தனைத் துளிகளை சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறேன்.

யோசேப் வீரசிங்கம் எனது சிறிய தந்தை என்றாலும், எமது தந்தையைப் போன்றே, எம்மீது பாசம் கொண்டவர். தன்னைச் சார்ந்தவர்கள், உறவினர்கள், ஊர் மக்கள் யாவரையும் அவர் அன்போடு அரவணைத்து தன்னால் முடிந்த அளவு எல்லோருக்கும் நல்லது செய்த உத்தம ஆத்மா. யாழ். மாநகரசபை உறுப்பினராக இருந்த காலத்தில் தனது செல்வாக்கை தனக்காக, தன் குடும்பத்திற்காக அல்லாமல் ஊர்மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தி இன்பம் கண்டவர். இருட்டில் இருந்த மக்களிற்கு மின்சாரம் கிடைக்க வழி செய்தவர். குடிநீர் இன்றி அல்லல்பட்டவர்களுக்கு குழாய் நீர் பெற்றுக் கொடுத்தார். ஏழை மக்களின் அன்றாடத் தேவைகளைக் கூட அவர் நிறைவேற்றுவதில் அக்கறை காட்டினார். ஊரில் பல குடும்பத்தவர்களுக்கு அவரவர் தகமைக்கேற்ப வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து மக்கள் சந்தோசமாய் வாழ வழிசமைத்த பெருமகன். யேசு எமது சிறிய தந்தையை கருவியாகக் கொண்டு ஏழை மக்களிற்கு கருணை காட்டினார் என்றே எல்லோரும் நம்பினார்கள்.

சீனி ஐயா உங்கள் நினைவு வருகின்றபோதெல்லாம் என் மனம் நிறைவு கொள்ளும். கண்கள் குளமாகும். சாதி, குலம், பதவி அந்தஸ்து பாராது எல்லோரையும் சமமாக நினைக்கும், உங்கள் பெருந்தன்மை, சகோதரர்கள் மீது கொண்டிருந்த பாசம் சிறப்பாக எங்கள் தந்தை மீது நீங்கள் கொண்டிருந்த அன்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும் இதை நினைக்கும் போதும் மெய் சிலிர்க்கின்றது. சகோதர பாசத்திற்கு எடுத்துக் காட்டாக நீங்கள் இருவரும் விளங்கினீர்கள். அந்த ஒற்றுமையும் பாசமும் எங்களை ஈர்த்து விட்டது. சீனி ஐயா, உங்கள் இருவரதும் பிரிவுத் துயரால் இன்றும் கண் கலங்கி நிற்கின்றோம்.

தங்கள் ஆசீர்வாதத்தை
இரந்து நிற்கும்
அன்பு மகள்
**அருட்சகோதரி**
**மேர்சியா பாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள் இறப்பதில்லை

நாவாயூர் மண்ணில் பிறந்த
நல் முத்தாகிய நீங்கள்
அன்பின் அடையாளமாகவும்
அறிவிற்கு அரசனாகவும்
அமைதியின் அன்பராகவும்
வறுமையில் வள்ளலாகவும்
வாழ்விற்கு வழிகாட்டியாகவும்
விடியற்காலையின் விடி விளக்காகவும்
திகழ்ந்தீரையா

இந்தப் பாரினிலே தவழ்ந்து வந்த
பொன்னான நாள்தான்
உங்கள் பிறந்த நாள் - ஐயா
உங்கள் புன்னகை பூத்த திருமுகம்
எந்நாளும் எம் இதயத்தை விட்டு நீங்காது
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப்
பிரியாதையா
ஆண்டவரின் சந்நிதானத்தில் உங்கள் ஆன்மா
அமைதியுடன் துயில் கொள்ள
கருணை நிறைந்த ஆண்டவனை வேண்டி
நிற்கிறோம்.

உங்கள் அன்பு மகள்
அருட்சகோதரி
**வசந்தினி டானிசியஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சிறந்த நண்பன்

யாழ்ப்பாண மாநகரில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழ்ந்து வரும் நாவாந்துறைப் பரப்பளவில் சிறிதாக இருந்த காரணத்தால் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த அயல் வட்டாரத்தில் ஒரு பகுதியாக இருந்து வந்தது. இந்த நிலமை நாவாந்துறை மக்களின் தனித்துவத்துக்கு மதிப்புக் கொடுக்காதபடியாலும், அம்மக்களின் பல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வசதியாகவும், நாவாந்துறை ஒரு யாழ். மாநகர சபை வட்டாரமாக அமைய வேண்டுமென்ற கோரிக்கையை மென்மேலும் வலுவடைந்தது.

சமூக முன்னேற்றத் தொண்டுகளில் முன்னணி வகித்த நண்பர் வீரசிங்கம் தனி வட்டாரம் அமைவதற்கான முயற்சிகளில் தீவிரமாக உழைத்தார். அதில் வெற்றியும் கண்டார். 1968ம் ஆண்டு நடந்த யாழ் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற்று, சமூக நலன்களுக்காக உழைத்த தோழரும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும் தான் நண்பர் வீரா. இவர் சிறந்த உதைபந்தாட்ட இடதுகால் முன்னணி வீரனாய்த் திகழ்ந்தார்.

கந்தர்மடம் வட்டாரத்தில் மீண்டும் போட்டியிட்டு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட என்னை யாழ் மாநகரசபை முதல்வர் தெரிவில் தான் ஆதரிப்பதாக நண்பர் வீரா தெரிவித்தார். அவருடைய உறுதியான நிலைப்பாட்டால் ஒரு வாக்கு அதிகமாகப் பெற்று நான் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டேன். அன்றுமுதல் நாங்கள் இருவரும் உற்ற நண்பர்களாக விளங்கினோம். தன்னுடைய வட்டாரத்தில் அவசியமாகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் பற்றியும், யாழ் மாநகர சபை மட்டத்தில் மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் பற்றியும், அவர் என்னுடன் ஆலோசிப்பார். எனது அதிகாரத்துக்கு உட்பட்ட சகல விடயங்களிலும் நான் அவருக்கு உதவி செய்தேன். யாழ் மாநகர ஊழியர் நியமனம், சுகாதார சேவை அபிவிருத்தி வீதி ஒழுங்கைகள் செப்பனிடுதல், மின்விளக்குகள் பொருத்துதல், சந்தைக் கட்டிடங்களைப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு விடயங்களில் அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குடியிருப்புக்கள் நெருக்கமாக இருந்த காரணத்தால் சுகாதார சேவைகள் சீராக அமையவேண்டும் என்பதற்காக அவர் மிகுந்த திறமை வாய்ந்த சுகாதார மேற்பார்வையாளரைத் தனது வட்டாரத்துக்குப்
பெற்றுக் கொண்டார். தனது வட்டாரத்தில் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட இருப்பதாலும், அதற்கு அதிக மின்சாரம் தேவைப்படுகிறது என்று வீரா கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் Three way Line போட்டு மின் கம்பங்கள் நாட்டி அதிக மின்சாரம் வர வழி சமைத்துக் கொடுத்தேன். நானும் நண்பர் வீராவும் நாட்டின் நடப்புக்கள் பற்றியும், நாட்டின் அரசியல் முன்னேற்றங்கள் பற்றியும், தனது வட்டார முன்னேற்றங்கள் பற்றியும், என்னுடன் பகிர்ந்து கொண்டவர். அவற்றில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன். தனது வட்டாரத்தில் தபால் அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டும் என்றும், அமரர் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் தொடர்பு கொண்டு தனது வட்டாரத்தைச் சேர்ந்த சிறந்த தகமையுள்ள இளைஞர் ஒருவருக்கு தபால் அலுவலகர், நியமனமும் பெற்றுக் கொடுத்து, தபால் கந்தோரையும் அமரர் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைக் கொண்டே திறப்புவிழா செய்து வைத்தும், அதே வட்டாரத்தில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு தேவை என்பதை மனதில் கொண்டு நெசவுத் தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்த பெருமை நண்பர் வீராவையே சாரும். நாவாய் மண்ணுக்கும் அம்மண்ணின் மக்களுக்கும் வீரா ஆற்றிய சேவையை என்னால் மறக்க முடியாது. நாவாய் மண்ணில் வீராவால் புதிய நூலகம் கடற்கரை வீதியில் அமைத்தும் மக்கள் தம் வாசிப்பு அறிவை வளர்க்க உதவிய பெருமகன் நண்பன் வீரா. இளம் வயதிலேயே சமூக சேவையின் தான் பெற்ற அனுபவத்தை வைத்து சனசமூக நிலையங்கள் சீராக இயங்குவதற்கு வழிவகை செய்தார். விளையாட்டு வீரரான வீரசிங்கம் விளையாட்டுத்துறையை மேம்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்தார். உதைப்பந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் புனித பரலோகமாதா தேவாலய முன்றலில் புனித மரியாள் விளையாட்டு மைதானத்தை வடிவமைத்துக் கொடுத்தார். புனித மரியாள் விளையாட்டு கழக நடவடிக்கைகளில் அக்கறையுடன் செயல்பட்டார்.

தனது வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகமை உள்ளவராக இருந்தும் வேலை வாய்ப்பின்றி இருப்பதைக் சுட்டிக் காட்டி அவருக்கு மாநகர மன்றில் தகுதியான நியமனம் ஒன்று வழங்குமாறு நண்பர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மன்றின் நடைமுறை விதிகளை சற்றுத் தளர்த்தி அவரை எழுதுவினைஞராக நியமித்தேன். சில வருடங்களுக்குப்பின் அவர் எனது சகாவாக யாழ் மாநகரில் சட்டத்தரணியாக தொழில் புரிந்து வந்தார். இன்று அவர் புலம் பெயர்ந்து வெளிநாட்டில் பேரும் புகழுடனும் சீரும் சிறப்புடனும் விளங்கி வருகின்றார்.

யாழ் மாநகரில் சிறுவர்கள் பொழுதுபோக்குவதற்கு வாய்ப்பில்லாத நிலமையை உணர்ந்து சிறுவர் பூங்கா ஒன்றை சுப்பிரமணிய பூங்காவில் ஒரு பகுதியாக அமைக்க முற்பட்ட பொழுது நண்பர் வீரா முழு ஆதரவையும் தந்து, வெவ்வேறு சாதனங்கள் நிர்மாணிப்பதற்கு ஆலோசனை கூறியதுடன், சிறுவர் பூங்கா திறப்பு விழா சிறப்பாக இடம் பெறுவதற்கு அவர் முன்னின்று உழைத்தார்.

தனது வட்டாரத்தில் மக்கள் குடியிருப்புக்களைப் பெருக்குவதற்குப் போதிய காணி நிலம் இல்லாத நிலமையைச் சுட்டிக் காட்டி காக்கைதீவுப் பக்கமாகக் கடலேரியில் குப்பை மேடாக இருந்த நிலத்தை செப்பனிட்டு குடியிருப்புக்களைக் கட்டியெழுப்ப வசதி செய்து தருமாறு விடாப்பிடியாக அவர் விடுத்த கோரிக்கைகளை ஏற்று நான் கொழும்பிலிருந்து தேவையான இயந்திரங்களை வரவழைத்து அந்தப் பணிகளையும் நான் நிறைவேற்றிக் கொடுத்தேன். இன்று அந்நிலத்தை "**வீரசிங்கம் குடியிருப்பு**" என்று அழைக்கக் கூடிய விதத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நாவாந்துறைச் சந்தைக் கட்டிடத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்கான கடை இல்லை என்ற குறையை அவர் எடுத்துக் கூறி அக்குறையையும் நீக்கித் தருமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அதுவரை காலமும் சின்னக்கடைச் சந்தையில் மட்டும் பெறக்கூடியதாக இருந்த மாட்டிறைச்சியை நாவாந்துறைச் சந்தையிலும் பெறக் கூடியதாகச் செய்தோம்.

எங்களுடைய பதவிக் காலங்களில் பல பிரமுகர்கள் விசேடமாக இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு V.V. கிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970ம் ஆண்டு இந்தியாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் சபையில் இருந்த இந்தியாவின் முன்னாள் முதல் பிரதமரும் ஆசிய ஜோதியுமான பண்டித் ஜவஹர்லால், நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டித் அவர்களும் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலமும், அமரர் மேயர் நாகராஜாவும், அமரர் S.J வீரசிங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், ஐக்கிய நாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திருமதி விஜயலட்சுமி பண்டிற் அவர்கள், தமிழ்நாட்டின் அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் ஆகியோர் வருகை தந்தனர். அவ்வேளையில் மன்ற உறுப்பினர்களுடன், இடம்பெற்ற உரையாடல்களில் நண்பர் வீரா ஆவலுடன் பங்குபற்றி அவர்களோடு அளவளாவி மகிழ்ந்தார்.

நண்பர் வீரசிங்கம் அதீத மதப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் நிரம்பியவராக விளங்கினார். புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற பூசைகள், விசேட திருவிழாக்களில் அவருடைய அழைப்பின் பேரில் நானும் பங்கு பற்றினேன். பங்குத் தந்தைக்கு என்னை அறிமுகம் செய்து வைத்து பல விடயங்கள் பற்றியும் உரையாடினார். தனது மூத்தமகள் லோறன்சியாவையும் அழைத்துக் கொண்டு எங்கள் குடும்பத்தினரை வந்து சந்தித்து புத்தாண்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். குடியரசுத் தலைவரை எங்கள் இல்லத்திற்கு அருகாமையில் வைத்து வரவேற்ற பொழுது மகள் லோறன்சியாவும் தந்தையாருடன் வந்து கலந்து கொண்ட காட்சி எனது மனத்திரையில் தெரிகின்றது.

அமரர் வீரசிங்கம் என்னுடன் அந்நியோன்னியமாகவும் மிக்க அன்புடனும் பழகிய ஒரு அருமை நண்பர் அன்னாருடைய மறைவு மிகுந்த கவலையைத் தந்தது. அன்னாருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

இங்ஙனம்
**மறைந்த சின்னத்தம்பி நாகராஜா**
சட்டத்தரணி, யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர்,
அமெரிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலில் வீரன்

அமரர் திரு. எஸ். ஜே. வீரசிங்கம் அவர்கள் எனது சக பள்ளிமாணவராகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அரசியல் செயற்பாட்டாளராகவும், யாழ் மாநகர சபையின் உறுப்பினராகவும் உதவி மேயராகவும் எனக்கு நன்கு தெரியும்.


திரு. வீரசிங்கத்தின் வாழ்வில் பொது நலனே முக்கிய அம்சமாக இருந்தது. யாழ் மாநகர சபையில் அவர் அங்கம் வகித்தபோது அவரது கடின உழைப்பும் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அவரது அக்கறையும் அவருக்கு நன்மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் விளைவாக அவர் யாழ் மாநகர சபையின் உதவி மேயராக தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ் தேசிய இனத்தின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் அழிக்கும் முயற்சியில் யாழ் பொதுசன நூலகத்தை சிறிலங்கா ஆயுதப் படையினர் எரித்தபோது அதைப் புனரமைப்பதிலும், திரு. வீரசிங்கம் கடினமான உழைத்தவர். யாழ் மாநகர சமூகத்திற்காக சுயநலமின்றி உழைத்த திரு. வீரசிங்கத்தின் மறைவு அவரால் நேசிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு மட்டுமல்ல. யாழ் மாநகர மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
**இராசா விஸ்வநாதன்**
சட்டத்தரணி
அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970ம் ஆண்டு யாழ். மாநகர முன்றலில் முன்னாள் யாழ் நகர முதல்வர் அல்விரட் துரையப்பாவும் அமரர் S.J.வீரசிங்கமும் சக உறுப்பினர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர ஆணையாளர்
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

ஆணையாளர் / Commissioner : 222 2744
அலுவலகம் / Office : 222 2275
தொலைநகல் / Fax : 222 2334

MUNICIPAL COMMISSIONER
MUNICIPAL OFFICE
JAFFNA

எனது இல / My No :
உமது இல / Your No :
திகதி / Date :

# முன்னாள் யாழ் மாநகர ஆணையாளரின் செய்தி

நாவாந்துறை வட்டார அங்கத்தவராக அமரர் எஸ். ஜே. வீரசிங்கம் அவர்கள் தெரிவாகியிருந்த நேரத்தில் நானும் யாழ்ப்பாண மாநகரசபையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அதன் காரணமாக அவரைப் பற்றி அறியவும், அவருடன் பழகவும் வாய்ப்புக் கிட்டியது.

அமரர் அவர்கள் நாவாந்துறையில் பிறந்து, அவ்வூரிலேயே ஆரம்பக் கல்வியை முடித்து, பின்னர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்திருந்தார்.

1968ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட அமரர் வீரசிங்கம் அவர்கள், 1972 ஆம் ஆண்டு மாநகரசபையின் துணை முதல்வராகவும் பணியாற்றியமை அவரது திறமைக்கும், ஆளுமைக்கும் கிடைத்த அரியதொரு சம்பவமாகவே கருதமுடியும்.

தமிழினத்தின் ஆரம்பகால அரசியல் கட்சியாகத் திகழ்ந்து, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் 1952 ஆம் ஆண்டு முதல் அங்கத்துவம் பெற்று, அக்கட்சியின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார்.

இவர் இளைஞனாக இருந்த காலத்தில், விளையாட்டுத் துறையில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார். சமூக சேவைக்கென தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றிய அமரர், சமாதான நீதிபதியாக, சென்மேரிஸ் சனசமூக நிலையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராக, கடலட்டைச் சங்கத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக பதவி வகித்து தமது மக்களுக்கும், மாநகரசபைக்கும், நாட்டு மக்களுக்கும் தொண்டாற்றியமையை அவ்வூர் மக்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள்.

தமது வாழ்நாளின் பெரும்பகுதியை மக்கள் சேவைக்கென அர்ப்பணித்து மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த பெருமகனின் சேவையை இந்நேரத்தில் நாம் நினைவுகூருவது மிகவும் பொருத்தமானதென்றே கருதுகின்றேன்.

அமரரின் சேவையும், பொதுத்தொண்டும் பெருமையுடன் எம் அனைவராலும் நினைவுகூரத்தக்கதாகும்

**சீ.வீ. கே. சிவஞானம்**
முன்னால் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E-mail – gakili@sltnet.lk
மாவட்டச் செயலகம் – கிளிநொச்சி DISTRICT SECRETARIAT - KILINOCHCHI

My No. ................ Your No. ................ Date................

# தன்னையே உருக்கி தனது ஊரவரும் அயலவரும் வாழ உழைத்த பெருந்தகை அமரர் நாவாந்துறை வீரசிங்கம்

அமரர் திரு. எஸ். ஜே. வீரசிங்கம் அவர்களை எனது இளமைக் காலத்திலிருந்தே யான் அறிவேன். எனது இரத்த உறவினர்கள் அதிகம் வாழும் பல்லவராயன்கட்டிலுள்ள குமுழமுனைக் கிராமத்துக்கு அடிக்கடி வருகை தருவார். அத்துடன் எனது மாமனார் திரு. நாகலிங்கம் தம்புவின் கொக்குவில் வீட்டிலும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.

தூய வெள்ளை நிற ஆடையும், நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாத நெஞ்சமும் எதனையும் வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் தன் கருத்தை உறைக்கச் சொல்லும் ஆற்றல் உள்ள உயர்ந்த மனிதனாகவே, பார்க்கின்றேன். இவர் என்னைச் சந்தித்த போதெல்லாம் தனக்காகக் கதைக்கவில்லை. தனது குடும்பத்துக்கு உதவி கேட்கவில்லை. தனது ஊரவர்களது முன்னேற்றத்திற்காகவே பல கோரிக்கைகளை முன்வைத்தார்.

இவரது கோரிக்கைகளில் எனது நாவாந்துறையைச் சேர்ந்த 90 குடும்பங்கள் இருக்க இடமின்றிக் கடற்கரையிலே இருக்கின்றார்கள். இவர்கட்கு நிரந்தரமான காணியும் வீடும் கட்டி ஒரு குடியேற்றமாக ஆக்கிச் சகல வசதியும் செய்து தருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரினார். அவரது கோரிக்கைப்படி 120 குடும்பங்களுக்கு அரச காணி வழங்கப்பட்டு தெருக்களும் அமைக்கப்பட்டுவிட்டது. கிணறுகள் பொது மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. 120 பேருக்கு நிரந்தர வீடும், கழிப்பறை வசதிகள் மட்டுமல்லாமல் துறைமுக வசதியும் அமைக்கப்படவுள்ளது. அமரர் உயிருடன் இருந்திருப்பின் பெருமகிழ்வடைந்திருப்பார். இக்குடியேற்ற மக்கள் இக்குடியிருப்புக்கு அமரர் வீரசிங்கம் குடியிருப்பு என பெயர் வைக்க வேண்டும் என விரும்புகின்றேன்.

இவர் தனது இளமைக் காலத்திலிருந்தே பல பதவிகளை வகித்தவர். யாழ் மாநகர சபையின் உறுப்பனராக யாழ். மாநகர சபையின் உதவி மேயராகவும் கடமையாற்றி மக்கள் தொண்டாற்றினார்.

அத்துடன் வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு நெறியாளர் குழு உறுப்பினராக இருந்து பெரும் பணியாற்றினார்.

இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரரும் சமாதான நீதவானும் கூட. பல பொது மன்றங்களில் உறுப்பினராக இருந்து மக்களுக்கு அரும்பாடுபட்டார்.

இவரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல அவர் வாழ்ந்த சமூகத்திற்கே பேரிழப்பு. எதற்கும் அஞ்சாது சமூக நீதிக்காக குரல் ஒலி ஓய்ந்தாலும் அவர் செய்த பணியும் அவரது வாழ்வும் எமது இளம் சமுதாயத்துக்கு ஒரு வழி காட்டியாகும்.

அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**தி. இராசநாயகம்,**
அரசாங்க அதிபரும்
மாவட்டச் செயலாளரும்,
கிளிநொச்சி மாவட்டம்,
ஆர்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1969ம் ஆண்டு சிறுவர் பூங்கா அமைத்து திறப்பு விழா
நடந்தபொழுது அமரர் வீரசிங்கமும் மகள்மாருடன் முன்னாள் மேயர் நாகராஜாவும்,
முன்னாள் யாழ் உறுப்பினர் அந்தோனியாசுவாமிநாதனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. எஸ்.ஜே. வீரசிங்கம் (வீரா)

கடந்த 14 வருடங்களுக்கு முன் அமரரான யாழ் மாநகர சபையின் முன்னைநாள் உதவி முதல்வராகவும் மாநகர சபையின் நாவாந்துறை மக்களின் பிரதிநிதியாக இருந்தவருமான திரு. வீரசிங்கம் அவர்களை நினைவு கூரும் இவ்வேளையில் அவர் ஆற்றிய சமூக பணிகள் சேவைகள் அளப்பரியது. அவர் யாழ் மாநகர சபையின் உறுப்பினராக 1968ஆம் ஆண்டு நாவாந்துறை மக்களால் தெரிவு செய்யப்பட்டார். அதன் மூலம் அவர் யாழ் மாநகரத்தின் அபிவிருத்திக்கும் தன்னைத் தெரிவு செய்த நாவாந்துறை மக்களுக்கும் அப்பகுதியின் அபிவிருத்திக்கும் பெரிதும் உழைத்துள்ளார். இதை நாவாந்துறை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். இவரின் அளப்பரிய சமூக சேவையை பாராட்டி அரசு இவருக்கு சமாதான நீதவான் பட்டத்தை வழங்கி கௌரவித்தது பெருமைக்குரியது. அத்துடன் அவர் நாவாந்துறை சனசமூக நிலையத்தின் தலைவராகவும், தேவாலயப்பணி சபைகளிலும், கடற்தொழில் சங்க அபிவிருத்திகளிலும் பெரிதும் பாடுபட்டுள்ளார். இன்று நாட்டின் அவல சூழ்நிலையிலும் துன்ப நிலையிலும் அவர் குடும்பத்தினர் இடம் பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் நிலையிலும் அமரர் வீரசிங்கத்தை நினைவு கூர்ந்து நிற்பது பெருமைக்குரியது. அவர் நாமம் என்றும் நாவாந்துறை மக்களிடமும் யாழ் நகர மக்களிடமும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நன்றி வணக்கம்.

**தம்பு கந்தையா**
முன்னைநாள் மாநகர சபை உறுப்பினர்
நெதர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாண மாநகர சபையில் நாவாந்துறை பகுதி மக்களுக்கு தனிவட்டாரம் வேண்டுமென சாத்தியமான ரீதியில் சாத்வீகம் மூலம் பலபேருடன் சேர்ந்து போராடி வெற்றி கண்ட ஓர் பொதுத்தொண்டன்தான் இந்த திரு. S. J. வீரசிங்கம் J. P. (சமாதான நீதவான்) முன்னாள் பிரதி மேயர், யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் சென். மேரீஸ் சனசமூக நிலையத்தின் அங்கத்தவராக செயல்பட்ட வேளையில் எனக்கும் நண்பன் வீரசிங்கத்துக்கும் சிறுவயது முதல் நட்பு ஏற்பட்டது. எங்களது யாழ்ப்பாண முஸ்லிம் மாணவர் சங்க அமைப்புடன் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் அவரும் தனது சனசமூக நிலையத்தின் சார்பாக பங்குபற்றி பல வெற்றிகளை பெற்று ஓர் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார். அன்றிலிருந்து பொதுவிடயங்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி யாழ்ப்பாண முஸ்லிம்களின் உற்ற நண்பனாகவும் உயிர்த்தோழனாகவும் நடந்து கொண்டார். யாழ்ப்பாண முஸ்லிம்களின் அயலவரர்களாகிய நாவாந்துறை மக்களின் முன்னேற்றத்திற்கும் நெருங்கிய நட்புக்கும் பாலமாக திகழ்ந்தவர்தான் இந்த நண்பன்.

ஒரு காலத்தில் அரசியலில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் முஸ்லீம்களின் சிறந்த நண்பனுமாகிய திரு.ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் மிகவும் முக்கிய பொறுப்புகளில் இருந்து கொண்டு பல தொண்டுகளை சாதிபேதம் இல்லாமல் செய்து சாதித்தவர்தான் இந்த நண்பன்.

இந்த நேரத்தில்தான் யாழ்ப்பாண மாநகர சபையில் நாவாந்துறை மக்களுக்கு தனிவட்டாரம் வேண்டுமென்ற கோஷத்தை வைத்தவர்தான் இந்த நண்பன். இதிலிருந்துதான் நாவாந்துறை வட்டாரம்பெரும் பிரச்சினையாக அரசியலில் உருவெடுத்தது.

இதைப் பற்றி சில குறிப்புகள் உண்டு. நாவாந்துறை வட்டாரம் ஆரம்பத்தில் முஸ்லீம் வட்டாரத்துடன் இணைந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து செயல்பட்டு வந்தது. அப்போது நாவாந்துறை தனிவட்டாரமாக வர வேண்டுமென யாழ் மாநகர சபை அரசியலில் இந்த கோஷத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டவர்தான் இந்த நண்பன். இதை அரசியலில் பெரும் பங்காற்ற வைத்து அரசியல் தலைவர்களையும் இதில் தலையிட வைத்து வெற்றி கண்டவர்தான் இந்த நண்பன். முஸ்லிம்களும் நாவாந்துறை மக்களுக்கு தனிவட்டாரம் வேண்டுமென கோஷத்துக்கு முன்னுரிமை கொடுத்து அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் உதவி செய்தார்கள்.

இவருக்கு விளையாட்டுத்துறை மிகவும் முக்கியத்துவத்தை கொடுத்து அரசியல் ஈடுபாட்டை வேரூன்ற செய்தது.

1969ஆம் ஆண்டு நண்பன் நாவாந்துறை வட்டாரத்துக்கு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட வேளையில் நானும் யாழ்ப்பாண முஸ்லிம் வட்டாரத்துக்கு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டேன். எனது மகிழ்ச்சியை தெரிவிப்பதற்காக நண்பனிடம் சென்றபோது, ஆனந்தத்தில் நாவாந்துறை மக்கள் நண்பனை வெற்றி விழா நடாத்திய வேளையில் எனது பங்களிப்பையும் என்னுடன் சேர்ந்து நடாத்தும்படி மாநகர சபையில் எங்களது பங்களிப்புகளை செயல்படுத்த துவங்கினோம். 1969ஆம் ஆண்டு மாநகர சபையில் எங்களது சமூகசேவை துவங்கியது.

முதலில் மேயர் தேர்தல் இதில் நண்பனின் நிலை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சாதகமாக இருந்தது. காரணம் ஆரம்பகாலம்தொட்டே அவர் அக்கட்சியின் அங்கத்தவராகவும் பதவிகளிலும் இருந்த காரணத்தினால் கட்சிக்கு சார்பாக நடந்து கொண்டார். அவர் அதில் வெற்றியும் கண்டார். நானும் எங்களது ஆதரவாளர்களும் 'துரையப்பா'வின் சுயேட்சைக்குழுவுக்கு ஆதரவாக இருந்தோம். நண்பன் கட்சி சார்பாக மேயர் தேர்தலில் போட்டியிட்ட திரு. 'நாகராசா' அவர்களுக்கு சார்பாக இருந்தார். எங்களது சுயேட்சைக் குழு சார்பாக இடதுசாரி நண்பன் தோழர் விசுவநாதன் அவர்கள் போட்டியிட்டார். நாகராசாவுக்கு 12 வாக்குகளும் விசுவநாதனுக்கு 11 வாக்குகளும் கிடைத்தது. ஒரு வாக்கு வித்தியாசத்தில் நாகராசா மேயரானார். இதை நான் விபரமாக குறிப்பிடுவதற்கு காரணம் என்னவெனில் எனது நண்பன் வீரசிங்கம் மேயர் நாகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட வேளையில் தனது கன்னி உரையில் தான் ஏன் மேயர் தேர்தலில் இப்படி நடந்து கொண்டேன் என்பதை தெளிவாகவும் விபரமாகவும் தெரியப்படுத்தினார். அதன் நோக்கம் என்னவெனில் தான் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு கட்டுப்பட்டவர் என்ற ஒரே நோக்கத்திற்காகவே இப்படி நடந்ததாக கூறினார். இதிலிருந்து நண்பன் மிகவும் கட்சி கோட்பாடுகளில் நேர்மையாகவும் நீதியாகவும் நடப்பவர் என்பதை தெளிவுபடுத்தவே இதை விபரித்துள்ளேன். நண்பன் மாநகர சபையில் சுகாதாரக்குழு, மின்சாரக்குழு, வேலைப்பகுதிக்குழு, நிதிக்குழு போன்ற முக்கிய குழுக்களில் என்னோடு இருந்து மிகவும் பெறுமதி வாய்ந்த திட்டங்கள் தயாரித்து செயல்பட மாநகர சபைக்கு உதவியவர். இப்படியே மாநகரசபை வாழ்க்கையில் சமூகசேவைக்கு முன்னுரிமை கொடுத்து தொண்டு செய்ய செயல்பட்டவர்தான் இந்த நண்பன். தொடர்ச்சியாக மேயர் மாற்றங்கள் ஏற்படும் போதும் கட்சியின் விசுவாசத்துக்கு மதிப்பு கொடுத்தவர்தான் இந்த நண்பன். அடுத்த மேயராக தெரிவு செய்யப்பட்டவர்தான் திரு. “துரைராஜா“. அவருடனும் கைகோர்த்து செயல்பட்டவர்தான் இந்த நண்பன். அடுத்த மேயராக தெரிவு செய்யப்பட்டவர்தான் “மக்கள் மேயராக“ எல்லோராலும் அழைக்கப்படும் திரு. “துரையப்பா”. இது ஏகமனதாக கட்சி சார்பற்ற முறையில் தெரிவு செய்யப்பட்டவர். இவருடைய காலத்தில் யாழ்ப்பாணம் சுத்தம், சுகாதாரம், மின்சாரம் போன்ற விடயங்களுக்கு முதலிடம் கொடுத்து யாழ் நகரை ஒரு சிங்கப்பூராக மாற்ற செயல்பட்டவர்தான் இந்த துரையப்பா. அதற்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்த எனது நண்பன் வீரசிங்கத்துக்கு துரையப்பா அவர்களே உதவி மேயர் பதவி கொடுத்து சுகாதாரத்துறையை அவர் பொறுப்பில் கொடுத்து பெரும் மகிழ்ச்சி கண்டார். (காரணம் அவரின் திறமையான சேவை) ஈற்றில் “மக்கள் மேயர் துரையப்பா” எதிராளிகளின் துப்பாக்கிச்சூட்டுக்கு ஆளாகி காலஞ் சென்று விட்டார்.

நானும் நண்பனும் மற்றவர்களும் ஒவ்வொரு வட்டார ரீதியாக எங்களது அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டோம். இந்த மாநகர சபை வாழ்க்கையில் நண்பன் வீரசிங்கமும் மற்றவர்களும் பல உலக தலைவர்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. இந்தியாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970 ஆண்டு இந்திய ஜனாதிபதி V.V.கிரியுடனும் முன்னாள் யாழ் மேயர் நாகராஜாவும், அமரர் வீரசிங்கமும் சகல உறுப்பினர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் இருந்த இந்தியாவின் முதல் பிரதமரும் ஆசிய ஜோதியுமான பண்டிட் ஜவஹர்லால் நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட், இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த V. V. கிரி போன்ற பெரியார்களை சந்தித்து உரையாடியது. இப்படி நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த நேரத்தில் யாழ்ப்பாணம் வேறு திசையில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் நானும் நண்பனும் அடிக்கடி சந்தித்து பொதுவாக நிலைமைகளை கதைத்துக் கொள்வோம்.

ஈற்றில்,1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முழு முஸ்லிம்களும், சொத்துக்கள் பறிக்கப்பட்டு வெறும் கையோடு 2 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணம் சோனகத்தெருவை விட்டு தென்பகுதிக்கு அனுப்பப்பட்டார்கள். இந்த நிகழ்சிக்கு முழுதும் அனுதாபப்பட்ட அரசியல்வாதிகளும் கல்விமான்களும் சமூகப்பெரியார்களும், மிகவும் மனம்நொந்த நிலையில் கண்ணீருடனும், கஷ்டமான மனவேதனையுடனும் எங்கள் முன் காட்சி அளித்தார்கள். அந்த வேதனையில் பங்குபற்றி ஆறுதல் கூறியவர்தான் எனது நண்பன் வீரசிங்கம்.

நாங்கள் வெளியேறி தென்பகுதியில் வாழ்ந்த காலத்தில்...

நண்பனை நான் கொழும்பு சுலைமான் ஆஸ்பத்திரியில் 1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சுகவீனத்துக்கு வைத்தியம் செய்த வேளையில் கண்டேன். என்னைக் கண்டவுடன் நண்பன் அழுது மனவேதனை அடைந்து இப்படியா யாழ்ப்பாணம் போய்விட்டது என்று புலம்பினார். ஈற்றில் நோயின் மூலம் கடும் கஷ்டப்பட்டு 12.07.1996ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இது கொழும்பு கொச்சிக்கடையில் இவரது மரண நிகழ்ச்சி நடந்தது. அதில் நான் எனது சமூகத்தின் சார்பாக கலந்து எனது ஆழ்ந்த அனுபதாபங்களை தெரிவித்துக் கொண்டேன். என்றும் எப்போதும் நண்பனின் நினைவு ஞர்பகப்படுத்தக்கூடியது. நாவாந்துறை மக்களும் அயலவர்களாகிய முஸ்லிம் மக்களும் சகோதரர்களாக வாழ இறைவன் ஆசீர்வதிப்பானாக.

இங்ஙனம்
யாழ் முஸ்லிம் சமூகத்தின் சார்பாக
*M. G.* **பஷீர்,** *J. P.*
அகில இலங்கை சமாதான நீதவானும்
முன்னைநாள் யாழ் மாநகரசபை உதவி மேயரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## About Mr.Veerasingham (Vera)

Mr. Veerasingham, humanitarian activist, one time Deputy Mayour of Jaffna Municipal Council, Justice of the Peace and gentleman par excellence is no more with us. As an employee of the Municipal Council, Jaffna during 1970s. I had the privilege of working very closely with him. He was a guide and a friend to me not only in a professional sense but in many ways. His kindness had no limits and his exceptional talents in many fields soaring skywards found him a legend of admireres. He had many facets and versatility. I am not going to describe all aspects of his contribution but suffice now to say that he was brilliant and one of Jaffna Municipality's most eminent Deputy Mayour, loved by all those with whom he came into contact.

His untimely departure was received as aloss to Jaffna Municipal Council in particular and to the entire Navanthurai ward he represented in general. He was somebody who could walk with Kings and commoners without loosing the common touch. While he made difficult and bold decisions as a councilor, nobody bore him any grudges bacause malice was never a part of his nature. His simple qualities were visible for all to see and his heart filled with sympathy, kindness and love of the people.

It is a pleasure to have known and moved with his family members very intimately. They love Mr. S. J. Veerasingham for all what he has done to his family and to the community at large. His pleasant memories still live in my mind.

**P. Jeganathan - BA, JP**
Operations Manager
CCF, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல்மிகு மனிதர்

எனது தந்தையின் மறைவுச் செய்தியைக் கேட்டு அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக நான் கனடாவிலிருந்து தாயகம் சென்றிருந்தேன். இலங்கை விமான நிலையத்தில் இரு தசாப்தங்களின் பின் கால் பதித்த அன்று இனக்கொலை மும்முரமடைந்திருந்தது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு போக்குவரத்துக் கட்டுப்பாடுகள். நான் தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் 8 மணி நேரம் பிடித்த பிரயாணம் அப்பொழுது 4 நாட்கள் எடுத்தன. எனது தந்தையின் இறுதிச் சடங்குகளை எனக்காகப் பின் போடமுடியவில்லை. மக்கள் இறுதி மரியாதை செய்தவேளை மும்முர ஆகாயத்தாக்குதல், செல்தாக்குதல்கள் எமது பகுதியில் இடம் பெற்றதாகக் கூறினார்கள். ஒரு செல்தாக்குதல் இறுதிச்சடங்கு வேளை எமது வீட்டைத் தாண்டி அருகில் திறந்த வெளியில் விழுந்ததாம். எனது தங்கை கமலா கூறினாள்.

என் அன்னைக்கு ஆறுதல் கூறி, எனது துக்கத்தையும் நான் தாயிடமிருந்து நீண்டகாலம் பிரிந்திருந்த துயரைத் தணிப்பதற்காகவும் அவருடனிருந்து ஊர் புதினங்களைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது ஒரு செய்தி வந்தது. "வீரசிங்கம் பெரியப்பா உங்களைப் பார்க்க வேணுமாம்" எனது மருமகள் டயானா கூறினாள். அப்பொழுதுதான் அவர் நோயுற்றிருந்ததும், அதன் விபரமும் தெரிய வந்தது. நடக்க முடியாது. படுத்த படுக்கையில் இருக்கின்றார். தெளிவாகப் பேசவும் முடியாது. அவருக்கு அதிக வயதும் ஆகவில்லையே ! எனது நினைவுகள் பின்நோக்கி முடுக்கி விடப்பட்டன. சுமார் 25 வருடங்களின் முன் இருந்த அவரின் தோற்றம் என் கண் முன் தோன்றியது. துடிப்பான மனிதர். வெள்ளை வேட்டியும் வெள்ளைச்சேட்டும் எப்பொழுதும் அணிந்திருப்பார். மிடுக்காகப் பேசுவார். பல அரசியல் மேடைகளில் பேசக்கேட்டுள்ளேன். பல அரசியல்வாதிகளின் நட்பு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தொடக்கம் அடிமட்ட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இவரது நண்பர்கள். எமது ஊரின் முதல் யாழ் மாநகரசபை உறுப்பினர் முஸ்லீம் வேட்பாளர்களுடன் போட்டி போட்டு இரு தடவைகள் தோல்வியுற்று மூன்றாம் தடவை வெற்றி பெற்றதன் புழகாங்கிதம். சிறுவனாக நான் "எங்கள் சிங்கம் வீரசிங்கம்" எனக் கோஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டது; இவருக்கு எமது ஊரில் அளிக்கப்பட்ட பாராட்டு வைபவங்களில் முன்னின்று பங்கு பற்றியது. அதையும் தாண்டி பத்து வருடங்களின் முன் அவரின் உதைபந்தாட்ட விளையாட்டுத்திறன் - பாலசிங்கம் வீரசிங்கம். நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக் கழகத்தின் முக்கிய உறுப்பினர்கள், இரு சகோதரர்கள். பாலசிங்கம் வலது பக்கமும் வீரசிங்கம் இடது பக்கமும் விளையாட்டுத் திடலில் சாதனை படைத்தகாலம். இதில் ஒரு வினோதம். பாலசிங்கம் இடது காலால் பந்தை உதைக்கமாட்டார். வீரசிங்கம் வலது காலால் பந்தை உதைக்க மாட்டார். ஆகவேதான் இருவரும் இருதுருவத்தில் விளையாடினார்கள். ஆனால் இந்த உலகை விட்டு பிரியும் போது இருவரும் ஒன்றாகவே பிரிந்தனர். வீரசிங்கம் கொழும்பில் முதலில் இறந்தார். பாலசிங்கம் அதைக் கேட்டு கொழும்பில் உயிர் விட்டார். அவ்வளவு சகோதர அன்பு. விளையாட்டில் இருவரும் புலிகள். கோணர் கிக் மூலம் இருவருமே கோல் போட்டதை நான் பார்த்திருக்கின்றேன்.

டயானா கூறிய செய்தியைக் கேட்டு உடனடியாக நான் அவரது வீட்டிற்குச் சென்றேன். முற்றத்தில் மர நிழலில் ஒரு கட்டிலில் படுத்திருந்தார். நான் அதிர்ந்து போனேன். சற்று வினாடிகளின் முன் என் மனக் கண்முன் கண்ட என் மைத்துனர் வீரசிங்கமா? உயர்ந்த மனிதன் குறுகிக் கட்டிலில் கிடப்பதா ? எனது முகமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாது அவரை அணுகினேன். என்னைக் கண்டதும் அவர் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக ஓடியது. எனது வலக்கையை இறுகப்பற்றி தனது கண்களில் வைத்தார். மிகவும் முயன்று, ஆனால் தெளிவாக சில வார்த்தைகள் பேசினார். அந்த வார்த்தைகள் என்றும் என் நினைவை விட்டு அகலா. அவை ஆறுதல் தரும் வார்த்தைகள், அந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் உள்ளம் குளிர்ந்தது.

நான்கு சிங்கங்கள், துரைசிங்கம், பாலசிங்கம், வீரசிங்கம், அமலசிங்கம். எங்கள் ஊரில் பெயர் சொல்லி வாழ்ந்தவர்கள். எந்த சூழ்நிலையிலும் எனது தகப்பனாருக்க மதிப்பளித்தவர்கள். வயதில் மூத்தவர். அம்மான் முறை என்றாலும் தோழமையுடன் அவருடன் பழகியவர்கள். இதனால் சிறுவனாக இருந்த என்னுடன், தோழமையுடன், காணும் இடங்களில் பகிடி பண்ணி சிரிக்க வைப்பார்கள். சிலவேளைகளில் குதர்க்கம் பேசி அழவும் செய்வார்கள். பாலசிங்கம் அத்தானிடம் ஒரு மோட்டார் சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை கார் இருந்தது. காரின் முன் பக்கத்தில் மொத்த இரும்புக் கம்பி சாவி போட்டு சுழற்றி கார் எஞ்சினை ஸ்ராட் பண்ணவேண்டும். அந்த வாகனத்தில் தான் 11 விளையாட்டு வீரர்களும் விளையாட்டுத் தலைவரும் நாவாந்துறையிலிருந்து யாழ் முற்ற வெளி துரையப்பா விளையாட்டு அரங்கு செல்வார்கள். அந்நாட்களில் எனது தகப்பனார் விளையாட்டுத் தலைவராக இருந்தார். 10 வயது சிறுவன். நானும் அடம்பிடித்து அவர்களுடன் அந்த காரில் மைதானத்திற்குச் செல்வேன். பாலசிங்கம் அத்தான் கார் ஓட்டுவார். அவர் மடியில் நான் இருந்து செல்வேன். இது 50 வருடங்களின் முன் நடந்த சம்பவம். இரு சகோதரர்களைப் பற்றி நினைக்கும் பொழுது ஞாபகம் வருகிறது. நான் வளர்ந்து வாலிபனாகி விட்டேன். வீரசிங்கம் அத்தான் யாழ் மாநகர சபை உறுப்பினராக பதவி வகித்த காலம். துரையப்பா யாழ் முதல்வராக பதவியிருந்தவேளை. அப்பொழுதுதான் எனது வெளியுலக வாழ்வின் ஊர்வலம் ஆரம்பமாகியது. எனது மைத்துனர் வீரசிங்கம் அவர்களின் அநுசரணையினால் எனது முதல் உத்தியோகம் கைகூடியது. தற்காலிக எழுது வினைஞர். சோலை வரிப் பிரிவில். எனது மைத்துனரே என்னைக் கூட்டிச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். சோலைவரி கட்டத் தவறியவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதுதான் நான் முதல் செய்த வேலை. திரு. யோசேப் வீரசிங்கம் அவர்களை நான் இறுதியாகச் சந்தித்தது 1995 ஆம் ஆண்டு ஆனிமாதம் 3ம் திகதி. இந்தக் கட்டுரையை வரையும் தினம் 2008 ஆனிமாதம் 3ம் திகதி. ஆற்றல்மிகு இந்த மனிதரைப் பற்றி ஒரு மலருக்காக எழுதும்படி பல மாதங்களின் முன் பணிக்கப்பட்ட பொழுதும் இன்றுதான் அதற்கான அனுமதியை எனது மனம் அளித்துள்ளது. நான் திரு. வீரசிங்கம் அவர்களை இறுதியாகச் சந்தித்த நாள் என் வாழ்வில் மறக்க முடியாதநாள். திரு. யோசேப் வீரசிங்கம் அவர்கள் எம் கிராமத்தை தனது திறமைமிகு ஆற்றல்களால் மகிமையடையச் செய்தவர். இவருக்கு நினைவு மலர் வெளியிட்டு அஞ்சலி செலுத்துவது பொருத்தமானது. இதை இவரது பிள்ளைகள், மருமக்கள் முன்னெடுத்துச் செய்வதைப் பாராட்டுகின்றேன். இவரது மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து நானும் எனது மனைவி மக்களுடன் இவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

**மனுவல் யேசுதாசன்**
சட்டத்தரணி (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972ம் ஆண்டு அமரர் வீரசிங்கம் (வீரா) அவர்களால் யாழ் மாநகராட்சி மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவு விழாவின் போது எழுதப்பட்டது.



# துணை முதல்வர் திரு. எஸ்.ஜே. வீரசிங்கம், ஜே.பி. அவர்களின் வாழ்த்துச் செய்தி

தமிழ் பேசும் மக்களின் தலைநகரான யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய உள்ளூரதிகார சபையான யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவு விழாவின்போது, இம்மன்றம் பொது மக்களின் நலன், சௌகரியம், வசதி, சுகாதாரம், மற்றும் இன்னோரன்ன அபிவிருத்தி சேவைகளை விருத்தி செய்து மென்மேலும் சிறந்த பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

கடந்த 25 ஆண்டுகளாக இம்மன்றம் பொதுமக்களுக்கும் - வரியிறுப்பாளர்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாக அது இலங்கையில் தனக்கென ஓர் தனியிடத்தை பெற்றுள்ளது. இந்தப் புகழ்ச்சிக்கும் - உயர்ச்சிக்கும் முக்கிய காரணம் நகரப் பொதுமக்களும் - வரியிறுப்பாளர்களும் கொடுத்த அயராத ஒத்துழைப்பும் ஊக்கமும் தான் என்றால் அது மிகையாகாது.

இந்நன்னாளில் வெளிவரவிருக்கும் வெள்ளிவிழா மலருக்கு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் சிறப்பாக இனிது நிறைவேற எனது நல்லாசிகள் உரித்தாகுக.

**எஸ். ஜே. வீரசிங்கம்**
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை வல்லோன்

நாம் வாழும் நாட்களில் நம்மோடு இணைந்து உறவாழ செயலாற்றி வழிகாட்டி வாழ்ந்து மறைந்த மனிதரை மறைவின் பின்பும் நினைவு கொண்டு அவர்கள் ஆற்றிய பங்குப் பணிகளை அடுத்த சந்ததியினருக்கு முன் மாதிரிகையாக இருக்கும் பொருட்டு வெளிப்படுத்துவது ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையாகும். இந்த வகையில் மறைந்த திரு. செ. யோ. வீரசிங்கம் அவர்களைப் பற்றிறய எனது தாழ்மையான கருத்துக்ககளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

1934 இல் பிறந்த இவர் வயதில் என்னிலும் மூத்தவர். தமது கல்வியை யாழ் நகரில் புகழ் பூத்த புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்திருந்தார். விளையாட்டுக்களில் ஈடுபாடு உள்ளவர். முன்னைய நாட்களில் யாழ் உதைபந்தாட்ட பதிவுகளின் படி 3 அல்லது 4 கழகங்கள் திறமை வாய்ந்த கழகங்களாக கணிக்கப்பட்டிருந்தன. அதில் சென். மேரீஸ் விளையாட்டுக் கழகமும் அடங்கும். அதில் முன்னணி வீரனாக இவர் திகழ்ந்ததால் பலருக்கும் அறிமுகமான ஒருவராக இருந்தார். இவரது குடும்பத்தில் நான்கு ஆண்பிள்ளைகள் மூன்றாமவராக வீரசிங்கம் விளங்கினார். செல்லப்பிள்ளையாக வாழ்ந்து வந்தார். இவர் கிராமத்தில் இருந்த சென் மேரீஸ் சனசமூக நிலையத்தின் தலைவராக நீண்ட காலம் செயற்பட்டார். வழிகாட்டினார். சென் மேரீஸ் விளயைாட்டுக் கழகத்திற்கு ஒரு மைதானத்தை உருவாக்குவதில் கடினமாக உழைத்தவர். வெற்றியும் கண்டவர். எமது கிராமத்தின் அடையாளமாக திகழும் புனித மரியாள் (சென் மேரீஸ்) ஆலய பரிபாலன சபையின் அங்கத்தவராக நீண்ட காலம் செயல்பட்டவர். 1950களில் அரசியலில் பங்களித்தவர். அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் அங்கத்தவராக நீண்ட காலம் செயல்பட்டவர். தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகும் வரை காங்கிரஸ் கட்சியிலேயே உறுப்பினராக இருந்தவர்.

1968 ஆண்டு நடைபெற்ற யாழ் மாநகர சபைத் தேர்தலில் எமது கிராமத்தை உள்ளடக்கிய 20ம் வட்டாரத்தில் வேட்பாளராக போட்டியிட்டவர். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் இணைந்து வாழும் இப்பகுதியில் நன்மதிப்பைப் பெற்று வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். மாநகர முதல்வரைத் தெரிவு செய்வதில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் இடையே பொதுக்கருத்து ஏற்பட்டதில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முதல்வர் என்ற அடிப்படையில் தீர்மானம் நிறைவேறியது.

1970ம் ஆண்டு யாழ் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது. இவ்வேளையில் மாநகர சபை உறுப்பினர்களை அணுகி தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். அவ்வேளை திரு. செ. யோ. வீரசிங்கம் அவர்களை அணுகிய போது கட்சி மாறுவதை அடியோடு மறுத்திருந்தார். 1972ம் ஆண்டில் துணை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அதே ஆண்டில் நீதி அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்வுகளைப் பாராட்டி வட்டார அளவில் பாராட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. கடல் சார்ந்த எமது வட்டாரத்தின் கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1970 - 1977 இருந்து எமது வட்டாரத்தில் கடலுணவு ஏற்றுமதி இறக்குமதி நடைபெற்ற காலங்களில் கடல் அட்டைச் சங்கத்தின் பணிப்பாளராக கடமையாற்றி மக்களுக்கு நியாயமான முறையில் வருமானம் கிடைக்க வழி செய்தார். யாழ் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் உருவாக்கப்பட்ட இயக்குனர் சபையின் பணிப்பாளராக பல காலம் செயல்பட்டு வந்தார். இவர் அன்புக்கு உதாரணமான திருமதி எலிசபேத் (மேரிப்பிள்ளை) அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 3 பெண்பிள்ளைகளும் 3 ஆண் பிள்ளைகளும் திருமணமாகி நிறைவாழ்வு வாழ்ந்து வருகின்றனர். 1980களில் ஆயுதப் போராட்டம் கூர்மையடைந்த நாட்களில் சர்ச்சைகளில் ஈடுபடாமல் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். இந்த நாட்களில் இன்னும் ஒரு பாரிய பங்களிப்பு தேவைப்பட்டது. சட்ட ஒழுங்கு நிலைமைகள் முடக்கப்பட்டிருந்தன. பிணக்குகள் தொழில் தகராறுகள் போன்றவற்றை தீர்த்து வைக்க இணக்கமன்றங்கள் உருவாக்கப்பட்டன. இதில் திரு. செ. யோ. வீரசிங்கம் அவர்கள் ஒரு உறுப்பினராக இணைந்து முதிர்ச்சியுடன் செயல்பட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் தகராறுகள் எழும்போது வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால் இவ்விவகாரங்கள் நீண்ட நேரம் பிடித்தாலும் தீர்வு காணும் வரை தொடரும். சில சமயம் மாலையில் தொடங்கி நடுஇரவு வரை நீடிக்கும் பொறுமையுடன் இருந்து தீர்வு காணப்பாடுபவார். இன்னும் சொல்லப்போனால் சபைக்கு வரும் முறையீட்டுக்காரரும் சரி, எதிர்த்தரப்பினரும் சரி விடயத்தில் தமது குறை நிறையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் உணர்ச்சிவசப்படுத்துவதும் சர்ச்சையை ஏற்படுத்துவதும் வழமை. இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்களை சாந்தப்படுத்தி அமைதி மற்றும் நல்ல சூழ்நிலையை உருவாக்குவதில் அவரது அனுபவம் பெரிதும் உதவியாக இருந்தது. சேவை அடிப்படையிலும் சரி அறிமுக அளவிலும் சரி பெரிய வட்டத்தை தமதாக்கிக் கொண்டிருந்த இவர், 1995இல் தமிழ்த் தேசத்தில் நடைபெற்ற பாரிய இடப்பெயர்வின்போது வன்னிக்குச் சென்றார். மேலதிக மருத்துவ சேவைகளுக்காக கொழும்பு சென்ற இவர் 1996ஆம் ஆண்டு ஆடி மாதம் 12ந் திகதி கொழும்பில் இறைபதம் எய்தியிருந்தார். நன்றிக் கடன்பட்டோர், உறவினர், நண்பர் அரசியல் நண்பர்கள் என எல்லோருமே கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

எமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் வகையில் அவர் நினைவாக வெளியிடப்படும் மலரில் இந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

**செபஸ்தியாம்பிள்ளை எட்வேட்**
முன்னாள் மாநகரசபை உறுப்பினர் (யாழ் மாநகரசபை)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (யாழ் மாவட்டம்)
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த என் சொந்தமும் நட்பும்

யாழ் நாவாயில் 11.11.1934 இல் அன்று மலர்ந்து கல்வியில், குடும்பத்தில் ஆலயத்தில், சமூகத்தில் அரசியலில் உயர்ந்த என் சொந்தத்தை நட்பை இறந்த இந்த பதின்நாலாம் ஆண்டில் நினைத்துப் பார்க்கின்றேன்.

தாயின் கருவறையில் புதுப்பொலிவுடன் உதித்த உந்தன் வாழ்வும் புதுப்பொலிவுடன் ஆரம்பமானது. உனது வாழ்விலே கல்வியை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பயின்று கல்வியிலே தளர்வின்றி வீறுநடை போட்ட நீ உனது உயர்கல்வியினை அகில இலங்கையிலே முன்னனி வகிக்கும் ஒரு பாடசாலையான சென் பற்றிக்ஸ் கல்லூரியிலே தொடர்ந்தாய். கல்வியிலே எதிர்நீச்சல் போட்டு பயணத்தை முடித்து நிறைவு கண்டபின் குடும்பம் என்னும் அமைதியான படகினிலே செல்ல உன் மனம் விரும்பியது. இதன்பேறாக மரியாம்பிள்ளைக்கும், சலோமைக்கும் மகளாகிய எலிசபேத்தை (மேரிப்பிள்ளை) திருமணம் செய்து மூன்று பெண் பிள்ளைகளையும் மூன்று ஆண் பிள்ளைகளையும் பெற்று சந்தோசமாய் நீ திகழ்ந்தாய். உன் பிள்ளைகள் அனைவரும் நிறைவுடன் கனடா நாட்டில் வாழ்கின்றார்கள். உன் வாழ்க்கைப் பயணத்தினை கல்வித்துறையின் வளர்ச்சியால் மாநகரசபை உறுப்பினராக, உதவி மேயராக, அரசியலில் வெகுதாகம் கொண்டவராக, உதைபந்தாட்ட மெய்வல்லுனராக, போட்டிகளில் முதன்மை வீரனாக, சமாதான நீதவானாக, நாவாயூர் ஆலயச் சபை உறுப்பினராக, சென் மேரீஸ் சன சமூக நிலையத் தலைவராக, கடல்அட்டைச் சங்கத்தின் பணிப்பாளராக சமூக அரசியல் பணிகளை தளராத உறுதியுடன் ஆற்றி நற்புகழ் பெற்றாய். வாழ்வு என்னும் கொடையைத் தந்த இறைவனுக்கு நீ செய்த பணிகள் நன்றித் துதிகளாக அமையும். ஆண்டவன் மடியிலே அமைதியாய் நீ உறங்க 14ம் ஆண்டு நிறைவு கூர்ந்து பிரார்த்திக்கிறேன்.

**திரு. ம. செபமாலை**
சமாதான நீதவான்
பதிவு இல. *03/06/N.S/JF/P/380.*
கிளிநொச்சி குமுழமுனை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாயூர் நாயகன்

யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த S. J. வீரசிங்கம் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றில் நானும் ஓர் பங்காளன் என்பதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். அதற்கு மூல காரணம் நான் இன்று வயோதிபம் அடைந்து நோய்வாய்ப்பட்டு அல்லலுறும் காலத்திலும் அடுத்தவரை நம்பி வாழாமல் எனக்கும் என் சார்ந்தவர்களும் அன்றாட நித்திய கஞ்சியாகிய ஓய்வூதியத்தைப் பெற வாய்ப்பளித்தவர் அப்பெருமகனே. என்னை மாநகர சபையில் எவ்வளவோ சிரமத்துக்கு மத்தியில் கடமை புரிய வைத்தவர். என் குடும்பம் இன்று சீரிய வாழ்க்கை வாழ்கின்றனர் என்றால் அது வீரசிங்கமே. மேலும் என் விடயத்தில் மட்டுமன்றி ஏனைய சமூகத்தினருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி செயலாற்றியவர்.

திரு. வீரசிங்கம் அவர்கள் ஆரம்பக் கல்வியை றோ. க. த. மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ்ப்பாணத்தில் புகழ் வாய்ந்த பாடசாலையாகிய சென் பற்றிக்ஸ் கல்லூரியில் கற்று உயர்வடைந்தார். அவர் திருமணம் செய்து பின்னர் பொது வாழ்வில் ஈடுபட்டு, அரசாங்கத்தினாலும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினாலும், பாராட்டப்பட்டமையினால் இவரின் வேலைத்திறனை மேலும் எதிர்பார்த்து யாழ். மாநகர சபை அங்கத்தவராக மக்கள் ஏகோபித்து அனுப்பினர். யாழ் மாநகர சபை அங்கத்தவராக இருந்தபோது என்னையும் உட்பட ஏனைய பல சமூகங்களைச் சேர்ந்தவர்களையும் மாநகர சபையில் உள்வாங்கினார். வாழ்நாளில் கிடைத்த வரப்பிரசாதமென்றால் நிரந்தரமான தொழிலும் அதன் பேறாய் கிடைத்த ஓய்வூதியமுமே. நான் மட்டுமல்ல என்னைப் போல் பலரது குடும்பங்களும் அவரின் தயவால் நித்திய கஞ்சி குடிக்கின்றார்கள். இவர் 1952ல் தொடக்கம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அங்கத்தவனாக அரசியலில் பிரவேசித்து 1968இல் மாநகர சபை உறுப்பினராகி 1972இல் மாநகர சபை உதவி முதல்வராகவும் அதேவேளை சமாதான நீதவானாகவும் மக்களுக்கு நிறைந்த சேவையாற்றியுள்ளார். மாநகர சபையின் சுகாதாரம், வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணம், மின்சாரம் சேரி ஒழிப்பு, இன்னும் பல யாவும் நாவாந்துறை வட்டாரத்தில் மட்டுமன்றி அண்டியுள்ள சோனகத் தெரு, ஆனைக்கோட்டை, பொம்மைவெளி போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தார். அவர் செய்த எவ்வளவோ சேவைகள் என்மனக் கண்முன் தோன்றுகின்றது. எழுத எழுத எழுதிக்கொண்டே போகலாம். அவரது குடும்பம் கடல் கடந்து வாழ்ந்தாலும் அவர்களை என்னால் மறக்க முடியாது. காரணம் நான் அவர்களின் வீட்டுக்கு செல்லும் போது திருமதி வீரசிங்கம் (மேரிப்பிள்ளை) அக்கா இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பார். அப்படி நல்ல துணைவியார் வீரசிங்கம் அண்ணருக்கு கிடைத்தது பெரும்பாக்கியம். திரு. S.J. வீரசிங்கம் அவர்களின் ஆ்னமா என்றும் நித்திய ஒளி பெற இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**வேலன் சின்னத்தம்பி**
சமாதான நீதவான்
கண்ணாபுரம், நாவாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாய் மண்ணின் வீரச் சின்னம்

நாவாய் மண்ணின் கடந்த காலப் பகுதியைப் பின் நோக்கிப் பார்க்கின்றேன். மண்ணின் நலனுக்காய்த் தம் வாழ்வை அர்ப்பணித்த மண்ணின் மைந்தர்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றேன். அவர்களில் ஓர் உருவம் பளிச்சென என் மனக் கண்ணில் உதயமாகின்றது. வெள்ளைவெளேரென்ற உடை, கண்ணிலே கறுப்புக் கண்ணாடி, நெடி துயர்ந்த பொலிந்த பொன்நிற மேனி, வீறு கொண்டெழுந்த கம்பீர நடை, இவர் யாரென எண்ணுகின்றீர்களா? அவர்தான் அமரர் திரு. S. J. வீரசிங்கம் அவர்களாவார். அவருடன் சமகாலத்தில் நானும் இம்மண்ணில் வாழ்ந்தவள் என்ற வகையில் அவரை நான் நன்கறிவேன்.

இளமைக் காலத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரனாகத் திகழ்ந்தவர். சிறந்த சமூக சேவகர். தன் உழைப்பாலும், நற்செயல்களாலும் தான் வாழ்ந்த பூமிக்கு அளப்பாரிய சேவைகள் ஆற்றியவர். நாவாந்துறை சென் மேரீஸ் சனசமூக நிலையத் தலைவராகவும் பதவி வகித்த காலத்தில் சமய வளர்ச்சிக்கும் சமூக நலனுக்குமென சேவைகள் பல புரிந்தார். கடற்றொழில் கடலட்டை ஏற்றுமதி அக்காலத்தில் கிராமத்துக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தந்த பிரபலமான கடலுணவுப் பொருளாக இருந்தது, அக்கடல் அட்டைச் சங்கத்தின் பணிப்பாளராக கடமையாற்றி மக்களுக்கு நியாயமான முறையில் வருமானம் கிடைக்க வழி செய்தார். அத்தோடு நாவாந்துறை மக்களுக்கு தொழில் செய்வதற்கு போட் இஞ்சின் கடனாகப் பெற வழி செய்து மக்களுக்கு உதவி புரிந்தார். அவரால் ஏனையோர் பலனடைந்தார்கள். 1952ம் ஆண்டளவில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தீவிரத் தொண்டனாக மாறி அரசியலில் பிரவேசித்தார். 1968இல் யாழ் மாநகரசபை உறுப்பினராகக் கிராம மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின் அவர் பணி இன்னும் ஒருபடி மேலுயர்ந்தது. சீரான குடிநீர் விநியோகம், வீதிப்புனரமைப்பு, மின்சார இணைப்புக்கள் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தல் என்ற வகையில் கிராமத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். 1972ல் யாழ் மாநகர சபை உதவி மேயராகப் பதவியேற்றபின் இவர்பணி யாழ் நகரமெங்கும் விரிவடைந்தது.

இவரது சேவைக்கு ஒரு கௌரவமாக 1972ல் சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டது. பிறப்பால் பெருமையடைந்தவருண்டு. பிறப்புக்குப் பெருமை சேர்த்தவருமுண்டு. அமரர் திரு. வீரசிங்கம் தனது பணியால் பிறப்புக்கு பெருமை சேர்த்தவர். தனது மக்கள் சேவையால் வாழும் வரை புகழோடு வாழ்ந்து 12.07.1996இல் இறைவனடி சேர்ந்தார். அவர் மறைந்தாலும் அவரது சேவைகள் இன்றும் அவரை எமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றது. அவர் ஆன்மா முடிவில்லா வாழ்வில் இன்புற்றிருப்பதாக. அவரின் பணி வாழ்வை அனைவரும் முன்மாதிரியாகக் கொள்வோமாக. அவரின் பணி வாழ்வை மீட்டிப் பார்க்க எனக்கொரு வாய்ப்பளித்த அன்னாரின் குடும்பத்தாருக்கு என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**செல்வி நீ. கொஞ்சேஞ்சி**
ஓய்வு பெற்ற ஆசிரியை,
நாவாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்திறன் கொண்டவீரா

செபஸ்தியாம்பிள்ளை இரத்தினம், சம்பூரணம் தம்பதிகளின் மூன்றாவது மகனாக பிறந்தவர் இவர். யோசேப் வீரசிங்கம் என்னும் பெயருடைய வீரா. புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவன். இவர் வீரா என்று பெரியோர்களாலும் அன்பர்களாலும் செல்லமாக அழைக்கப்பட்டார். வீரா என்ற பெயருக்கேற்ப எடுத்த காரியத்தில் சாதூர்யமாக வெற்றிவாகை சூடுவார், வீரம் மிக்கவர், நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்த்து நல்லதை கண்கொண்டு செயல்படுத்தும் வீரர்.

நாவாந்துறை சென்மேரீஸ் சனசமூக நிலைய மக்களின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்த பெருமகன். ஓர் சமூக முன்னேற்றத்துக்காக அரசியல் பொருளாதார விடிவுகளிற்காக துடித்து வெற்றியும் கண்டவர். முஸ்லீம் மக்களோடு சேர்ந்திருந்த அரசியல் சிக்கலைக் கண்ட அவர் தானே அச்சிக்கலைத் தீர்த்து யாழ் மாநகர சபை வேட்பாளராக நின்று சென்மேரீஸ் சனசமூக நிலைய மக்களின் உரிமையை நிலைநாட்ட பாடுபட்டார். முதலில் தோல்வி கண்டார். அந்தத் தோல்வியால் துவண்டு விடாமல் நாவாந்துறைக் கடலோர கிறிஸ்தவ மக்களுக்கு யாழ் மாநகர சபையில் ஓர் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று பாடுபட்டு தான் அங்கம் வகித்த தமிழ் காங்கிரஸ் கட்சி மூலம் செயல்பட்டு தனிவட்டாரம் ஏற்பட உழைத்தும் வெற்றியும் கண்டார்.

பிரித்தெடுக்கப்பட்ட வட்டாரத்தில் உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பட்டு மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மின் வெளிச்சம், குழாய் குடிநீர் திட்டம், வெள்ளம் தேங்கி நிற்காத வகையில் வடிகால்கள் அமைத்து நாவாய் மண்ணை சீர்படுத்தியதோடு மட்டுமன்றி சென் மேரீஸ் சனசமூக நிலைய மக்களுக்கு விளையாட்டு மைதானமும் அமைத்துக் கொடுத்த பெருமையும் வீராவையே சாரும். சென் மேரிஸ் சனசமூக நிலையத் தலைவராய் இருந்த காலத்தில் பல சமாசங்ளோடு தொடர்பு கொண்டு சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்தை முன்னேற்ற வழிஅமைத்தவர். இவர் சனசமூக நிலையத் தலைவராய் இருந்த காலத்தில் இரவுப் பாடசாலையை நிறுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ, மாணவிகளுக்கு கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தவர். தான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் எப்பொழுதும் கல்வி வளர்ச்சியை பற்றியே பேசுவார். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் சமூகம் வளர்ச்சியடையும் என்று குறிக்கோளுடன் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

யோசேப் வீரசிங்கம் சிறந்த விளையாட்டு வீரர். ஓட்டம், நீளம் பாய்தல் உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், போன்ற விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினார். யாழ் சனசமூக நிலையங்கள் (சமாசம்) நடாத்தும் விளையாட்டுக்களில் சென்மேரீஸ் சனசமூக நிலையத்தையும் பங்கேற்க வைத்து தானும் கலந்து கொண்டு வெற்றியும் கண்டார். உதைப்பந்தாட்டத்தில் சிறந்த இடதுகால் முன்னனி வீரராக திகழ்ந்தவர். பார்வையாளர்களை வியக்க வைக்கும் முறையில் (கோளர் கிக்) முறையில் நேரடியாக கோல் போட்டவர். இது முதல் முறையாக இவருக்கு கிடைத்த பெரிய புகழாக இருந்து வந்தது. இவருடைய செயல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவர் தான் எடுத்துக் கொண்ட காரியங்கள் யாவற்றிலும் வெற்றி கண்ட ஓர் புகழுக்குரிய செயல்வீரர். இவரது சேவை, மற்றும் வீரமிக்க செயல்களையும் போற்றி அவரது பிள்ளைகளுக்கு இம்மடலை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

அன்புடன்

**செபஸ்ரி அமிர்தநாதர்**

முன்னாள் சென்மேரிஸ் சனசமூக நிலையத் தலைவரும் முன்னாள் நாவாந்துறை சம்மாட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனங்களில் நிறைந்த வீரா

கடல் வளம் மிகுந்த கலையொளி மிளிரும் புகழ் பூத்த நாவாயூரில் காலங்காலமாக பல கலைஞர்களும், பொது நிலைத் தொண்டர்களும், விளையாட்டு வீரர்களும் தமது அரிய பணியினால் மக்கள் மனங்களில் நிறைந்து இருக்கின்றார்கள். அவ்வகையில் அமரர் காலஞ்சென்ற செ. யோசேப் வீரசிங்கம் அவர்களின் சமூகப்பணியை நோக்குவது பொருத்தமானதாகும்.

அவருடன் சிறுவயது தொடக்கம் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடன் ஆரம்ப காலத்தில் படித்தும் உள்ளேன். ஐந்தாவது வகுப்பின் பின் அவர் சென் பற்றிஸ் கல்லூரிக்கும், நான் கொழும்புதுறை யோசேப் மகாவித்தியாலயத்திற்குமாக பிரிந்து சென்று கல்வி பயின்றோம். இருந்த போதும் இருவரும் பல வழிகளில் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் கிடைத்தது. கடலில் கூட்டமாக சென்று குளிப்பது, விளையாட்டுக்களில் பங்குபற்றுவது, கொட்டும் மழையிலும் மைதானத்தில் நின்று உதைப்பந்தாட்டம் விளையாடுவதுமாக எமது நெருக்கம் வலுவுற்று விரிவடைந்தது.

இளைஞராக வளர்ந்த பின்பும், பல ஸ்தாபனங்களில் சேர்ந்து பணியாற்றினோம், பாலயேசுசபை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆலயபரிகாரசபை, சனசமூக நிலையநிர்வாக சபை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், அரசியல் என அவருடன் இணைந்து பழகிச் செயல்படும் வாய்ப்புக்கள் அதிகம் கிடைத்தது. அன்னார் மாநகர சபை உறுப்பினராக இருந்த போதுதான் எமது ஊர் பொதுக் கிணறு, மலசல கூடங்களை சுற்றி பெரும் தடுப்புச்சுவர் கோவில் எல்லைகள் வரையறுத்து அத்திவாரம் என்பன போடப்பட்டன.

கலைத்துறையிலும் இவர் மூத்தசகோதரர் நெறிப்படுத்திய நாடகத்தில் நீதிபதியாகவும் நடிக்கவும் நான் நகைச்சுவைப் பாத்திரத்தில் நடிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் சனசமூகத் தலைவராக இருந்த போது நிலையக் கட்டிடம், கடற்றொழிலாளர் சங்கத்திற்கு விற்கப்பட்டு, ஆலய வளவினுள் புதிய சனசமூக நிலையம் இவரால் நிறுவப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் வெற்றி வாய்ப்புக்கு அமரர் யோசேப்வீரசிங்கம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அன்னாரும் அவர்களின் சகோதரர்களும் மிகத் திறமையாக விளையாடி சென்மேரீஸ் கழக முன்னணி வீரர்களாகத் திகழ்ந்தனர். இவரும் இவரது சகோதரர் பாலசிங்கம் அண்ணனும் கோணர் அடிக்கும் போது கோல் போகும் என்ற நம்பிக்கை மெய்ப்பிக்கப்பட்டு விளையாட்டு மைதானமே மகிழ்ச்சியால் அதிர்வதுண்டு.

அன்னார் மீது இரு சகோதரர்களும் மிகுந்த பாசம் வைத்திருந்ததுடன் முன்னேற்றத்திலும் மிகவும் அக்கறையாக இருந்தனர். இவரது மூத்த தமையன் அல்பிறட்துரைசிங்கம் அண்ணர் இறந்து போது பிரிவுத்துயரால் பட்டதுடிப்பு சான்றாகும்.

வீரசிங்கம் அண்ணர் காலமான செய்தி கேட்டு சகோதரர் பாலசிங்கம் அண்ணன் அவரின் இழப்பைத்தாங்க முடியாது, நோய் வாய்ப்பட்டு ஒரே வாரத்தில் மரணத்தைத் தழுவிக் கொண்டதும் இவர்களது சகோதர பாசத்தை துலாம்பாரமாக பறை சாற்றியது. அன்னாரின் ஞாபகார்த்த நிறைவு மலருக்கு எனது உணர்வுகளை வரைய வாய்ப்புத் தந்த அவரது குடும்பத்தினருக்கு எனது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
**தோழமையுள்ள சூ. மார்க்கு**
முன்னைநாள் சனசமூகத்நிலையத் தலைவர்.
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்கவொரு தலைவர் அமரர் செ. யோ. வீரசிங்கம்

தோற்றத்தில் பொலிவும், தூய வெண்ணாடையும், நெற்றியில் நிறைவாக சந்தனப்பொட்டும், சிரித்த முகத்தோடு சிந்திக்க வைக்கும் பார்வையும் பார்ப்போரைக் கவரும் பக்குவமான தோற்றமும் கொண்டு ஒரு ஆளுமை மிக்க தலைவனாக விளங்கிய எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய மறைந்தும் மறையாமல் எம்முள்ளத்தில் நிறைந்திருக்கும் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினரும், யாழ் மாநகர உதவி முதல்வரும், சமாதான நீதவானுமாகிய அமரர் செ. யோ. வீரசிங்கம் அவர்கள் இறைபாதமடைந்த 14ம் ஆண்டினை நினைவு கூருகின்றேன். அவர் பற்றிய எமது மனப்பதிவுகளை வெளிப்படுத்த வேண்டியவனாய் இருக்கின்றேன்.

எம்மோடு உறவாடி, எமது இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு, எம்மை மகிழ்வித்து, எம்மை உற்சாகப்படுத்தி, ஆளுமை மிக்கத் தலைவனாக விளங்கிய இவரை பற்றிய சில வார்த்தைகள். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும், நடுநிலைக் கல்வியை யாழ் புனித பத்திரிசியாக் கல்லூரியிலும் பயின்றார். இவர் கல்லூரியில் சிறந்த விளையாட்டு வீரனாக, குறிப்பாக உதைப்பந்தாட்டத்தில் கல்லூரி பணியில் சிறந்த முன்னணி இடக்கால் வீரனாக மிக, மிக நுணுக்கமாக, இலகுவாக கோல் போடுவதில் சிறப்பான இடத்தை வகுத்தவர். கல்லூரியில் இருந்து விலகிய காலத்திலும் நாவாந்துறை சென் மேரிஸ் அணியில் தனது திறமைகளை வெளிப்படுத்தி அணிக்கு புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. சமூக சேவைப் பணியில் நாட்டங்கொண்ட இவர் யாழ் மாநகர சபையினையுள்ளடக்கிய நாவாந்துறைக் கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் புறக்கணிக்கப்பட்ட பகுதியாகக் கவனிப்பாரற்ற நிலையில் இருந்த நிலையிலும், துணிந்த மனநிலையோடும், ஊர்ப் பெரியார்களின் ஆதரவோடும், ஆசியோடும், நாவாந்துறையை உள்ளடக்கிய யாழ் மாநகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் 11ம் வட்டாரத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டார். பெரும் பாலும் முஸ்லீம் மக்களைக் கொண்ட இவ்வட்டாரத்தில் போட்டியிட்டு மிகக் குறைந்த வாக்குகளால் தோல்வியுற்றாலும், சோர்ந்து போகாமல் சமூக முன்னேற்றப் பாதையில் தன்னை அர்ப்பணித்து மக்களின் நன்மை கருதி சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டு அயராது உழைத்தார்.

பெரும் பாலும் முஸ்லீம் மக்களை உள்ளடக்கிய இவ்வட்டாரத்தில் இவர் போட்டி இட்டதன் காரணமாக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடமாக இருந்த இக்கிராமம் மீண்டும் அந்நியப்படுத்தப்பட்டது மாத்திரமல்லாமல் குறிப்பாக வடக்குப் பகுதி மக்களின் வாக்குரிமைகள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டது. இது சில விசமிகளால் மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாள 500க்கும் மேற்பட்டோருக்கு வாக்குரிமை இல்லாமல் ஆக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது பெரும்பாலும் கடற்றொழிலையே ஜீவாதாரமாக கொண்ட இந்த மக்கள் ஏற்பட்ட இழப்புகள், சேதங்களுக்கு எவ்வித உதவிகளையும் பெற முடியாமல் கஸ்டப்பட்டனர். இவ் வேளையில் இந்த மக்களின் அவல நிலையைக் கண்ணுற்ற அமரர் வீரசிங்கம் ஊரில் உள்ள பெரியார் சிலரையும், இளைஞர் சிலரையும் அழைத்துச் சென்று அன்று யாழ் அரச அதிபராக இருந்த மதிப்பிற்குரிய சிறீஸ்காந்தா அவர்களைச் சந்தித்து, மக்களின் நிலைமைகளையும், இயற்கை அழிவுகளையும் எடுத்துச் சொல்லி, எழுத்து மூலம் சமர்ப்பித்ததற்கிணங்க உடனடியாக மக்கள் நிவாரணம் பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரச அதிபரே ஏனையவர்களுடன் தொடர்பு கொண்டு செய்தார். அன்று அவரே நிவாரணப் பொருட்களை எங்களுடன் அனுப்பி வைத்து மக்களுக்குக் கிடைக்க வழி செய்தமையும் மறக்கமுடியாத நிகழ்வுகளாகும். இத்தோடு 11ம் வட்டாரத்தில் நாவாந்துறை மக்களின் வாக்குரிமைகள் வாக்காளர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்ட விடயமும் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இது விடயமாக தாம் கூடிய கவனம் செலுத்துவதாகக் கூறிய அரச அதிபர், பிறிதொரு நாளில் திரு. வீரசிங்கத்தோடு எம்மையும் அழைத்து வாக்காளர் பதிவு நீக்கப்பட்டதற்கான காரணமும் அதற்குடந்தையாக செயல்பட்டவர்களையும் இனங்கண்டு அதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து செயல்பட்ட வேளை பொறுப்பு வாய்ந்த சிலர் இவ்விடயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடையவர்களாக அறிந்த போது திருவாளர் வீரசிங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரச அதிபரால் எடுக்கவிருந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டு அடுத்து வரும் தேர்தலில் இழந்த அனைவரினதும் வாக்குரிமைகள் கிடைக்க வழி செய்யப்பட்டன. இத்தனைக்கும் காரணமாக முன்னின்று செயற்பட்டவர் அமரர் வீரசிங்கம் என்றால் அது மிகையாகாது. யாராலும் மறுக்கவும் முடியாது. அவரோடு செயல்பட்ட இளைஞர்களில் நானும் ஒருவன் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றேன்.

சமூக சேவைப் பணிகளில் அர்ப்பணிப்போடு செயல்பட்ட இவர் சென் மேரீஸ் சனசமூக நிலையத்தின் தலைவராக மக்களால் உயர்த்தப்பட்டு மக்களின் வாழ்வுயர பலவிதமான ஆக்க முயற்சிகளை முன்னெடுத்தார். சில வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் 1968இல் யாழ் மாநகர சபைக்குத் தேர்தல் வந்த போது மக்களின் பெரு விருப்பத்திற்கு அமையத் தேர்தலில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று மாநகர சபை உறுப்பினரானார். உறுப்பினராக இருந்த கால எல்லைக்குள் இனமத பேதமின்றி தன்னாலான பணிகளை மேற்கொண்டு வந்ததும், அவ்வேளை மாநகர உதவி முதல்வராக தெரிவு செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து அரசினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்துக் கௌரவிக்கப்பட்டதும் மறக்க முடியாத நிதழ்வுகளாகும். இன்னும் யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபையின் உறுப்பினராகவும், யாழ் போதனா வைத்தியசாலையின் மேற்பார்வை உத்தியேகஸ்தராகவும் நியமிக்கப்பட்டு பொது சேவை முயற்சிகளில் செயல்பட்டு வந்தவர் இவர் என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் இவர் மாநகர சபை உறுப்பினராக இருந்த காலப் பகுதியில் நாவாந்துறையில் பல இளைஞர்களுக்கு நகர சபையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தார். எனினும் இதில் சிலரைத் தவிர ஏனையோர் வெவ்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றார்கள். மிகச் சிலரே உத்தியோகத்தில் நிலைத்து நின்று ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுகின்றார்கள். இப்படியான ஆளுமை மிக்க ஒருவரை இழந்தது இக்கிராமத்திற்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும். இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**யோ. பிரான்சீஸ்**
நாவாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறவாச் சமூக சேவையாளன்

அன்னார் காலம் சென்ற செபஸ்ரியாம்பிள்ளை (ரெத்தினம்) ஆசீர்வாதம்மா (சம்பூரணம்) தம்பதிகளின் மூன்றாவது புதல்வர் ஆவார் இத்தம்பதிகளுக்கு நான்கு புதல்வர்கள் பிறந்தார்கள். முறையே அல்பிரட் துரைசிங்கம், அந்தோனிப் பிள்ளை பாலசிங்கம், யோசேப் வீரசிங்கம், ஞானசேகரம் அமலசிங்கம் ஆகியோர்.

காலஞ் சென்ற யோசேப் வீரசிங்கம் தனது ஆரம்பக் கல்வியை யாழ் றோ.க.த.க. பாடசாலையிலும் தனது உயர்கல்வியை யாழ் சம்பத்திரியார் (சென்பற்றிக்ஸ்) கல்லூரியிலும் கல்வி கற்று மிகவும் சிறந்த உதைப்பந்தாட்ட வீரனாகவும் மெய்வல்லுனர் போட்டிகளிலும் மிகவும் சிறப்பாகவும் விளையாடி அக் கால்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்தார். தனது கல்வியை படித்து முடித்த பின்பு பொதுச் சேவையிலும் எமது ஊர் முன்னேற்றத்துக்கும் எமது பெரியார்களுடன் இணைந்து அரும்பாடுபட்டார்.

எமது விளையாட்டுக் கழகமான சென்மேரீஸ் கழகத்தில் இவரும் இவருடன் இணைந்து இவரின் சகோதரர்களும் மிகவும் சிறப்பாக விளையாடி எமது சமூகத்துக்கும் சென்மேரீஸ் கழகத்துக்கும் பெருமை தேடித் தந்தார்கள். தனது இளம் வயதிலே அரசியலில் கால் வைத்தார். தனது தந்தை விருப்பப்படி இருவரும் இவரது சகோதரர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரசில் இணைந்தார்கள். அதன் பின்பு அக்கட்சியின் பொதுக் குழுவிலும் செயற்குழுவிலும் உறுப்பினரானார்கள். அக்காலத்தில் எமது படித்த இளைஞர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சேவையிலும் சலுசலா போன்ற ஸ்தாபனங்களிலும் தகுதிக் கேற்ப வேலையை திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அனுசரணையுடன் பெற்றுக் கொடுத்தார். தனது வாலிப வயதில் மூத்தர்மாரியாம்பிள்ளை, மரியசலோமை தம்பதிகளின் கடைசிப் புதல்வி எலிசபேத் மேரியாம்பிள்ளையை தனது வாழ்க்கைத் துணைவியாய் கரம் பிடித்தார். இத் தம்பதிகளுக்கு முறையே மூன்று பெண்களும் மூன்று ஆண்களும் பிறந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரைப் போலவே அவரது பிள்ளைகளும் மிகவும் சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்கள் ஆவார்கள்.

அன்னாரின் மூத்த புதல்வன் எதிர்சிங்கம் கனடா நாவாந்துறை விளையாட்டுக் கழகத்துக்கு பயிற்சியாளராக விளங்குவது மறைந்த தந்தையின் பெருமையை ஒரு கணம் நினைவு கூறுகின்றது. அன்னார் சென்மேரீஸ் சனசமூக நிலையத் தலைவராகவும், கடற்றொழில் சங்கத் தலைவராகவும், யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவராகவும் பொதுவாக எமது சமூகத்தின் பல அமைப்புக்களிலும் தலைமைப் பதவிகளை ஏற்று மிகவும் பொறுப்புடனும் உற்சாகத்துடனும் வழி நடத்தி எமது சமூகத்துக்கு பெருமை தேடித் தந்தவர். எமது சமூகத்தின் முதல் மாநகர சபை உறுப்பினரும், உதவிமேயரும், சமாதான நீதவானும் என்ற பெருமை அவருக்கே உரித்தாகும். தனது இளம் வயதிலே வட்டாரம் 11ல் மூன்று முஸ்லீம் வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டு 37 வாக்குகள் குறைவாக பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்து தனது மாநகர சபை உறுப்பினர் ஆசைக்கு அடிக்கல் நாட்டினார். இரண்டாவது முறையும் நடந்த தேர்தலில் எமது சமூகத்தைச் சேர்ந்த இருவர் போட்டியிட்டதால் இரண்டாவது முறையும் தோல்வியைத் தழுவிக் கொண்டார். மூன்றாவது முறையாக நடந்த தேர்தலில் நேரடிப் போட்டியில் 55 வாக்குகளால் பெஞ்மின் யேக்கப் என்னும் தனது நண்பரை தோற்கடித்து மாநகர சபை உறுப்பினரானார்.

மாநகர சபை உறுப்பினராக இருந்த வேளையில் எமது விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு விளையாட்டு மைதானமும் எமது வட்டாரத்துக்கு ஒரு பொது நூல் நிலையமும் அமைத்துக் கொடுத்தார். தனது பதவிக்காலத்தில் தனது வட்டார இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். சென் மேரீஸ் சனசமூகத் தலைவராக இருந்த பொழுது எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு இரவுப் பாடசாலை அமைப்பதற்கு சனசமூக நிலையத்தின் ஊடாக முயற்சி செய்து வெற்றியும் கண்டார். தனது வட்டாரமாகிய ஆணைக் கோட்டை பழம் றோட்டில் சிறிய தொகையான மக்களுக்கு என அவர்கள் விருப்பப்படி ஓர் பலநோக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றைத் திறந்து கொடுத்து அம்மக்களின் பாராட்டைப் பெற்றார். அன்னார் முதிர்ச்சி அடைந்த காலத்திலும் பொதுச்சேவையிலும் பங்கு கொண்டு எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டார் என்பதை எமது சமூகம் ஒரு போதும் மறந்து விட முடியாது என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

அவர் விரும்பிய பணி, கல்வி எமது பிள்ளைகள் அவர் பணியைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இங்ஙனம்
**ப. அடைக்கலம்**
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சாமை அறியாத சிங்கம்

நாவாந்துறை என்று சொல்லி முடியமுன்
வீரசிங்கத்தார் சொந்தமா என்று கேட்கும் அளவிற்கு
உன்நாமம் சிங்கநடை போட்டு சிகரத்தில் ஏற
எங்குநீ சென்றாய் யாரிடம் சொன்னாய்

சரித்திரங்கள் மாறலாம் சாதனைகள் மாறாது
சாதனைகள் என்றும் தலைநிமிர்ந்து பெயர் சொல்லும்
நீர் படைத்த சாதனைகள் யார்படைப்பார் எம் மண்ணில்
குன்றாப் புகழுடன் என்றும் எம்மண்ணில் வாழ்கின்றீர்

மன்னர்களின் கீரிடமதில் மின்னுவது இரத்தினம்
நாவாய் மண்ணிலும் மின்னினார் இரத்தினம்
உம் தந்தையார் இரத்தினம் தாயார்
வாழ்தமிழின் தேன் மொழியாள் சம்பூரணம்

கம்பீரமாய் கலகலப்பாய் வாழ்ந்த குடும்பத்தில்
பந்தங்கள் பாசங்கள் தூக்கி எடுத்து முத்தமிட
மழலை மொழி கேட்கப் பிறந்த சிங்கங்கள் நான்கு
துரைசிங்கம், பாலசிங்கம், வீரசிங்கம், அமலசிங்கம்

மூன்றாம் ஆளாம் அண்ணல் வீரசிங்கம்
1934ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 11ம் நாள் பிறந்தார்
அரிச்சுவடியாம் ஆரம்பக் கல்வியை உரித்தாக்கியதே
யாழ் / நாவாந்துறை றோ.க.த.கலவன் பாடசாலை

சாதி பேதங்கள் போட்டி பூசல்கள் நிறைந்தகாலம்
சகல மாணவர்களுடனும் கனிவாகப் பேசி சமமாக பழகி
தீண்டாமைக்குச் சாவுமணி அடித்து ஆரம்பக் கல்வியை முடித்து
ஆசிரியர் மாணவர்கள் பாசத்திற்கு விடைகொடுத்தார்

உயர் கல்வியை ஆங்கில மொழியில் கற்க ஆவல் கொண்டார்
அவரது தந்தையின் முன் முயற்சியால் பார்புகழ்
யாழ் / சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்து படித்தார்
(St' Patrick's College)
கல்லூரியில் மதிப்புக்குரிய மாணவகானத் திகழ்ந்தார்
அவரது தந்தையார் சடுதியாக நோய் வாய்ப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்நிலை மிக மோசமாக சீர்குலைந்தது
தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி
அனைவரது கண்களும் குளமாகிக் கதறிஅழ இறையரசில்
இணைந்தார்
கவலைகளை மறந்து செயல்பட விளையாட்டிலும்
சமூக முன்னேற்றத்திலும் மக்களுடன் ஈடுபட
இளம் சிங்கப் படையணியுடன் இணைந்து செயல்பட
சென் மேரீஸ் ச. ச. நிலையத்தில் அங்கத்தவராக இணைந்தார்.

விளையாட்டில் பெருவிருப்பங் கொண்டவர்
தாச்சிப் போட்டி விளையாட்டுப் போட்டிகளிலும்
கரப்பந்தாட்டத்திலும் உதைப்பந்தாட்டத்திலும் சிறந்து
விளங்கினார்
உதைப்பந்தாட்டத்தில் சிறந்த முன்னணி வீரனாகத் திகழ்ந்தார்

அவரது வீரச் செறிவுகள் விளையாட்டுத் திறமைகளுக்கு
எடுத்துக்காட்டாக அவரது மைந்தர்கள்
எதிர்சிங்கம், ஜான்சன் ராஜன் ஆகியோரின்
விளையாட்டுத் திறன் சான்றுபகிர்கின்றது

அகில உலக சட்டத்தரணி சட்டவல்லுனர்
சட்டமாமேதை மறைந்த அதிஉயர் திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின்
தலைமையிலான அ.இ.த.கா. கட்சியில் 1952ம் ஆண்டு
இணைந்தார்
கட்சியின் தளபதியாக தீரமுடன் திகழ்ந்தார்

இன்முகம் கொண்டு வந்தோரை வரவேற்று
பசித்தோர் முகம் பாரா பண்பாளர்
பெரியோர் மரியம்பிள்ளை பொன்னரியம் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி திருநிறைச் செல்வி மேரிப்பிள்ளையை

1955ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 20ம் நாள்
யாழ் மரியன்னை பேராலயத்தில் பீரங்கி வெடியதிர மணிகள்
ஆர்பரிக்க
குருக்கள் வேதம் முளங்க தூய ஆவி நிழலிட
வாழ்க்கைத் துணைவியாக கைத்தவம் பற்றினார்
பொது நல நோக்குடைய அவரது துணைவியார்
அவரோடு இணைந்து பணியாற்றி
அரசியலிலும் பொது நல சேவையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாக நின்று ஊக்கமுடன் உழைத்தார்

1958ஆம் ஆண்டு கொண்டல் புயல் அடித்து வீடுமனை விட்டகன்று
அடைந்தனர் தஞ்சம் அன்னையில் ஆலயத்தில்
அறிந்ததும் விரைந்தார் சிங்கம் யாழ் அரச அதிபரிடம்
ஊர்திகளில் வந்தார் சிங்கம் உலர் உணவு வகைகளுடன்

அறிந்தும் வெள்ளம் போல் திரண்டனர் மக்கள்
சென்மேரீஸ் சனசமூக நிலைய மண்டபத்தில்
சாதிமத பேதமின்றி சமமாகப் பக்குவமாய் பகிர்ந்தனர்
நிலையத்தின் இளம் சிங்கப் படையணிகள்

போராட்ட மெனவந்தால் மோதலுக்கு அஞ்சாத சிங்கம்
1961ல் கத்தோலிக்க பாடசாலைகளை அரசு சுவிகாரம் கொண்டபோது
எதிர்மறியல் போராட்டத்தில் பெரியோர்களுடன் இணைந்த
இளைஞர்களுடன் முன்னணியில் நின்றார் வீரசிங்கமாய்

சமூக முன்னேற்றத்திற்கும் சனசமூக நிலைய வளர்ச்சிக்கும்
உரிய கருத்துக்களை அவ்வப்போது எடுத்துக் கூறுவார்
நிலை ஆலோசகராக நிர்வாகத்தில் இடம் பெற்று
சென்மேரீஸ் ச.ச.நி. தலைவராக தெரிவு செய்யப்பட்டார்

பொது நிகழ்வுகளிலும் தனிப்பட்ட முறையிலும்
பிள்ளைகளுக்கு கல்வியை ஊட்டுங்கள்
நாடு வளம் பெறும் முன்னேற்றம் அடையும் என்ற
விருது வாக்கியத்தை தாரகை மந்திரமாக அடிக்கடி கூறுவார்

1976ம் ஆண்டு 40து வருடங்களக்கு முன்
பெருகிவரும் ஜனத்தொகையை கருத்தில் கொண்டு
வருங்காலம் நாவாய் மண்ணில் குடியிருக்கவும்
தொழில்துறைக்கும்
இடமற்ற நிலை ஏற்படும் என்று கூறினார்

எதிர்காலம் புதிராகும் நிலைமை நீக்க
மக்களுக்கு உணர்வூட்டி ஆசைகாட்டி
குடியிருப்பு தொழில் துறைக்கு ஏற்ற இடம்
புதிதான வன்னிப் பிரதேசம் பொலிவுறத் திகழுமென்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனகரி முளங்காவில் கரியாலை நாகபடுவான்
குடியேற்றத் திட்ட விண்ணப்பம் கோரக்கண்டு
மகிழ்ந்தெழுந்து மகிழ்ச்சி கொண்டு
விண்ணப்பிக்க ஏற்ற வழி அனைத்தும் செய்தாய்

யாழ் அரச அதிபர் லயனல் பெனாண்டஸ்சுடன்
தொடர்புகொண்டாய்
சாதிமத போதமின்றி விண்ணப்பித்த அனைவரும்
காணி நிலம் பெற்று உம்மைப் போற்றி புகழ்ந்தனர்
அந்தப் புகழ்ச்சியில் தழைத்து வேரூன்றி வளர்ந்ததுதான்

நாவாந்துறை நாச்சிக்குடா சின்னநாவாந்துறை
இருப்பிடமாகவும்
கடல் தொழில் வளம் மிக்க நாச்சிக்குடாவை
காணி நிலம் பெற்ற இடத்தில் கமத்தொழில் செய்யவும்
கால்பதித்தனர்
இன்று நாவாந்துறை நாச்சிக்குடா என்று நாம்பெற்று
பொலிவுறத் திகழ்வதைப் பார்வீரா

மக்கள் சேவையை மகேசன் சேவையென்று
1968ம் ஆண்டு யாழ் மாநகர சபை தேரதலில் போட்டியிட்டாய்
உறுப்பினராய் தெரிவுசெய்தார் மக்கள் உம்மை
வயதில் குறைந்த இளம் சிங்கமாய் உட்புகுந்தார்

அஞ்சாமை அறியாத சிங்கமாய் உறுப்பினர் உரிமையுடன்
முதல்வர் ஆணையாளர் கவனத்தில் எடுத்துரைத்து
அறிவார்ந்த சேவையுடன் கதைகள் கூறி
ஆற்றல் மிகு காரியத்தை செய்து வென்றீர்

செறிவான வேகமுடன் அன்பு நெஞ்சால்
முதல்வர் முதல் உறுப்பினரும் ஆணையாளர் உயர் ஊழியரும்
“வீரா” என்று சிறப்பான பட்டத்தால்
செம்மலெனப் போற்றிப் புகழ்ந்துமை அழைத்தனரே

யாழ் மாநகர சபை குழுநிலைத் தேர்வுதன்னில்
சுகாதாரக் துறை தன்னை தலைமை ஏற்று சிறப்பாகப்
பணிபுரிந்தீர்
உம் செயல் திறன் சாதுர்யம் பேச்சு வன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த சொல் அன்பறிவால் 1972ம் ஆண்டு துணைமுதல்வர்
ஆகிநின்றீர்

கடல்தொழில் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராய்
அடவேறுவென கடமை செய்து உயர்ந்திடவே
யாழ் கடல்தொழில் அபிவிருத்தி ஆலொசகராக (Board
Director)
அரசாங்க நியமனம் பெற்று கடல்தொழில் வளம் பெற
உழைத்திட்டாய்

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினராய்
கல்வி அபிவிருத்திக்கும் கட்டிட விஸ்தரிப்புக்கும்
உழைத்திட்டாய்
யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினராய்
நாவாந்துறை கிளை தலைவராக இறுதிவரை செயல்பட்டாய்

புனித பரலோக அன்னை ஆலய பங்குச் சபை உறுப்பினராய்
ஆலயப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டார்
சென்மேரீஸ் மக்கள் மன்ற உறுப்பினராய்
சமாதான முன்னெடுப்புப் பணிகளை முனைப்புடன் செய்து
நின்றாய

1972ம் ஆண்டு சமாதான நீதவானாக J.P ஆக
பட்டம் பெற்று சத்தியப்பிரமாணம் எடுத்தாய்
தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு
1975ம் ஆண்டு J.P அரச பட்டத்தை புறம் தள்ளிதுறந்தாய்

ஆண்ணலார் செய்த வட்டாரப் பணிகளின் சிதறல்கள் சில
பின்தங்கிய நிலையில் குண்டும் குழியுமான
பழம் றோட்டை புதுவீதியாக மாற்றினார்
வட்டாரத்தில் தொடங்கிய முதல்பணி இதுவே

நாவாந்துறையிலிருந்து காக்கைதீவு சந்திவரை
குப்பைபிட்டி என்று அழைக்கப்பட்ட கடலோரம்
மட்டமான அழகான கடற்கரைச் சாலையாக மாற்றி அமைத்து
யாழ் நகரில் மிகநீளமான பொழுதுபோக்கு கடற்கரையாக்கினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாய் மக்களின் பத்திரிகை வாசகர் நலன்கருதி
தமிழ் ஆங்கில ஊடகங்களின் செய்திகளையும் அறிய
யாழ் மாநகர சபையின் அனுசரணையுடன்
துணை நூல் நிலையம் திறந்து வைத்தார்

நாவலர் வீதியிலிருந்து நாவாந்துறை சகல வீதிகளும்
வடிகால் மின்சாரம் குடிநீர் குழாய் வசதி
குறைந்த இடமனைத்தும் குறைவின்றி
நிறைவாகச் செவ்வனே செய்துவைத்தார்

இருளில் மூழ்கி இருந்த கடற்கரை வீதி
புதிய மின்கம்பங்கள் நட்டப்பட்டு
பிரகாசமான மேக்குரி விளக்குகள் பொருத்தப்பட்டு
தொழிலாளர் நலன் பேணிக் காத்து நின்றார்

சென்மேரீஸ் மக்களின் கலாச்சார பண்பாடு விழுமியங்களான
ஆண்கள் ஓரஞ்சியர் கிணறு பெண்கள் மூலக் கிணற்றையும்
அழிய விடாமல் காத்து புதுப்பித்து மதில் அமைத்து
புதுமெருகூட்டி நீராடும் அனைவரையும் பயனடைய வைத்தார்

நாவாந்துறை மீன்சந்தை புதுப்பிக்கப்பட்டு
கடலுணவு இறைச்சிவகை மரக்கறி
மூன்றும் ஒன்றிணைந்த சந்தையாக
நுகர்வோர்க்கு வசதி செய்துவைத்தார்

மழை காலங்களில் சேறும் சகதியுமாய் இருந்த வயல்வெளியில்
மின் விளக்கு குடிநீர் வசதியுடன் புதிய வீதி அமைத்து
மேரியோசப் வீதி என்று நாமம் பொறித்து வயல் வெளி
மக்களின்
போக்குவரத்தை மிகவும் இலகுவாக்கினார்

உறைப்பான சாதிமதம் தாண்டித் தொண்டால்
உத்தமராய் நித்தியராய் நிலைத்தீர் நெஞ்சில்
ஊன்று விதைபோலிருந்து உள்ளம் தாங்கி
உயர் மரமாய் நலம்பல தந்தீர் நன்றி வீரா

துடிப்பான சேவைமிகு தொண்டு செய்தீர்
இத்தனையும் செய்து வைத்தாய் ஊருக்கு
உம் குடும்பத்துக்காய் சேர்த்து வைத்த சொத்தென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிவிட்ட நில அளவென்ன, வைப்பிலிட்ட பணத்தின்
வங்கிக் கணக்கென்ன

உம் சிரிப்பொலியைத் தான் எம் செவிகளில் கேட்கவைத்து
1996ம் ஆண்டு ஆடிமாதம் 12ம் நாள்
இறையரசில் நித்தியமாய் நிலைத்து வாழ
அமரராகி இறைவனடி சேர்ந்து விட்டாய்

இறந்தும் எம் நெஞ்சில் வாழ்வதாலே
இறப்பிலும் வெற்றி கொண்டாய் வாழியவே
நிறைவான உம்பணிகள் சான்று கூறும்
நின்பெயரும் நிலைத்து நிற்கும் நில உலகம் உள்ளவரை

அன்புத் தம்பி,
**சூ. அமிர்தநாதர்**
**நாவாந்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளர்
# அமரர் செ.யோ. வீரசிங்கம்

ஈழமணித் திருநாட்டின் வடபுலத்தே யாழ் மாநகர சபையின் மேற்குத் திசை எல்லையில் அமைந்துள்ள நாவாந்துறைக் கிராமத்தில் உதித்தவர் தான் அமரர் வீரசிங்கம். சமூகத்தின் பார்வையில் அன்னாரைப் பற்றிய மதிப்பீடுகள், விமர்சனங்கள், யாவற்றையும் உள்வாங்கிக் கொண்ட நான் எனது சிறுபிராயம் தொடக்கம் அவரது அந்திம காலத்திலும் நெருங்கி உறவாடியதில் ஏற்பட்ட உணர்வுகள் அவரைப் பற்றிய எனது மதிப்பீட்டினை மக்கள் முன் வைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் கனவு நிறைவேறுவதை இட்டு மன நிறைவு கொள்கின்றேன்.

சிறிய நாவாந்துறைக் கிராமத்தின் வரலாற்றினை சற்று பின்னோக்கிப் பார்த்தால் கிராமத்தின் சமய, கல்வி, கலை, விளையாட்டு ஆகிய சமூக மேம்பாட்டுத் துறைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஒரு சில பெரியார்கள் என்மனக்கண் முன் தெரிவதைக் காண்கின்றேன். அவர்களில் ஒருவராக அமரர் வீரசிங்கத்தை முன் நிறுத்திப் பார்க்கின்றேன். அமரரின் மனித நேயம், சமூக சேவைகள், விளையாட்டு, கலைத்துறைகளின் பங்களிப்பு அரசியல் ஈடுபாடு என்பன அவருக்கு சமூகத்தில் ஓர் உயர்ந்த சேவையாளன் என்ற அந்தஸ்தைக் கொடுத்ததென்றால் மிகையாகாது. அவற்றில் சிலவற்றை இங்கு கோடிட்டுக் காட்டுவது சாலப் பொருத்தமானதாகும்.

அமரர் வீரசிங்கம் இளம் வயதிலிருந்தே நாவாய் சென் மேரீஸ் சனசமூக நிலையத்தில் அங்கத்தவராக இணைந்து சமூக சேவைகளிலும் விளையாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டு செயலாற்றியவர். இதனால் நிலைய நிர்வாக உறுப்பினர் பதவியிலிருந்து தலைவர் பதவி வரை கடமையாற்றிய பெருமை அன்னாருக்குண்டு உதைப்பந்தாட்ட கழக அணியின் இடதுகால் முன்னணி வீரராக விளையாடி ரசிகர்களிடையே பெரும் பாராட்டுதலைப் பெற்றவராவர். அத்துடன் அணியின் கப்டனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அணியினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற பெருமையும் இவருக்குண்டு. கலைத்துறையிலும் இவர் கால்பதிக்கத் தவறவில்லை. நிலைய மூத்த தமிழ் மன்றம் தயாரித்த நாடகம் - கலைநிகழ்ச்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பை நல்கினார். குறிப்பாக "மலர்ந்த வாழ்வு" நாடகத்தில் நீதிபதி வேடமிட்டு சிறப்பாக நடித்து ஒரு சிறந்த நடிகன் என நிரூபித்துக் காட்டினார்.

கிராமத்தின் மிகப் பழமை வாய்ந்த சனசமூக நிலையம் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் மூலம் சமூகப் பணியாற்றி வந்த அமரர் வீரசிங்கத்துக்கு "மண்ணின் மைந்தன்" நாம் என்ற உணர்வு மேலோங்கிய காலகட்டம் அவரின் அரசியல் பிரவேசத்திற்கு வித்திட்டும் கொடுத்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து தீவிரமாக இயங்கி வந்தார். இவரது அரசியல் பணி காரணமாக அமரர் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அன்பையும் பாராட்டுதலையும் பெற்றார். 1958ம் ஆண்டு நடைபெற்ற யாழ் மாநாகராட்சி தேர்தல் காலம் அன்னாரை தேர்தல் களத்தில் கால்பதிக்க வைத்தது. அக்காலக்கட்டத்தில் நாவாந்துறை கிராமத்துக்கென ஓர் தனியான வட்டாரம் அமைந்திருக்கவில்லை. கிராமம் நாவலர் வீதி ஊடாக வடக்கு தெற்கு என பிரிக்கப்பட்டு முஸ்லீம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட 11ம், 12ம் வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. கரையோர சிறுபான்மை வாக்காளரைக் கொண்ட 11ம் வட்டாரத்தில் வெற்றி வாய்ப்பு அரிது என்று அறிந்திருந்தும் துணிச்சலாக தேர்தலில் போட்டியிட முன்வந்தது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. அச்சமயம் நானும் ஏனைய சிறுவயதுடைய நண்பர்களும் சேர்ந்து கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் வெற்றிக் கோசமிட்டோம். தென் கிராமத்தில் அமரர் மாசில்லாமணியும் 12ம் வட்டாரத்தில் போட்டியிட்டது இங்கு நினைவு கூறத்தக்கது. தேர்தலில் அமரர் சொற்பவாக்குகளினால் தோல்வியுற்றாலும் அதனை சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டார். என்னை பொறுத்தமட்டில் அவர் தோற்கவில்லை. வெற்றி பெற்றார் என்றே மனதில் தோன்றியது. காரணம் எமது நாவாந்துறை கிராமத்தை தீவகத்தில் அடையாளப் படுத்தியதில் அமரர் வெற்றி கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் மிகையாகாது. மேலும் தோல்வி கண்டு துவண்டு விடாது மேலும் தீவிரமாக சமூக அரசியலில் பணியாற்றி வந்தார்.

1961 – 1962 ஆண்டு காலகட்டம் நான் இளவயதில் சென்மேரீஸ் சனசமூக நிலைய பொதுச் செயலாளராக அமரர் தலைவர் கி. ஆசைப்பிள்ளை புலவரின் தலைமையின் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அக்காலக்கட்டத்தில் யாழ் மாநகரசபையில் நாவாந்துறை பாஷையூர், கிராமங்கள் தனிவட்டாரங்களாக அமைக்க அதற்கான தகுந்த ஆவணங்களையும், அறிக்கைகளையும் அனுப்பி வைக்குமாறு அரச உள்ளூராட்சி ஆணையாளர், வர்த்தகமானி பத்திரிகைகள் மூலம் கோரிக்கை விடுத்தார். இதற்கமைய தகுந்த ஆதாரங்களுடன் அறிக்கையினை தயாரித்து நிலையம் மூலம் அனுப்பி வைத்தோம். இவ்விடயத்தில் அமரர் வர்த்தமானியில் நாவாந்துறை கிராமத் மாநகர சபையின் 17 ஆவது வட்டாரமாக பிரகடனப்படுத்தி புதினப் பத்திரிகைகளிலும் செய்தி வெளியிடப்பட்டது. அத்துடன் 1963ம் ஆண்டு மார்கழி மாதம் மாநகராட்சி தேர்கலுக்கான திகதி வீரசிங்கமும் சமூக நலன் விரும்பிகளான பெரியார்கள், இளைஞர்கள் வரவேற்று பெருமகிழ்ச்சி கொண்டதை மறக்க முடியாததொன்றாகும். முதன் முதலில் தனி வட்டாரமாக அமைக்கப்பட்ட நாவாந்துறைக்கான தேர்தல் களத்தில் பல்வேறு சமூகங்களிடையே ஏற்பட்ட மிதவாதப் போக்கு – சாதி அபிமானம் என்பனவும் வடபுலத்தே விஸ்வரூபம் எடுத்திருந்த குடும்ப ஆதிக்கப் போக்கும் அமரர் வீரசிங்கத்தின் தேர்தல் தோல்விக்குக் காரணிகளாக அமைந்ததெனலாம்.

அமரர் தோல்வியைக் கண்டு கலக்கமடையவில்லை. தோல்வியே வெற்றியின் படிகள் என்ற அறிஞனின் கூற்றுக்கமைய தமது வெற்றிக்காகத் தொடர்ந்தும் பணியாற்றினார். 1968ம் ஆண்டு நடைபெற்ற யாழ் மாநகர சபைத் தேர்தலில் 3வது தடவையாகப் போட்டியிட்டு வெற்றிக் கனியைத் தமதாக்கிக் கொண்டார். இவ்வெற்றியை தம் ஒவ்வொருரினதும் வெற்றயென வடசமூகத்திலுள்ள மக்கள் குதூகலத்துடன் கொண்டாடியது மெய்சிலிர்க்க வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை உறுப்பினராக மட்டுமன்றி உதவி மேயராகவும் பதவி வகித்து சிறப்புடன் செயலாற்றி கிராமத்திற்கு நற்பெயரைத் தேடித் தந்த பெருந்தகை அமரர் வீரசிங்கமாகும்.

அமரர் மாநகர சபையில் பணியாற்றிய காலகட்டத்தில் அவருக்கெதிராக சில விஷக் கிருமிகளால் தவறான விமர்சனங்களைக் கட்டவிழ்த்து விட்ட போதிலும் தனது சமூகப் பணியினைத் தொடரத் தவறவில்லை. அதற்கு எடுத்துக் காட்டாக பின் தங்கிய கிராமத்தில் தாழ்ந்து போய் குண்டும் குழியமாக இருந்த பல வீதிகளை செப்பனிட்டு பெயர் பலகைகளையும் அமைத்தார். மேலும் வடக்கே அராலி வீதியை அமைத்து அப்பகுதிகளில் காணி உரிமையுடைய பலருக்கு புதிய வீடுகளை அமைத்து போக்குவரத்து செய்ய உதவலானார். மக்கள் தம் குடிநீருக்கான தேவைகளை பெறும் பொருட்டு புதிய நீர்க்குழாய்கள், தொட்டிகளை அமைத்துக் கொடுத்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இன்றும் ஓய்வூதியம் பெற்றுக் கொடுத்து பணியாற்றியமையை இங்கு நினைவு கூரத்தக்கது.

அமரர் வீரசிங்கம் தமது பிறந்த கிராமத்தில் பற்றுடையவராவர் கிராமத்தை முன்னேற்ற வேண்டுமென்ற துடிப்புடன் செயல்பட்டார். யாழ் பாராளுமன்ற உறுப்பினர், மாநகரமேயர் மற்றும் அரச உயர் அதிகாரிகளினதும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி கிராம அபிவிருத்திப் பணிகளுக்கான திட்டமிடல் நிதி பங்களிப்பைப் பெற்றுக் கொடுப்பதில் உதவிபுரிந்தார். குறிப்பாக வடக்கே கடற்கரை வீதியோரமாக அமையப் பெற்ற சூரியவெளி குடியேற்றத் திட்டம் நிறைவேற அமரரின் பங்களிப்பு துணைபுரிந்தது. கிராமத்தின் கல்வி வளர்ச்சிகளை அதிகரிக்க வேண்டுமென்று அவரது பேரவாவினை என்னால் அறியமுடிந்தது. கிராமத்தின் ஒரேயொரு பாடசாலையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பழமை வாய்ந்த கட்டிடத்தினை அகற்றி புதிய கட்டிடங்கள் அமைக்க அப்போதைய அதிபர்களான அமரர் S. தீக்கிலாப்பிள்ளை, அமரர் நீ. எஸ்தாக்கி ஆகியோருடன் இணைந்து யாழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நிதியினைப் பெற்று செயலாற்றியமை அவருக்கு கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட அக்கறைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மேலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலையை மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலய தரத்திற்கு உயர்த்தவும் மாணவர்களின் இடநெருக்கடிக்குத் தீர்வு காண பதிய பாடசாலை அமைக்கவும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கினார்.

அமரர் வீரசிங்கம் மனித நேயம் மிக்க ஒரு பண்பாளராவார். கிராமத்தில் உள்ள சகல மக்களிடையேயும், குடும்பங்களிடையேயும், அயல் கிராமங்களிடையேயும் எழும் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் கோவில் பங்கு சபை இணக்க சபைகளுடன் இணைந்து முன்னின்று பணியாற்றியவராவர். அல்லாமலும் மக்களுடன் அன்புடனும் சகோதரத்துவத்துடனும் சமத்துவமாக உறவாடி தான் ஓர் சமத்துவ சோசலிசவாதியென நிரூபித்துக் காட்டினார். பதவிகள் பல கிடைத்த போதும் பணிவுடன் வாழ்ந்து காட்டிய பெருந்தகை. பதவிகள் மூலம் பொருள் சேர்க்காத தன்னியவான். ஏதிர்பாளர்கள், வசைமாரி பொழிந்த போதும் சீற்றம் கொள்ளாத பண்பாளன். இதனால் கிராமத்தில் மனித நேயம் மிக்க சிறந்த ஓர் சமூக சேவையாளன் என்பதற்கு இலக்கனமானார் வாழ்க அவர் நாமம்! தொடர்க அவர் பணி!!

**நீ. அருளானந்தம்**
இலங்கை கடற்தொழில்
திணைக்கள உத்தியோகத்தர்
முன்னாள் பொதுச் செயலாளர்
செ. மேரீஸ் சனசமூக நிலையம்

"குணம் நாடிக் குற்றமுநாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நினைவலைகள்

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய காலஞ்சென்ற முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய அமரர் செ. யோசேப் வீரசிங்கம் அவர்களை நினைவு கூருகின்றேன். அவரது ஆற்றலும், அவரால் நாங்கள் அடைந்த நன்மைகளையும் இத்தால் தெளிவுபடுத்த வேண்டியவனாக இருக்கின்றேன். இவர் யாழ் மாநகர சபை உறுப்பினராக இருந்த காலத்திலும் கூட எல்லோருடனும் அன்பாக, பண்பாக பழகி எம் எல்லோரையும் மதித்து அன்பு செய்த ஒருவரென்றால் அது மிகையாகாது.

சமூக சேவைப் பணிகளில் மட்டும் அல்ல சமயப்பணிகளிலும் ஏற்றத்தாழ்வின்றி செயல்பட்டு முன்னேற்றகரமான பணிகளில் எமக்கு உறுதுணையாக விளங்கியவர். 1950 ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் மாநகர சபையின் 11ம் வட்டாரம் முஸ்லீம் மக்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட நாவாந்துறையையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்த காலத்தில் நாவாந்துறை ஒதுக்கப்பட்ட கிராமமாக கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது.

முஸ்லீம் மக்களே இவ்வட்டாரத்தை பிரதி நிதித்துவப்படுத்தி இருந்த கால நிலையில் மிகவும் இளவயதிலேயே தானே துணிந்த மனநிலையோடு யாழ் மாநகர சபைக்கு 11ம் வட்டாரத்துக்கு வேட்பாளராகப் போட்டியிட்டு மிகக் குறைந்த ஒரு சிலவாக்குகளால் தோல்வியுற்றாலும் அன்றிலிருந்து சமூகப் பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

மாநகர சபை உறுப்பினராக இல்லாவிட்டாலும் கூட இந்த கிராமத்தின் மேம்பாட்டிற்காக அயராது உழைத்தவர். 1958ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் நாம் பாதிப்படைந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வேலைவாய்ப்பின்றி, அன்றாட உணவுக்கேனும் வசதியின்றி துன்பப்பட்ட வேளையில் யாராலும் கவனிப்பாரற்று எந்தவித உதவியுமின்றி இருந்த நிலையில் எம்மை அணுகி எமது நிலை அறிந்து தமது சகநண்பர்களுடன் சென்று அரச அதிபரையும் ஏனைய அதிகாரிகளையும் கண்டு எமது குறைபாடுகளை எடுத்தியம்பி எல்லோருக்கும் எவ்வித வேற்றுமையுமின்றி உலருணவும் வேறு பொருட்களையும் பெற்றுக் உதவியதையும் எம்மால் மறக்க முடியாது. எனவே நன்றியோடு இவரை நினைவு கூருகின்றேன். இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**அ. நீக்கிலஸ் (சின்னராசா)**
கெனடிவீதி நாவாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தலைவன்

நற்பெயரும் கொண்டீர்

நல்லோரையும் கண்டீர்

நற்செயல்கள் புரிந்து நாட்டுக்கு நன்மைகள் செய்தீர்

உதைப்பந்தாட்டத்தில் உன்னதமாக விளையாடி
மக்களை உவகை கொள்ளச் செய்தீர்

அரசியலில் களம் புகுந்து மாநகர சபையினிலே அங்கம்
வகித்தீர்

மரியாள் ஆலயச் சபையினிலே இடம் பெற்று
அரும்பெரும் சேவைகள் பல செய்தீர்

கீழோர் மேலோர் எனப்பாராது வாழ்ந்து கேடுகெட்ட
உலகில் வாழப் பிடிக்காது பரமனிடம் சென்றீர்.

இன்று நீர் நம்மை விட்டகன்று வருடங்கள் பல ஆகின்றன
உளம் நிறைய உம்மை நினைத்து உம் ஆன்மா சாந்தி
பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**நாவாயூர் பாலா**
(யோசேப் இம்மானுவேல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைச் செம்மல்

ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாணம் பொன்நகரில் நாவாந்துறை எனும் பகுதியில் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தார் அமரர் S. J. வீரசிங்கம் அவர்கள். இப்பூமியிலே 11.11.1934 அன்று அவதரித்தார். ஆரம்பக் கல்வியை யாழ். நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் சம்பத்திரியார் கல்லூரியிலும் கற்றார்.

சமூக சேவையை உயர்வாக மதித்த இவர் சமூகத்தில் சமாதான நீதவானாக, சனசமூக நிலையத் தலைவராக, கோவில் சபை உறுப்பினராக விளங்கினார். அதுமட்டுமன்றி உதைபந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகளிலும் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தார்.

இவர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் பற்றுக் கொண்டு அதனோடு பின்னிப் பிணைந்து தன்னால் ஆன முறையில் கட்சியை வளர்க்க பெரிதும் பாடுபட்டார். சமூக சேவை செய்ய வேண்டுமென்ற கொள்கையோடு வாழ்ந்ததினால் மாநகர சபை உறுப்பினராகவும், தொடர்ந்து மாநகர சபை உதவி மேயராகவும் விளங்கினார்.

அமரர் வீரசிங்கம் அவர்கள் பல தசாப்தங்களாக சமூகத்துடன் ஒன்றித்து வாழ்ந்தமையால் சமயம், சமூகம் என்பவற்றை நன்கு அறிந்து வைத்திருந்தார். இதனால் சமயத்தையும், மக்களையும் முன்னேற்றப் பாதையில் செயல்பட வைத்த ஒரு செயல் வீரனாகவும் விளங்கினார். சமூக சேவையை சிறப்பாகச் செய்வதற்கு சனசமூக நிலைய தலைவராக பொறுப்பேற்று கிராமத்தின் முன்னேற்றத்துக்கு அயராது பாடுபட்டார். ஆலயத் திருப்பணிச் சபைக்குத் தலைவராக இருந்து அந்தப் பதவிக்கு பெருமை சேர்த்த பெரும் பண்பாளன்.

இவரிடம் பல ஆளுமைகள் இயல்பாகவே இருந்ததினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சேவைகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இவரைப் பற்றி மதிப்பிடும் போது பல்துறை ஆற்றல் வாய்ந்த ஒரு உயர்ந்த மனிதனாகவே நாம் காணலாம். அரசியல், சமயம், சமூகம் தொடர்பான அனைத்திலும் இவரது பணி இடம் பெற்றிருக்கின்றது.

ஒரு சமூகத் தலைவனுக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும், பொருந்தியவராக கடைசி வரையும் மிளிர்ந்தார். ஒரு சேவைத் தலைவனை இழந்து நம் சமூகம் தவிக்கின்றது. சேவை என்ற நேர்கோட்டில் சளையாது பயணம் செய்தார். அவர் பயணம் செய்த ஒவ்வொரு நேர்கோட்டுப் பாதையும் இன்றும் எம் கண்முன் தெளிவாகத் தென்படுகிறது.

**எஸ். ஜெயசிங்கம்**
*37/06*, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய அன்புத் தெய்வம்

இந்துமகா சமுத்திரம் ஈன்று எடுத்த, இனிய நல்முத்தாம், இலங்கைத்தீவின், வடக்கே பாணர் யாழ்பாடி, பரிசு பெற்ற, யாழ்ப்பாணத்தின் மேற்கே, அமைந்த நாவாந்துறை என்னும், நல் கிராமம் தன்னில், செபஸ்தியாம்பிள்ளைக்கும், சம்பூரணத்திற்கும், மூன்றாவதாகப் பிறந்த வீரா என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டவர்தான் யோசேவ் வீரசிங்கம். இவர் சிறுவயதில் ஆற்றல்மிகு மனிதனாகவும், விளையாட்டு வீரனாகவும், செயல்திறன்மிக்கவராகவும், இருந்ததாக அவரது ஊரவர்கள், சொன்னதை நான் கேட்டேன். இவர் தனது வாழ்நாளில் மாநகரசபை உறுப்பினராகவும், அப்பதவியில் இருக்கும்போது பலர் வாழ்வதற்கு வேலை வாய்ப்புக்கள், பெற்றுக் கொடுத்ததாகவும், வீதிபுனரமைப்பு, ஊரவர்களின் வாசிப்பு அறிவை உயர்ந்த வாசிகசாலையும் இன்னும் பல ஊர்முன்னேற்றத்துக்கு, உதவிகள் செய்ததாகவும், ஊரவர்கள் இவரைப் புகழ்ந்தையும் நானும் கேட்டிருக்கின்றேன்.

எனது சிறுவயதில் இவர் சாட்டி மாதா கோவிலுக்கு வரும்போது வெண்ணிற வேட்டியும், நீண்ட நஷனல் சேட்டும், அணிந்து கம்பீரமாக நடந்து வரும், நடையை நான் பார்த்து, மகிழ்ந்து இருக்கின்றேன். பின் நான் நாவாந்துறைக்கு எனது உறவினர் வீட்டுக்கு, வந்து போகும்போது, இவரது குடும்பத்துடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. நானும் அவரது மகளும் விரும்பியதினாலும், அவர் அதை ஏற்றுக் கொண்டதினாலும், 1987ம் ஆண்டு மாமனாராக முழுமனதுடன் ஏற்றுக் கொண்டேன். அன்று தொடக்கம் அவர் என்னை தனது பிள்ளைபோல் எதுவித குறையுமின்றி கண்போல் காத்து வழி நடத்தி வந்தார். பல இடப்பெயர்வுகள் வந்த போதெல்லாம், ஒன்றாகவே இடம் பெயர்ந்து, ஒரே இடத்தில், சந்தோசமாக ஒன்றாகத் தான் வாழ்ந்து வந்தோம். அவருடன் நான் வாழ்ந்த காலத்தில் எல்லா மருமக்களுக்கும் நல் மாமனாராக இருந்தமையைக் கண்டு பெருமையுற்று இருக்கின்றேன். இவர் தனது பிள்ளைகளை எப்படி கவனித்தாரோ அதேபோல் அவரது பெறாமக்களையும் கவனித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் திருமணம் முடித்து வைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தேன். இவர் இறக்கும்வரை, நான் இவருடன் கூட இருந்து, வாழ்ந்து இவரின் இறுதிச் சடங்குகளிலும், பங்குபற்றி அவற்றை நல்ல முறையில் அவர் அருகில் இருந்து நடத்தினேன். அவரது இறுதி வாழ்க்கையில் பங்கு கொள்ள வைத்த பரமனுக்கு நன்றி நவில்கின்றேன்.

எமது இனிய அன்புத் தெய்வமே சருகாகி கருகாமல் எம் இதயத்தில் வாழ்பவரே குலமகனாய், திருமகனாய், அன்புத்துணைவனாய், பாசமிகு சகோதரனாய், நேசமிகு தந்தையாய், மருமக்களுக்கு நல்ல மாமாவாய் நண்பர்களுக்கு நண்பனாய் உறவினருக்கு நல்ல உறவினராய், உள்ளத்தில் குடிகொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் சிரிப்பும் புன்னகைபூத்த முகத்தையும் எப்பிறப்பில் காண்போம். இனி வருடங்கள் பல சென்றாலும், மாறாது உங்கள் நினைவுகள்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**பிள்ளையினார் குணசிங்கம்**
மருமகன்
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் யாழ் உதவி மேயர், சமாதான நீதவான், முன்னாள் நாவாந்துறை சென். மேரீஸ் ச. ச. நிலைய தலைவர், அமரர் செ. யோ. வீரசிங்கம் அவர்களின் 14ம் ஆண்டு நினைவு அஞ்சலி

சீர்புகழ் யாழ். நகரின் சிறந்த தன் நாவாந்துறையில்
ஊர்புகழ் பாடும் உன்னத இரத்தினம் - சம்பூரணத்தின்
பேர்புகழ் ஓங்கவென்றே பெருமகனாய் உதித்த
பார்புகழ் வீரா உம் மறைவு பெரும் அதிர்வு எமக்கு.

நற்சிறு வயது தன்னில் நல்லொழுக்கத்துடன் கல்விஷ
கற்றது புனித சம்பத்திரிசியார் கல்விக் கூடம் தன்னில்
பெற்றிடு புகழில் சமூக சேவையில் காலம் கழித்து
மற்றவர் போற்றிடவே மாண்புடன் உயர்ந்து நின்றீர்.

சிறந்த மதியோடு சீரிய குணமும் கொண்ட உன்னை
சமூகத் தலைமையோடு சமாதான நீதவான் உதவி முதல்வர்
உயர்ந்தவர் நட்பும் உன்னை உன்னதமாய் தேடிவந்ததே
உன்புகழ் நிலைத்ததோடு ஊருக்கும் பெருமை தந்தீர்.

பெற்ற பெரும் தாய்தந்தை பேருவகை கொண்டிடவே
உற்ற உம் பிள்ளைகள்போல் எம்மை பேணியே காத்திட்டீர்
உற்றவர் உறவினர்க்கும் உதவிகள் கோடி செய்வீர்
மற்றவர் குறையைக்கூட மறுவின்றித் தீர்த்திடுவீர்.

ஆற்றிய பணிகளுக்கும் அரும்பெரும் சேவைகட்கும்
மாற்றீடு எதுமில்லை வீரா மண்ணிலே உம் மறைவால்
போற்றியே சீனிஐயா உம் பெருமை என்றும்பாடி சாற்றுவோம்
உன் பெயரில் புகழ் அஞ்சலி என்றும்.

உங்கள் புகழ் அஞ்சலிபாடும்
**துரைசிங்கம் பிள்ளைகள்**
**அமலசிங்கம் பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்கு இதய அஞ்சலி

அன்பிற்கும் பாசத்திற்கும் இருப்பிடமாய் இருந்து
நாமெல்லாம் நல்வாழ்வு வாழ நாடி நின்ற எம் உயிரே
பலபேர் வாழ்வுக்கு நீ வாழிகாட்டினாய்,
நேற்றுவரை நடந்ததெல்லாம் நினைப்பதில்லை.

அகலாத ஒளி விளக்காய்
அன்பின் உறைவிடமாய்
என்றும் எங்கள் நெஞ்சில்
உங்கள் நினைவு நிறைந்து நிற்கும் எங்கள் ஐயாவே
கண்ணயர்ந்து போனாலும் எங்கள் ஐயா காணவில்லை உன்
உருவம்
பல ஆண்டுகள் சென்றாலும் உன் திருமுகம்
எங்களை விட்டு நீங்காது ஐயா.

அன்போடு பாசமாய் எம்மை அணைத்த ஐயா
பெறுதற்கரிய கல்விதனை பெற்றிட வழிசமைத்த ஐயா
பக்குவமாய் வாழ வழிகள் உரைத்த ஐயா
பெருமையோடு நாளும் பொழுதும் எமக்காய்
உழைத்த ஐயா.

ஆற்றலும் அறிவும் பண்பும்
அனைத்திற்கும் மேலாம் அன்பும்,
போற்றிடும் குணங்கள் பொருந்திய நிறைபண்பாளன் ஐயா
நீங்கள்
நம் நாவாய் மண்ணையே உன் நல் சமூக சேவையால்
வெளிக் கொணர்ந்த பெருந்தகை ஐயா நீங்கள்.

தங்கமனம் கொண்ட தந்தையாய்
நாடு போற்றிய நல் மகனாய்
எல்லாமுமாக எமக்கிருந்த சொந்தமே
எந்நாளும் எங்களைக் காத்திடும்
தெய்வம் நீங்கள் தான் ஐயா
இனித் தொடரும் நினைவுகள் எல்லாம் உன்
நாமம் போற்றி நிற்கும்

உங்கள் அன்பு மூத்தமகள்
**குணசிங்கம் சிங்கராணி**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தந்தையின் நினைவுகள்

நிமிர்ந்த எடுப்பான உடற்தோற்றமும், மிடுக்கான நடையும், பார்ப்பவர்களைக் கவரும் அவரின் வதனமுகமும், ஏறுநெற்றியில் அவரிடும் சந்தனமும், அவர் அணியும் தமிழ் கலாச்சார உடையும், என்னை மட்டுமல்ல பார்ப்பவர்கள் எல்லோரையுமே கவர்ந்திருக்கும்.

எனது தந்தை நாட்டின் நடப்புக்கள், சமுதாய முன்னேற்றம், இவைகளைப் பற்றி எங்களுடன் உரையாடும் போது, அவரின் நாட்டுப் பற்றையும், சமுதாயச் சிந்தனையையும், கண்டு நான் வியந்திருக்கின்றேன். அப்படி ஒரு உயர் சிந்தனை நோக்கம் கொண்ட இந்தத் தந்தைக்கு மகனாகப் பிறந்ததையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். இது மட்டுமல்ல எனது தந்தையாருடன் கூடப்பிறந்த சகோதரர்கள் மூவர். தந்தையாரின் மூத்த சகோதரர் அமரர் திரு. அல்பிரட் துரைசிங்கம் ஆவார். இரண்டாவது சகோதரர் அமரர் பாலசிங்கம் ஆவார். மூன்றாம் நபர் எனது தந்தையார் அமரர் திரு. வீரசிங்கம், எங்கள் எல்லோரினதும் கடைக்குட்டி சித்தப்பா திரு. அமலசிங்கம் ஆவார். இவர்கள் நால்வரும் பாசத்தின் சிகரமாக வாழ்ந்தார்கள்.

இவர்களில் எனது தந்தையார் தனது சிறுவயதுக் கல்வியை எமது ஊரின் பாடசாலையில் பயின்றார். அதன் பின் தனது உயர்கல்வியை யாழ் நகரின் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாகிய புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார். இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரன். எமது ஊரின் முதல் அரசியல்வாதி. எனது தந்தை என்பதை எனது சமூகம் மட்டுமல்ல. எங்கள் அயல் சமூகங்கள் கூட நன்கறியும்.

இந்த அரசியல் பிரவேசத்தினூடாக எனது தந்தை எமது சமூகத்துக்குச் செய்த நன்மைகள் என்ன என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. எமது சமூகத்தில் உள்ளவர்களே இதை நன்கு அறிவார்கள். எனது நாவாந்துறைச் சமூகம் இந்த வளர்ச்சியில் உள்ளதற்கு எனது தந்தையரின் அரசியல் பிரவேசமே காரணம்.

எனது தந்தையார் எமது சமூகத்திலிருந்து சிறுவயதிலேயே அதாவது தனது இருபத்தியொராவது வயதில் அரசியலுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசித்தார். இரண்டு முறைகள் யாழ் மாநகர சபைத் தேர்தலில் நின்று தோல்வியடைந்தார். இத்தோல்விகளைக் கண்டு சற்றும் மனம் தளராது அடுத்து வந்த தேர்தலில் மூன்றாம் முறை போட்டியிட்டு அதாவது 1968ம் ஆண்டு வெற்றி பெற்று எமது சமூகத்தில் முதல் அரசியல்வாதியாக யாழ் மாநகர சபைக்குத் தெரிவானார். அவரின் நேர்மையான அரசியல் தன்மையால் யாழ் மாநகர சபையின் துணை முதல்வரானார். அதன்பின் சமாதான நீதவானானார். இதைவிட எமது சமூகத்தில் பல முக்கிய பதவிகளைவகித்தார் இதனூடாக தந்தையாரின் பெயர் பிரபல்யமாகி வீரசிங்கம் என்றால் எல்லோருக்கும் அறிமுகமான நபராக விளங்கினார்.

எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தார். தனது குடும்பத்தின் முன்னேற்றத்தில் சிறிதும் அக்கறை கொள்ளாது தனது சமூக முன்னேற்றத்தையே அக்கறையாகக் கொண்டவர் எனது தந்தை. இந்த நேரத்தில் நான் ஒன்றை மட்டும் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகின்றேன். எனது தந்தையாருடன் யாழ் மாநகர சபையின் பிரதிநிதியாகச் சென்ற பலரை எனக்கு ஓளரவு தெரியும். இவர்களின் இந்த அரசியல் பிரவேசத்தினூடாக அவர்களின் குடும்பங்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்த போதும் எங்கள் குடும்பம் ஆரம்பத்தில் எப்படி இருந்ததோ அதேபோல்தான் எனது தந்தையார் இறக்கும் மட்டும் இருந்ததை நான் அறிவேன். அப்படி எனது தந்தை தன் குடும்ப முன்னேற்றத்தை சிறிதும் சிந்திக்காமல் தன் சமூகத்துக்காகவே வாழ்ந்தவர். அவர் தன் குடும்ப முன்னேற்றத்தை சுயநலமாக சிந்தித்திருந்தால் எங்கள் குடும்ப வளர்ச்சியும் வசதியாக அமைந்திருக்கும் என்பதைக் கூறிக் கொள்வதோடு இந்தத் தந்தைக்கு நான் மகனாகப் பிறந்ததையிட்டு பெருமையும் கொள்கின்றேன்.

நன்றி.

என்றும் என் தந்தையின் நினைவில்
**வீரசிங்கம் ஜான்சன்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மண்ணின் மைந்தன் அமரர் S. J. வீரசிங்கம் அவர்களின் சேவைகள்

ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவாந்துறை என்னும் பொன்நகரில் கலங்கரை விளக்காய் திகழ்ந்து ஊரின் வளர்ச்சிக்காக பல அளப்பரிய சேவைகளை ஆற்றி சேவைச் செம்மலாகத் திகழ்ந்தவர் அமரர் S. J. வீரசிங்கம் அவர்களாவர். இவர் 11.11.1934 அன்று இக்கிராமத்திலே அவதரித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

சமூக சேவையை உயர்வாக மதித்ததன் பலனாக இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்ந்தார். குறிப்பாக சமாதானநீதவானாகவும், சென். மேரீஸ் சனசமூக நிலையத்தலைவராகவும், ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும், நாவாந்துறை கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், விளங்கியதுடன் சிறந்த கால் பந்தாட்ட வீரனாகத் திகழ்ந்து எமது கிராமத்தின் விளையாட்டுத்துறையை ஊக்குவித்ததுடன் மெய்வல்லுனர் போட்டிகளிலும் சிறந்து விளங்கினார்.

மேலும் இவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் பற்று உறுதி கொண்டவராகவும் அதனோடு பின்னிப்பிணைந்து தன்னால் இயன்ற வரையில் கட்சியை வளர்க்கப் பெரிதும் பாடுபட்டார். அத்துடன் சமூக சேவையில் ஆர்வம் மேலோங்கியமையினால், மாநகரசபை உறுப்பினராகவும், அதனைத் தொடர்ந்து யாழ் மாநகரசபை உதவி மேயராகவும் விளங்கினார்.

அத்துடன் அமரர் வீரசிங்கம் அவர்கள் பல தசாப்தங்களாக சமூகத்துடன் ஒருங்கிணைந்து வாழ்ந்தமையினால் சமயம், சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை நன்கு விளங்கிக் கொண்டார். இதனால் சமயத்தையும், மக்களையும், முன்னேற்ற பாதையில் வழி நடத்திச் சென்ற ஒரு செயல் வீரனாகவும் விளங்கினார். சமூக சேவையைச் சிறப்பாகச் செய்வதற்கு சனசமூக நிலையத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது உழைத்தார். ஆலயத் திருப்பணிச் சபைக்கு தலைவராக இருந்து அந்த பதவிக்குப் பெருமை சேர்த்த பெரும் பங்காளனாகவும் திகழ்ந்தார்.

இவரிடம் பல ஆளுமைகள் இயல்பாகவே இருந்ததினால் பல பணிகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இவரைப் பற்றிச் சுருங்கக் கூறினால் இவர் ஒரு பல்துறைசார் ஆற்றல்மிக்க ஒரு உயர்ந்த கண்ணியமான மனிதனாகத் திகழ்ந்தமையை காணலாம். அரசியல், சமூகம், சமயம், தொடர்பான சகலதுறைகளிலும் இவரது பணி விரிவடைந்து காணப்பட்டது.

ஒரு சமூக சேவை நலன் கொண்ட தலைவனுக்கு இருக்க வேண்டிய சகல பண்புகளையும் கொண்டு விளங்கியவராக கடைசி வரை இவர் மிளிர்ந்தார். இன்று எமது கிராமமானது ஒரு கண்ணியமிக்க சேவைத் தலைவனை இழந்து தவிக்கின்றது. சேவை என்ற நேர்கோட்டில் அயராது பயணித்த அந்த மாமனிதனின் நேர்கோட்டுப் பாதை இன்னும் எம்கண்முன் தென்படுவதுடன் இவரது அர்ப்பணிப்புமிக்க சேவை எம் யாவருக்கும் ஒரு முன் உதாரணமாக விளங்குகின்றது என்பதை நாம் மறக்கமுடியாது என்பதை நான் அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு
**தொபியாஸ் மரியதாஸ் (மணி)**
3ம் குறுக்குத்தெரு,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தையில் மலரும் எம் தந்தையர் நினைவுகள்

நல்ல பாரதக்கதையில் நான்கு நல்ல தம்பிகளைப்போல நாவாந்துறை எனும் எங்கள் ஊரில் நான்கு நாயகர்கள் ! துரைசிங்கம், பாலசிங்கம், வீரசிங்கம், அமலசிங்கம் என்ற அந்தச் சிநேகச் சிங்கங்களிலே முதல் மூவரும் அமரராய் துஞ்சிவிட எஞ்சி இருப்பவரோ அமலசிங்கம் எனும் அஞ்சாசிங்கம் ஆகிய எங்கள் சிறிய தந்தை. எங்கள் தந்தையர் பெயரிலும், சிங்கங்கள் அதைவிட சகோதரபாசத்திலேயும் ராஜசிங்கங்கள் ! சிங்கங்கள் தனியாகத்தான் வேட்டையாடும் ஆனால் எம் தந்தையாரோ தனியாக வாழ்ந்ததே இல்லை எப்போதும் இவர்கள் இணைபிரிந்ததே இல்லை. இவர்களுக்கு பிள்ளைகளாய் பிறந்ததை எண்ணி நாம் பெருமை கொள்கின்றோம். இந்த நால்வரும் நாலுகால் மண்டபம் போல ஒருவருக்கொருவர் பாசத்தைப் பொழிவதில் மாரிகால மேகங்கள் ! அன்பிலே அடைமழை!

அண்ணன் சொல்லும் வார்த்தையெல்லாம் வேதம் எனும் தம்பியுள்ளம். அண்ணனுக்கு வலித்தால் தம்பியழுவான். தம்பிக்கு வலித்தால் அண்ணன் துடிப்பான்! தரத்திலே தங்கங்கள்! பாசமென்ற அன்பு கயிற்றில் கட்டுண்டு கிடந்த இவர்களிலே துரைசிங்கம் எனும் எனது பெரிய தந்தைக்கு புன்னகை பூத்த முகம். யாவரையும் வசீகரிக்கின்ற தோற்றம் ! நயமான பேச்சு ! அவரை அன்பு செய்யாத உள்ளங்கள் எங்கள் ஊரிலே எவருமே இல்லை. பெரிய அப்பா பெரிய அப்பாதான் ! பெயருக்கு ஏற்றாப்போல, கலையுள்ளம் கொண்ட இவர் "மலர்ந்த வாழ்வு" எனும் நாடகத்தை இயக்கி எம் ஊரவரை அதிலே நடிக்கவைத்து மேடையேற்றிய நாயகன். எங்கள் பெரியப்பா விளையாட்டுக்கழக தலைவராக இருந்த பொழுதுதான் எங்கள் விளையாட்டுக்கழகமான சென். மேரீஸ் கழகம் வடமாகாணத்தில் சம்பியன் கழகமாக முதன்முதலில் பெயர் எடுத்தது. அந்தப் பெருமை எங்கள் பெரியப்பாவுக்கே உரித்தானது.

அண்ணனுக்கு ஏற்றாப்போல தங்கத்தம்பி என செல்லமாய் அழைக்கப்படும் பாலசிங்கம் எனும் பெயர்கொண்ட எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை! பெயருக்கு பொருத்தமாய் அவருக்குள்ளே பொதிந்திருந்த பால்மணம் மாறாத பசிய உள்ளம். அவரோடு பழகியவர் உதிர்ந்திடும் வார்த்தைகள் இவைகளே! இவர் விளையாட்டிலே விண்ணன்! வலது கால் முன்னணி வீரனாய் விளையாட்டிலே காட்டிய விந்தைகளை வியப்பாய் வியந்து போற்றியவர் பலர். எனது தந்தையின் ஊக்கமும் ஆக்கமுமே என்னை ஓர் சிறந்த விளையாட்டு வீரனாக இலங்கை முழுவதற்கும் இனங்காட்டியது ! எனது தந்தையைப்போல எனது விளையாட்டுத் துறையிலே ஆர்வம் காட்டியது எனது சீனிஐயா எனும் சிறியதந்தையாகிய வீரசிங்கம் ! மந்தையிலே நின்றால் வீரபாண்டி தேரைப் போல உயர்ந்து நிற்கும் உயரமான தோற்றம் கொண்ட எனது சீனிஐயா அவரின் உயரத்திற்கு ஏற்றால் போல அவரது உள்ளமும் அதைவிட உயர்ந்தது !

அவரது உயர்ந்த உள்ளத்திற்கும் உயர்வான பண்பிற்கும் உரிமைப்பரிசாக யாழ்ப்பாண உதவி மேயர் எனும் உயர் பதவி அவரை நாடிவந்தது! எங்கள் ஊரிலே எங்களுக்குள்ளே முதல் முதலாக பெரும் பதவி வகித்த பெருமை எங்கள் சீனியையாவுக்கே சொந்தம் ! பதவியை வைத்து பணம் சம்பாதிப்பவர் பலர். இவரோ பதவியை வைத்து சம்பாதித்ததோ பாசமிகு உள்ளங்களைத்தான்! யாழ்ப்பாண உதவிமேயராக இருந்த காலத்திலே சாதி சமயம் பாராது பலருக்கும் வேலை தேடிக் கொடுத்த பரோபகாரன். இவரால் பதவியடைந்தவர் பாரெங்கும் இப்போது பரவி வாழ்கின்றனர். பாருக்கு மட்டுமல்ல எங்கள் ஊருக்கும் நிறையவே செய்திருக்கின்றார். எங்கள் ஊரிலே உள்ள கெனடி வீதியை செப்பனிட்டு தண்ணீர் வசதி செய்து கொடுத்தார். யாழ் நகரிலே உள்ள பல வீதிகளை தனது சொந்தப்பணத்திலே செப்பனிட்டு கொடுத்த செம்மல்! எனது அப்பா வலது கால் முன்னணி வீரர் என்றால் சீனிஐயா இடது கால் முன்னணி வீரராய்த் திகழ்ந்தவர். எனது சீனிஐயா மூலமாகத்தான் நான் யாழ் சம்பத்திரிசியார் சென். பற்றிஸ் கல்லூரியிலே இணைந்தேன். அக்கல்லூரியில் நான் விளையாட்டுக் கழக தலைவனாக மாறியபொழுது எனது ஊர் விளையாட்டு கழகமான St. Marys Sports Club யாழ் கல்லூரி மட்டத்தில் பெயர் பெற்றது. இதனால் எங்கள் ஊரிலே இருந்து பல St. Patrics Collegeயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கினர். இவையனைத்திற்கும் வழிகாட்டியாக இருந்ததே எனது சீனிஐயா எனும் வீரசிங்கம் அவர்கள்தான்!

நல்ல நாயகர் நான்கு பேரிலே எஞ்சியுள்ள எனது சிறிய தந்தை அமலசிங்கமும் விளையாட்டிலே வல்லவர். தம்பிமார் எதிர்சிங்கம், வின்சிங் இருவரின் விளையாட்டு வீரம் இதற்கு விடை சொல்லும். அமலசிங்கமாகிய எனது சிறிய தந்தையின் விளையாட்டுத்திறனை ஒருமுறை ஈழநாடு பத்திரிகை வியந்து எழுதியதை நான் இப்போது நினைக்கின்றேன். விளையாட்டும் வீரமும் மறத்தமிழனின் மங்காச்சொத்து! அந்த வீரமும் விளையாட்டும் எம் ஊரவருக்கு செங்கரும்பாய் தித்திக்கும். இது நாவாய் மக்களின் உயிர்த்துடிப்பு ! பூவாய் காயாய் கனியாய் எந்த வயதானாலும் சரி விளையாட்டு என்று வந்தாலே துடியாய் துடிப்பவர் எம்மவர். தங்களை விட விளையாட்டிலே விஞ்சியவர் எவரும் இல்லை என்ற இறுமாப்பு இவர்களுக்கு ! அது ஏனோ எனக்குள் இன்னமும் இழையோடுகிறது. அதில் இருந்து என்னால் இறங்க முடியவில்லை. அதற்கு காரணம் அமரராய் ஆகிப்போன எம் தந்தையர் ஆசையும் ! எம் மண்ணின் மக்களில் நிலையாய் இடம் கண்ட விளையாட்டு ஆர்வமும் தான் காரணம். அமரராய் ஆகிப்போன எம் தந்தையர் ஆசைகளை நிஜமாக்க முனைவதில் நானும் என் உடன் பிறப்புகளும் எந்நாளும் உவகை கொள்வோம்!

லண்டனில் இருந்து பாலசிங்கம் பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் சார்பில்
**Francis Balasingham**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் பதிவில்

எங்கள் தந்தை எம்மைவிட்டு பிரிந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாக கடந்து விட்டது. ஆனாலும் அவரது நினைவுகள் என்னில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துள்ளன. அவற்றிலிருந்து சில துளிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். நாங்கள் ஆறுபிள்ளைகள். மூவர் பெண்கள். மூவர் ஆண்கள். இவர்களில் நான் இளையவன். எங்கள் அறுவர் மீது அபரீதமான பாசம், பரிவு அவருக்கு. வீட்டிற்கு வெளியே அலுவல்கள் நிமித்தம் சென்று விட்டு களைப்புடன் வீடு திரும்புவார். வந்தவுடன் முதலில் எங்கள் ஆறு பேரையும் பெயர் கொண்டு அழைப்பார். ஒருத்தர்கூட இல்லாவிட்டாலும் அவரையும் தேடி வீட்டுக்கு அழைத்து வந்து விடுவார். பெரும்பாலும் எனது தந்தை நான் சாப்பிடும்போது தன்னுடன் சேர்ந்து எங்களுக்கு உணவு பரிமாறி வைத்து ஊட்டிவிடுவது எனக்கு மிகவும் பிடித்த ஒன்று.

1972ம் ஆண்டு அப்போது எனக்கு ஆறு வயதிருக்கும். என் தந்தைக்கு யாழ் மாநகர சபையில் யாழ் மாநகர மேயர் அல்பிரட் துரையப்பாவால் உதவி முதல்வர் பட்டம் அளித்து வரவேற்றதையும், யாழ் மாநகர சபை ஊழியர்கள் எம் ஊரவர்கள், இன்னும் பலர், மாலை அணிவித்தும் துணை முதல்வர் ஆசனத்தில் இருந்து தனது முதல் தலைமையுரையை நிகழ்த்தியதும், என் மனக்கண் முன் நிற்கின்றது. அந்நேரத்தில் அங்கு நின்ற பிரமுகர்கள், யாழ்மாநகர சபை உறுப்பினர்கள், மேயர் உட்பட பலர் என் தந்தையின் பேச்சுத் திறனையும், நிதானத்தையும், அறிவற்றாலையும், பொறுமையையும் கண்டு பிரமித்துப் போனார்கள். எம் ஊரவர்கள், அயல் ஊரவர்கள், யாழ் மாநகர சபை உறுப்பினர்கள், மேயர் உட்பட பலர் செல்லமாக என் தந்தையை வீரா என்று தான் அழைப்பார்கள். இவைகள் இன்றும் என் நினைவில் நிற்கின்றன.

நான் சிறு குழந்தையாக இருந்தபோது ஐயா சோறு ஊட்டுவதும், பாட்டுப் பாடுவதும் நான் வளர்ந்தபின் நண்பனாக அவர் பழகியதையும், என்னால் உணர முடிந்தது. எங்கள் ஐயா எம்மீது வைத்துள்ள பாசத்தையும், பரிவையும் அளவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிறுவனாய் இருந்தபொழுது விசநட்டுக்காலிப்பூச்சி என் காலில் கடித்து விட்டது. கால் வீங்கி காய்ச்சல் தொடங்கியது. அம்மா அழுது விட்டார். ஐயா துடித்துப் போனார். அன்றிரவு நித்திரை கொள்ளக்கூடாதென மருத்துவர் கூற என்னைத் தேற்றி அணைத்து இரவு முழுவதும் நடையாகவும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு விடியும் வரையும் விழித்திருக்க வைத்ததையும் என்னால் மறக்க முடியாது. என்னில் அவர் காட்டிய பாசத்தையும், நேசத்தையும், பண்பையும், பரிவையும் குணத்தில் கோபுரமாய், திகழ்ந்ததையும் எண்ணி அகமகிழ்கின்றேன்.

என் தந்தை சமூக சேவையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். எம் மக்களுடனும் அயலவருடனும் சாதி, மத, பேதமின்றி பாசத்துடனும், இன்முகத்துடனும், புரிந்துணர்வுடனும், பழகியது அவரில் நான் கண்ட சிறப்பு அம்சங்களாகும். உதாரணத்துக்கு யாழ் பண்ணைத் துறையில் ஒரு முதியவர் தேநீர் கடை வைத்திருந்தார். என் தந்தை எனது சிறுவயதில் என்னையும் அழைத்துக் கொண்டு அக்கடைக்குச் செல்லும் போது அந்த முதியவர் என் தந்தையைக் கண்டதும் எழுந்து மரியாதையாகவும், இன்முகத்துடனும் வரவேற்று உபசரிப்பார். இது ஏன் என்பதை அறிந்து கொள்ள முயன்றேன்.

ஐயா அந்த முதியவருக்கு யாழ் மாநகரசபை மூலம் காலவரையின்றி கடை நடத்தும் உரிமையை எடுத்துக் கொடுத்ததை அறிந்தேன். இப்படிப் பார்க்கும்போது, எந்த விதத்திலும் வேறுபாடு காட்டாது என் தந்தை செயலாற்றியதை அறிந்து உள்ளம் பூரித்துப் போனேன். என் தந்தை யாழ் மாநகர சபை உறுப்பினராகவும், உதவி மேயராகவும், கடமையாற்றிய காலங்களில் யாழ் மாநகர சபையின் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு நானும் என் சகோதரிகளும் அவருடன் பங்கு பற்றி மகிழ்ச்சியடைந்தோம். எங்கள் தந்தை யாழ் கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பணிப்பாளாராக இருந்து கடமையாற்றிய போது எம் ஊரில் சிலருக்கும், அயல் ஊரின் சிலருக்கும், போட் இஞ்சின் எடுப்பதற்கு ஐயாவுடன் நானும் கொழும்பு சென்று அவற்றையும் எடுத்துக் கொண்டு அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வீட்டுக்குச் சென்று அங்கு ஐயாவையும் எங்களையயம் இன்முகத்துடன் ஜீ.ஜீ.வீட்டார் வரவேற்றதையும், அறிந்து ஐயா தலைவர் மீதும் கட்சி மீதும் வைத்திருந்த பற்றை உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தை எங்கள் மீது எந்த திணிப்பையும் செய்யமாட்டார். பாராளுமன்றத் தேர்தல் தொடக்கம் கிராம சனசமூக நிலையத் தேர்தல் வரை எங்கள் விருப்பப்படி வாக்களிக்க கருத்துரை வழங்க இடமளித்த ஓர் ஜனநாயகவாதியாகக் கண்டேன். அவரது சேவைக்காக J. P. பட்டமளிப்பு விழா நடைபெற்ற போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்ததையும் கண்டு ஆனந்தமடைந்தேன். கண்ணீர் வடிக்கின்றேன். விதையின்றி விருட்சமில்லை. வித்தின்றி சக்தியில்லை, எம் பிறப்புக்கு வித்தாகி, நாம் பெருமையுடன் வாழ்வதற்கு அயராது பாடுபட்ட அன்புருவம், அன்பிற்கு அர்த்தம் சொல்லி, அருமையாய் எமை வளர்த்து, கண்டித்தும் கருணையோடும், கனிவான உரையினோடும், நல்லதெது தீயதெது என நாள்தோறும் தெளியவைத்து, நேரான பாதையிலே நாம் நடக்க வேண்டுமென்று, தான் நடந்து வழிகாட்டி தத்துவங்கள் எமக்குரைத்து, சீராக வாழ வைத்த ஓயாது பாடுபட்ட உத்தமர் என் தந்தை. எங்களுடைய தற்போதைய கனடா வாழ்க்கையில் ஐயா எங்களோடு நீங்கள் இல்லையே என்ற ஆதங்கம் மேலோங்கி நிற்கின்றது. தந்தையே நீங்கள் விட்டுச் சென்ற பணிகளை பிள்ளைகளாகிய நாங்கள் தொட்டுத் தொடருவோம் எனக்கூறி உங்கள் ஆன்மா விண்ணுலகில் ஒன்றித்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்புடன் மகன்
**வீரசிங்கம் ராஜன்**
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது நினைவுகளை மறப்போமா

பிஞ்சு வயது முதல்
கொஞ்சி எம்மை வளர்த்து,
தஞ்சம் எமக்களித்த
குஞ்சி ஐயாவே
நெஞ்சம் இருக்கும்வரை
நீங்காது உம் உருவம்
எஞ்சிய காலமெல்லாம்
ஏங்கியே நினைவு கொண்டோம்

பிள்ளைகள் என்று
பெருமையாய் எமையழைத்து
அள்ளியே வளர்த்தீரையா
உன் நாமத்தை - எப்படி
மறப்போமையா

இடுக்கண் எம்மை சேராமல்
என்றுமே பேணிக் காத்து
நெடுங்காலம் வாழ்வளித்தீர்
நெஞ்சமதை மறப்போமா

உங்கள் நினைவுகளுடன்
**தேவரெட்ணம் மனோன்மணி.**
**நாவாந்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உணர்வின் வரிகள்

அலை வந்து கரை தழுவி முத்தமிட்டு மீளும் கவின்மிகு கடலோரம், யாழ் மண்ணின் தென்மேற்கு எல்லைப் புறமாக உள்ளது. அந்தச் சிற்றூர் தேவாலய மணியோசையும், பரலோக அன்னையின் அரவணைப்பும் தேவமைந்தனின் அருளும், பெற்ற நாவாந்துறை மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்த ஒன்றாகும். இந்த ஊரிலே கலைகளுக்கும் எழிலார்ந்த இயற்கை வனப்புக்கும் பஞ்சமேயில்லை. அத்தகைய பெருமைமிக்க மண்ணுக்கும் அந்த ஊரின் மக்களுக்கும் பெருமை சேர்த்த மனிதநேயம் கொண்ட பல்துறைச் செம்மல் எனது சீனியண்ணன் (வீரசிங்கம்) அவர்கள். நான் நாவாந்துறையில் அவர்களுடன் வாழ்ந்த காலங்களில் எனது சின்னண்ணன் (பாலசிங்கம்), சீனியண்ணன் (வீரசிங்கம்) இவர்கள் இருவரும் அதிகாலை 5மணிக்கு எழுந்து ஒன்றாகவே சேர்ந்து மரியன்னை ஆலயம் சென்று இறைவனை வேண்டி செபித்து விட்டு பெரியண்ணன் (அல்பிரட் துரைசிங்கம்) அவர்களின் வீடு சென்று அம்மாவையும் நலம் விசாரித்து விட்டு இருவரும் பெரியண்ணனுடன் நாட்டின் நடப்புக்கள் பற்றியும் முன்னேற்றங்கள் பற்றி, அரசியல், பொதுத்தொண்டுகள், விளையாட்டுக்கள் பற்றியும் அவருடன் கலந்தாலோசித்துப் பேசுவார்கள்.

பின்பு பெரியண்ணனின் அறிவுரைகளைக் கேட்டுத்தான் பொதுவிடயங்களில் செயல்படுவார்கள். இது அந்தக்காலம் தொட்டு அவர்களுக்குள் இருந்து வந்த பழக்கம். எனது தந்தை ரெத்தினம் சமூக முற்போக்குவாதியாக இருந்ததினால், அவர் கூடுதலாக எம் ஊரைத் தவிர்ந்த வெளியிடத்தைச் சேர்ந்தவர்களுடன் அதிகமான பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். இதனால் அவருக்கு பல அறிவாளிகள், அரசியல்வாதிகள், சட்டத்தரணிமார்களுடன் அறிமுகமானார். அந்தக் காலகட்டத்தில் ஓரேயொரு தமிழ் கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்து ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஆதரவையும் பெற்று தம் மைந்தர்களையும் அக்கட்சியில் இணைய வழிவகுத்தார். அதேபோல் அவர்களும் அக்கட்சியின் தூண்களாக விளங்கினார்கள். எனது தந்தை ரெத்தினம் சட்டத்தரணிமார்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்த காரணத்தினால் பலபேருக்கு வழக்குகள் எடுத்துக் கொடுத்து கோட்டில் புறோக்கராக வேலை செய்தவர். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைப் போல் எனது சகோதரர்களும் அரசியல், சமூகசேவை, பொதுத் தொண்டுகளில் ஈடுபாடு கொண்டவர்கள் ஆனார்கள். இதில் பெரியண்ணனும் (துரைசிங்கம்), சீனியண்ணை (வீரசிங்கம்) இவர்கள் இருவரும் கல்வி, சமூகசேவை, பொதுத்தொண்டு, அரசியல், இவைகளில் விசேடமாக துடிப்பானவர்களாய்த் திகழ்ந்தார்கள்.

எனக்கு பத்து வயதிருக்கும் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது அஞ்சல் ஓட்டப்போட்டியில் பங்குபற்றினேன். அப்போது எனது சகோதரர்கள் நீ நன்றாக ஓடி முதலாம் இடத்தைத் தட்டிக்கொள்ள வேண்டும் என்று உச்சாகப்படுத்தினார்கள். நானும் ஓட்டப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்றேன். அவர்களுக்கு மிக்க சந்தோஷம். எனது கலையார்வத்தைக் கண்டு என்னை "வீழ்ச்சி" நாடகத்தில் மதிவாணன் என்ற பாத்திரத்திற்கும், "செபஸ்தியார்" நாடகத்தில் கட்டியகாரருக்கும் சென்மேரீஸ் சனசமூக நிலையம் நடாத்திய விநோத உடைப்போட்டியில் பிச்சைக்காரராக நடிக்க வைத்தார்கள். எனது நடிப்பாற்றலைக் கண்டு எனது சகோதரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அப்போது எம் ஊர் மக்களின் பாராட்டுதலையும் பெற்றேன். இப்போதும் இந்நிகழ்வுகள் என் மனத்திரையில் ஓடுகின்றன.

இன்றைக்கு 45 வருடங்களுக்கு முன்பு பெரியண்ணன் (அல்பிரட் துரைசிங்கம்) சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்தில் இணைந்து, செயலாற்றியும், விளையாட்டுத் தலைவராகவும் இருந்த காலகட்டத்தில் சென்மேரிஸ் விளையாட்டு கழகத்தை முன்னுக்குக் கொண்டு வந்தும் நம் ஊருக்கு வெளியேயுள்ள சமாசங்களுடன் இணைத்து விளையாடியும் முதல் சம்பியன் எடுக்க வழி வகுத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு எனது சீனியண்ணன் (வீரசிங்கம்) எம் ஊரின் முதல் அரசியல் வாதியும் எம் ஊரைத் தன் சமூக சேவையால் மிளிரச் செய்தவரும் இவரே. இவரைப் போல் இன்றுவரையும் யாரும் எம் மண்ணை சமூக சேவையால் மிளிரச் செய்யவில்லை என்பதை இங்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் வன்னியிலிருந்து நாவாந்துறைக்கு வந்து போகும் போது மனுவேற்பிள்ளை (அருள்ராஜா) அண்ணனை நாவாந்துறையில் பல தடவை சந்தித்து கடந்த கால நினைவுகளை பகிர்ந்து கொண்ட போது அவர் சொன்னார் நாம் எல்லோரும் ஒரே சகோதரர்களாக இருந்தோம். எப்போதும் பெரியண்ணனின் அறிவுரை கேட்டும் மதிப்பளித்தும் ஒற்றுமையுடன் வாழ்ந்தோம். அதே போல் வீரசிங்கம் அண்ணன் தான் நாவாந்துறைக் கிராமம் ஒன்று இருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை வெளிஉலகுக்கு கொண்டு வந்தவர் என்றும் அவர் கொழும்பில் இறந்த செய்தி அறிந்தும் என்னால் பங்கேற்ற முடியாத நிலை. நான் மேரிப்பிள்ளை மச்சிக்கு அண்ணனைப் பற்றி பெரிய மடல் வரைந்தனான் என்று எனக்குச் சொல்லி தாம் எல்லோரும் சகோதர பாசத்தில் சளைத்தவர்கள் இல்லை என்றும் சொல்லி கவலையடைந்தார்.

அத்தோடு நம் எல்லோருக்கும் ஒரே சகோதரி நம் புனிதம் அக்கா தான். இவ எங்கள் எல்லோரிலும் அபரீத பாசமும் அக்கறையும் கொண்டவர் என்று சொல்லி இன்னும் பல விடயங்களைப் பற்றி கதைத்து மகிழ்ச்சியடைந்தோம். அத்தோடு எனது மச்சி மேரிப்பிள்ளைப் பற்றி சில வார்த்தைகள் பாசத்தின் சிகரம், அடக்கத்தின் பெட்டகம், பரிவின் உறைவிடம், எம்மேல் அன்பும் பரிவும் கொண்டவர், என் சகோதரனுக்கு ஏற்ற துணைவியாக எளிமை, பாசம், பொறுமை, விட்டுக்கொடுத்தல், அன்பால் பிரகாசிக்கும், முகத்தோடு வீட்டுக்கு வருவோரை இன்முகத்துடன் உபசரித்து மற்றவர்களுடன் இனிமையாக பேசுவது இவரின் குணதிசயங்களாகும்.

எனது பெரியண்ணன் (அல்பிரட் துரைசிங்கம்) விளையாட்டுத் தலைவராய் இருந்த பொழுது நானும் சின்னண்ணனும், சீனியண்ணனும் 1960ம் ஆண்டு தொடக்கம் 1965ம் ஆண்டு வரையும் மூவரும் சென்மேரீஸ் விளையாட்டு கழகத்தில் ஒன்றாக விளையாடினோம். அதேபோல் எனது சகோதரர்களின் பிள்ளைகள் ரெட்ணசிங்கம், எதிர்சிங்கம் எனது மகன் வின்சிங் இவர்களின் விளையாட்டுத் திறமை யாழ் மாவட்டத்திலும் அகில இலங்கை முழுவதிலும் பேசப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தற்போது நான் இடம் பெயர்ந்து நாவாந்துறையில் இருக்கின்றேன். அவர்கள் இல்லாமல் இங்கே தனிமையில் இருக்கும்போது என் மனம் வேதனை அடைகின்றது. என் மனக்கண் முன் பழைய நினைவுகள் ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்கள் இல்லா இந்த ஊர் எனக்கு சூனியமாகத் தெரிகின்றது. என் சகோதரர்களின் பணியை எம் பிள்ளைகள் தொடர்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனது சகோதரர்களின் ஆன்மா விண்ணில் ஒன்றித்து இருக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**அன்புடன்**
**தம்பி**
**ரெட்ணம் அமலசிங்கம்**
**(நாவாந்துறை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலம் கருதாத தனிப்பெரும் தலைவன்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல் (குறள்)

தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழல்லாது உலகத்தில் இறவாது நிற்பது வேறொன்றுமில்லை என்கிற வள்ளுவரின் கூற்றுக்கு அமைவாக அமரர் செ.யோ.வீரசிங்கம் அவர்களின் புகழானது காலத்தால் அழியாது நிலைத்து நிற்பதற்கு அவரது வாழ்வும், சமூகப்பணிகளுமே, சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

யாழ்ப்பாணம், நாவந்துறை மண்ணிலே தோன்றிய அருந்தவப் புதல்வன் அமரர் வீரசிங்கம் அவர்கள் தனது இளமைக் கல்வியை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கற்று முடித்த அவர், அவர் கல்விக்குத் தகுந்த அரச உத்தியோகங்கள் பார்க்கக் கூடிய பல வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றை விடுத்து, சிறுவயது தொட்டு அவருக்கிருந்த சமூகப்பற்று காரணமாக, சேவை ஒன்றையே தனது தாரக மந்திரமாக மனதில் வரித்து, சமூகத்தை நேசித்து, சமூக முன்னேற்றத்தையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த ஒரு சமூகப்பற்றாளன். இளம் வயதிலேயே சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தின் அங்கத்தவராக சேர்ந்து தமது சமூக வாழ்வை ஆரம்பித்தவர். அவரது கல்வி அறிவும், பொது அறிவுடன் கூடிய மதிநுட்பமும், அவரது சீரிய கருத்துக்கள் நிறைந்த பேச்சு வன்மையும், துணிந்த மனப்பான்மையும், அமைதியான சுபாவமும் அவரை சமூகத்தின் மத்தியிலே உயர்நிலைக்கு கொண்டு சென்றது. அவரது தன்னலமற்ற சேவை மனப்பான்மையோடு கூடிய அனைத்து நற்குணங்களும், ஆற்றல்களும் அவரை சமூகத்தை தலைமை தாங்கி நடாத்தக்கூடிய நிலைக்கு மாற்றியது. சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, அதனைச் சிறப்பாக நடாத்தியதோடு, சமூகத்தையும் வழிநடத்திச் செல்லுக்கூடிய வல்லமை உடையவராகவும் அவர் திகழ்ந்தார். அத்துடன் சென்.மேரிஸ் ஆலய பங்குச்சபையிலும் அங்கத்தவராக வகித்து அதிலும் சிறப்பாகச் செயல்பட்டார். இளவயது முதல் சிறந்த உதைபந்தாட்ட வீரராக விளங்கி, நீண்ட காலங்களாக சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை மிகச்சிறந்த நிலைக்கு உயர்த்திய வீரர்களுள் அவரும் ஒருவர்.

தனது சமூக மக்களின் முன்னேற்றத்தையே தனது வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த அவர், மக்களின் அன்றாட தேவைகளுக்காக அரச அதிபர் காரியாலயம், உப அரசஅதிபர் காரியாலயம், கிராமசேவகர் அலுவலகம், பொலிஸ் நிலயம், நீதிமன்றம், வைத்தியசாலை, காணிக்கந்தோர் போன்ற மக்களின் அத்தியாவசிய அன்றாட தேவைகளை அவர்களுடன் சென்று நிறைவேற்றி வைப்பார். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மக்களுக்கு மட்டுமல்லாமல் அயல் கிராமங்களில் உள்ள மக்களுக்கும் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து வந்தார். இயல்பாக அரசியலில் அவருக்கு இருந்த ஆர்வமும், பெரும் அரசியல் தலைவர்களோடு அவருக்கிருந்த தொடர்புகளும், ஊர்மக்களிடமும் ஏனையவர்களிடமும் அவருக்கு இருந்த மரியாதையும், நன்மதிப்பும் காரணமாக மக்களின் வற்புறுத்தலின் காரணமாக யாழ்.மாநகராட்சி மன்றத் தேர்தலில், நாவாந்துறை வட்டாரத்தில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல், அதிலிருந்து எதையும் தாங்கும் மனப்பக்குவத்தையும் பெற்று, தோல்விகளையே தனது வெற்றிப்படிகளாக ஆக்கி, இரவும் பகலும் தனது சமூகப் பணிகளை தொடர்ந்தார். அடுத்து வந்த தேர்தலில் அவருக்காக ஊர் மக்களும் கடுமையாக உழைத்தனர். முயற்சி திருவினையாக்கும் என்கின்ற முதுமொழிக்கிணங்க 1968ல் நாவாந்துறை வட்டாரப் பிரதிநிதியாக யாழ்.மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்.மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு அவரது அரசியல் பணிகளும், சமூகப்பணிகளும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றது. தனது வட்டார மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அல்லும் பகலும் உழைத்தார். அவரது அயராத முயற்சிகளின் பலனாக நாவாந்துறை வட்டாரத்தில் புதிதாக வீதிகள் அமைக்கப்பட்டன. பழைய வீதிகள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டன. புதிதாக வடிகால்கள் அமைக்கப்பட்டன. புதிதாக மின்சாரக் கம்பங்கள் நாட்டப் பெற்று மின்விளக்குகள் பொருத்தப்பட்டு வீதிகளுக்கு ஒளியூட்டப்பட்டன. பொது மலசலகூடங்க்ள புனரமைப்புச் செய்யப்பட்டன. புதிதாக குடிநீர் குழாய்கள் பொருத்தப்பட்டு மக்களின் குடிநீர் தேவைகள் நிறைவேற்றபட்டன. வட்டாரம் முழுவதும், குப்பைகள், கழிவுகள் ஒழுங்கான முறையில் கிரமமாக அகற்றப்பட்டு, கடற்கரைகளில் போடப்பட்டு, மண் போடப்பட்டு துப்பரவுடன் அழகுபடுத்தப்பட்டன. இதைத் தவிர படித்த இளைஞர்களுக்கு பல்வேறு அரச, கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலை வாய்ப்புக்கள் எந்தவித சாதி, சமய, சமூக பாகுபாடுகளின்றி அவரால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

வட்டார மக்களின் நன்மதிப்புடன், யாழ். மாநகர முதல்வர், மற்றும் சகவட்டடார அங்கத்தவர்களின் மதிப்பையும் மரியாதைகளையும், தமது வட்டாரச் சேவைகளில் மட்டுமன்றி, நகரின் வளர்ச்சிகளில் காட்டிய அக்கறை, ஆர்வம் காரணமாக உதவி முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். இதனால் அவரது அரசியல் அந்தஸ்து உயர்ந்தது. தொடர்ந்து அவர் ஆற்றிய பணிகளையும், தன்னலமற்ற சேவைகளையும் கருத்தில் கொண்டு அன்றைய அரசாங்கத்தினால் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் அவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. தமக்க கிடைத்த உயர் பதவிகள், பட்டங்களினால் மேலும் தமது பணிகளை எந்தவித தன்னலமும் பாராது, மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தி, ஓய்வு ஒழிவு இன்றி உழைத்தார். அவரது வீடு எந்த நேரமும் மக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பப் பெற்றிருக்கும். அயல் மக்கள் கூட எந்தவித தடையுமின்றி அவரைச் சந்தித்து, தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவர். இவ்வாறு பொதுத்தொண்டை மட்டுமே தனது வாழ்வாகக் கொண்டு செயல்பட்ட அவரால் தனது பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க முடியவில்லை. தனது குடும்ப வாழ்வை மேம்படுத்த அவரால் முடியவில்லை. தொடர்ந்தும் ஓலை வீட்டிலேயே தனது குடும்பத்தோடு, பெரும் போராட்டங்களோடு தனது வாழ்வை நடாத்தி வந்தார். தான் உயர் பதவிகளை வகித்த காலங்களில் மக்கள் சேவை மட்டுமே தனது வாழ்வு என்று வாழ்ந்த தன்னலமற்ற சேவையாளன். தனது பிள்ளைகளை நன்கு கல்வி கற்க வைத்து, அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்த பின்பு தான் அவரது பொருளாதார கஷ்டங்கள், சுமைகள் அவரைவிட்டு சிறிது சிறிதாக விலகிக் கொண்டது.

அமரர் வீரசிங்கம் அவர்களின் வாழ்வில் அரசியல் பணிகளும், சமூகப்பணிகளும் இரண்டறக் கலந்து விளங்கி வந்தது. ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக தன் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்ட ஒரு எளிமைப் பங்காளன். தனது சமூக மட்டத்தில் அவர் வகிக்காத பதவிகளே கிடையாது. ஒரு தனி மனிதன் இவ்வளவு பதவிகளையும் காலத்துக்கு காலம் மட்டுமன்றி ஒரே வேளைகளிலும் வகித்து வந்துள்ளான் என்றால் அது அமரர் வீரசிங்கம் மட்டுமே. நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலைய தலைவர், நிர்வாக உறுப்பினர் பதவிகள், சென்.மேரிஸ் கோவில் சபை உறுப்பினர், சென்,மேரிஸ் அபிவிருத்திச் சங்கம், சென்.மேரிஸ் இணக்கசபை, நாவாந்துறை றோ.க.வித்தியாலய பெற்றோர் - ஆசிரியர் சங்கம், நாவாந்துறை றோ.க.வித்தியாலய அபிவிருத்திச் சங்கம், யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி, யாழ்.போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர், வடமாகாண கடற்றொழில் விரிவாக்க சங்கப் பிரதிநிதி இன்னும் பல பதவிகளை அவர் வகித்ததே அவர் மீது, சமூகம் கொண்டிருந்த நம்பிக்கையும், மரியாதையும், நன்மதிப்பும் நன்கு விளங்கும். இத்தகைய பதவிகளை வகித்த அவரின் வாழ்வு முழுவதும், சமூகப்பணிக்கே அர்ப்பணிக்கப்பட்டது என்பதை மறக்க முடியாது.

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து – (குறள்)

தான் பதவி வகித்த ஸ்தாபனங்களில் அவர் எடுத்துக் கையாளும் விடயங்களும், அதன்பால் அவர் வைக்கும் கருத்துக்களும், எவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருக்கும். அவரது சொல் வன்மையும், கருத்தாழமையுமிக்க பேச்சுக்களும், அவர் மீது மாற்று கருத்துக் கொண்டவர்களையும், அவர்பால் ஈர்க்கும் வல்லமை கொண்டது. அவரது வாதாடும் திறமையும், அவர் கையாளுகின்ற சொற்களும் ஏனையவர்களால் வெல்ல முடியாதவைகளாகவே இருக்கும். அவரது வாதமும், முடிவாக கூறும் கருத்துக்களும் தீர்வுகளுக்கு இறுதியாகவே விளங்கும். பொதுக்கூட்டங்களில் அவர் ஆற்றும் உரைகளில் கல்வி முக்கிய இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். அத்தோடு சமூக ஒற்றுமை, சமூகப்பணி என்பனவைகளும் பிரதான கருத்துக்களாக விளங்கும்.

ஊர் மக்களிடையே ஏற்படுகின்ற தனிப்பட்ட பிணக்குகளை கூட அவர் தனியாக நின்று நியாயங்களைக் கூறி அவைகளை தீர்த்து வைப்பதிலும் மிகவும் வல்லவர். அவருடைய கருத்துக்களுக்கு எதிரிகள் கூட மதிப்பளித்து நடப்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் காணமுடியும். சமூகத்தின் தேவைகளை, மாநகர முதல்வர், அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர், மாநகர ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், கடற்றொழில் ஆணையாளர் மற்றும் யாழ். மேற்றிராணியார் போன்ற முக்கிய பிரமுகர்களை சந்தித்து, கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை செய்து முடிப்பதற்காக ஊரிலுள்ள அனைத்து ஸ்தாபனங்களின் குழுவில் அவர் நிச்சயமாக இடம் பெறுவது ஒன்றே அவரது திறமைக்கும், சமூகசேவைக்கும் சான்றாக விளங்குகின்றது. தனது தனிப்பட்ட அரசியல் செல்வாக்கினால் முக்கியமான பல அமைச்சர்களைக் கூட நாவாந்துறை மண்ணிற்கு அழைத்து வந்து மக்களின் குறைகள், தேவைகளை முன்வைத்து, அவற்றை நிறைவேற்ற வழி அமைத்துக் கொடுத்தமை இன்னமும் மறக்க முடியாத சம்பவமாகும்.

தனது சிறந்த சமூக சேவைகளினால் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, அரச ஸ்தாபன அதிகாரிகள், உத்தியோகத்தர்களிடமும் தனது மதிப்பையும், செல்வாக்கையும் உயர்த்திக் கொண்டதோடு, நாவாந்துறை என்கின்ற ஊருக்கும் மதிப்பும், மரியாதையும் கிடைப்பதற்கு காரணியாக விளங்கியவராவார். நான் 1979 தொடக்கம் யாழ்.மாநகரசபை உத்தியோகத்தராக கடமையாற்றி காலங்களில் அவர் எந்தப் பதவிகளும் அங்கு வகிக்காத போதும், ஊர் மக்களின் அன்றாட தேவைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து அவர்களோடு மரியாதையுடனும், பண்புடனும் பேசி உள்ளூராட்சி சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவைகளை செய்து கொடுப்பதை, அவ் உத்தியோகஸ்தவர்களின் வாயிலாக கேட்டு நான் அவரையிட்டு மகிழ்ச்சியடைவதுண்டு. ஆணையாளார், பொறியியலாளர், கணக்காளர், சுகாதார அதிகாரிகள், கிளை அதிகாரிகள் கூட அவரது இந்த நற்பண்புகளை ஒரு உத்தியோகஸ்தன் என்கிற வகையிலும் நாவாந்துறையைச் சேர்ந்தவன் என்கிற வகையிலும் எனக்குக் கூறுகின்ற போது அவரை நினைத்து நான் பெருமைப்படுவதுண்டு.

தனது இறுதிக் காலங்களில் சமூகத்தின் கல்வி முன்னேற்றம் ஒன்றை மட்டுமே தனது இலட்சியமாக கொண்டு, அதை முன்னேற்ற பெரும்வழிகளில் பணியாற்றியவர். எந்த ஒரு பதவிகளையும் அவர் விரும்பாத போதும் கல்விப் பொதுப்பாளர் பதவியை சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தில் பெற்று, மால 6 மணி தொடக்கம் 10 மணிவரையும் நடைபெற்ற இரவுப் பாடசாலையை தானே முன்னின்று நடாத்தியதோடு, மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஊக்குவித்து ஒரு அர்பணிப்புடன் செயல்ப்பட்டார்.

தோன்றின் புகழோடு தோன்றுக அ∴து இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள்) என்னும் வள்ளுவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிற்கு ஒப்ப தனது பிறப்பின் பயனை மக்களின் நல்வாழ்வுக்காக சமூகசேவையே தனது வாழ்வாக வாழ்ந்து மறைந்த அமரர் வீரசிங்கம் அவர்களின் புகழ் காலத்தால் அழியாமல், என்றும் நாவாந்துறையின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதில் எதுவித ஐயமுமில்லை. அவர் தம் மக்களுக்கு ஆற்றிய சமூகப்பணிகள் மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும், சமூகப்பணிகளில் ஈடுபடுவோர்க்கு, அவரது பணிகள், இலட்சியங்கள் வாழ்க்கை முறை என்பன என்றும் வழிகாட்டியாக விளங்கும் என்றால் மிகையாகாது.

வாழ்க அமரர் வீரசிங்கம் நாமம்
வளர்க அவர் விட்டுச்சென்ற சமூகப் பணிகள்

**சூசைப்பிள்ளை மரியதாஸ்**
**(ஜெயரெட்ணம்)**
**முன்னாள் யாழ்.மநாகரசபை உத்தியோகஸ்தர்**
**முன்னாள் நாவாந்துறை**
**சென்.மேரிஸ் சர்வதேசக்கிளைத் தலைவர்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My memories of my Grandfather

They say a person never dies. Their memories are passed down through generations until they eventually become myth. But my grandfather's stories are still new, etched in the minds of those who belong to his generations and that of his children. Because of this publication, his stories will never become myths, legends or fables. They will always be honest interpretations of a great man's life.

There is no need for me to go into detail about my grandfather's life. In fact I would not even be a good source to call upon. I was only in his presence for a few days, so I never got to really got to know him as well as the other writer's in this book. Everything I know about him I have learned through my mother and the stories other people who knew him have recited to me. I've learned that he was an influential man, a man of the people, who served in public office on numerous occasions. He also played foot-ball on the famed St.Mary's team. As a young man he went to the prestigious St. Patrick's school and spoke fluent English. His qualities are numerous and his achievements are there for all to see.

In June of 1996, he fell ill and so I along with my mother and brother travelled to Sri Lanka to see him. He had taken up residence in Colombo and it became apparent to us that this could be the last time we would see him. He could barely move, so my mother and my aunts attended to him day and night. I saw him briefly when I arrived and I embraced him. It pained me to have to see my grandfather like this. To be honest, I lost both of my grandfathers without ever really knowing them.

But I did know him. His life is etched in my soul forever. Many people who now see me say I resemble him physically and every time I hear that I feel truly happy. Sometimes things are taken away from us so we realize their true worth, and I truly believe that people respect and love my grandfather even more now that he has passed. I hope in the future that people not only say that I look like my grandfather, but also that I live like my grandfather – filled with pride, self-confidence and bags of talent.

**A loving grandson**
**Shelly barathy Antonypillai (B.A Hons.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

மனிதருள் மாணிக்கமாய்
மக்களின் தொண்டனாய்
புகழ்பூத்த பெருந்தகையாய்
புன்னகையின் பேரொளியாய்
அறத்திற்கு ஆசானாய்
ஏழ்மையின் தோழனாய்
எல்லோருக்கும் அன்பனாய்
வையகத்துள் வாழ்வதற்கு
வழிசமைத்த தெய்வம் - நீர்
அன்பு வழி காட்டி
ஆதரவு தந்து
இன்பமுடன் வாழவைத்து
இன்று வான்வீட்டில் தெய்வமாகி விட்ட
எங்கள் சீனிமாமாவே உங்கள் அன்பை
எங்களால் மறக்க முடியுமா?

நீங்கள் ஏழு சகோதரர்களும் இருந்த ஒற்றுமையையும் பாசப்பிணைப்பையும் நினைக்கும் போது இனிவரும் காலங்களில் அப்படி நாங்கள் இருப்பபோமா? என்ற கேள்வி என் மனத்திரையில் எழுகின்றது. இதை எழுதும் போது எனக்கு கடந்த காலத்தில் நடந்த நிகழ்வு ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. 1996ம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி தட்சனா மடுவிலிருந்து சீனிமாமா நீங்கள் கொழும்புக்குச் செல்ல ஆயத்தமான போது அம்மாவிடம் வந்து நான் கொழும்பு செல்கிறேன் அக்கா என்று சொன்னீர்கள். அம்மா அழுது வேதனைப்பட்டார். அம்மாவைத் தேற்றி ஏனக்கா அழுகிறாய் என்று கேட்க? அம்மா சொன்னா நான் இறந்தால் நீங்கள் வருவீர்களா என்று கேட்டார். அதற்கு சீனிமாமா “அக்கா நாங்கள் 6 பேரும் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்ற பிறகுதான் இறப்பாய் நீ. காரணம் எங்கள் எல்லோரின் பெருமைகளையும் பாசத்தையும் ஒற்றுமையையும் சொல்லி அழவேண்டும்” என்று சீனிமாமா சொன்னார். அதன்படியே நடந்தது. எனது ஐயாவுடன் வாழ்ந்த காலங்களில் அக்காவின் கணவர் அத்தான் என்ற மதிப்பும் மரியாதையும் கொடுத்து அன்பு செய்து வாழ்ந்தீர்கள். இவைகளை எங்களால் மறக்க முடியாது. பாசம், ஒற்றுமை, பொறுமை, விட்டுக்கொடுத்தல் என்ன என்பதை உங்களிடம் இருந்துதான் சீனிமாமா கற்றுக் கொண்டோம். நாங்கள் எல்லோரும் உங்களைப் போல சகோதர பாசத்துடனும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

**அன்புடன் மருமகள்**
**ஜெகதீசன் மரியரூபி**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவலைகளில் ஐயா

எங்கள் வாழ்வில் ஒளிவிளக்காய், எம்மையே தனம் மூச்சாகவும், நல்ல சமூக சிந்தனையாளனாகவும் தான் சார்ந்த சமூகத்தில் நிலையில்லா ஈடுபாடு கொண்டவராகவும் எம் மக்களின் அபிமானத்தினை வென்று அந்த சமூக மக்களால் யாழ் மாநகரசபை உறுப்பினராகவும் யாழ் மாநகர உதவி மேயராகவும், சமாதான நீதவானாகவும் வாழ்ந்து தன் குடும்பத்தை விட தான் சார்ந்த சமூகத்துக்கு பல நன்மைகளை செய்து வாழ்ந்த என் அன்புத் தந்தையின் நினைவலைகளைப் பகிர்ந்து கொள்ள இச்சிறு குறிப்பினை எழுதுகின்றேன்.

தாயாரின் பாசத்தால் இறுக்கமாக இணைக்கப்பட்ட எனது தந்தையும், சிறிய தந்தைமாரும், அண்ணனின் வீட்டுக்குச் சென்று தாயாரின் நலன் விசாரித்து அவவுடைய நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்து வருவது நாளாந்த வழக்கமாகும். சகோதரர்கள் நால்வரும் மிகமிக பாசமும் பற்றும் கொண்டவர்களாக வாழ்ந்தவர்கள். எத்தனை தடைகள் வந்தபோதும் நால்வரும் தினமும் சந்தித்து பேசாமல் இருக்க மாட்டார்கள், சகோதர பாசத்தில் அவர்களை மிஞ்ச யாருமில்லை.

நாங்கள் அவருக்கு பிள்ளைகளாக பிறந்தது பெருமை. அவர் எங்கள் மேல் காட்டிய அன்பை எங்கள் உயிருள்ளவரையும் மறக்க முடியாது... நல்ல தந்தையாய், நல்ல நண்பனாய், நல்ல ஆசிரியனாய் எங்களோடு வாழ்ந்த அந்த நாட்கள் இப்பவும் எங்கள் இதயங்களில் நிறைந்திருக்கிறது. அம்மாவும் ஐயாவும் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களின் திருமணத்துக்குப்பின் எத்தனையோ கஷ்டங்களைச் சந்தித்தார்கள். இருவரும் அவைகளைத் தாங்கி மனஉறுதியுடன் அன்னியோன்னியமாக வாழ்ந்து எங்கயைும் வாழ வைத்தார்கள்.

ஐயாவின் எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, அறிவான பேச்சு, அரசியல் ஞானம், மேடைப்பேச்சு. இவைகள் எல்லாம் என் மனதைக் கவர்ந்தவை. வீட்டில் நாங்கள் எல்லோரும் தினமும் கூடி பல விடயங்களைப் பற்றி அலசி ஆராய்வோம். குடும்பம், அரசியல், சமூகம், சமயம் ஆகிய விடயங்களைப் பற்றி விவாதிக்கும் போது ஒரு குட்டிப் பாராளுமன்றமே நடக்கும். இப்படி எல்லா விடயங்களிலும் எங்களுக்கு முழு சுதந்திரமும் தந்து வளர்த்தவர் என் தந்தை. ஒன்று மட்டும் அடிக்கடி கூறுவார் “சொல் அஞ்சு” இதை எனக்கு நானே தினமும் சொல்லிக் கொள்வேன். அந்தளவுக்கு அர்த்தமான சொல் என்பதை என்னால் உணர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலே கல்வியின் மேல் நான் கொண்ட ஆர்வத்தைக் கண்டு யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் சேர்த்து படிக்க வைத்தார். நான் ஆர்வத்துடன் படிக்கும் பாடம் எண்கணிதம். எனது தந்தையாரும் படிக்கும் காலங்களில் கணிதத்தில் மிகவும் கெட்டிக்காரன். அவர் சொல்லுவார் கணித வகுப்பில் ஆசிரியர் கரும்பலகையில் கணக்கு விளங்கப்படுத்தி விடை எழுதுவதற்கு முன்பு தான் எழுந்து விடை கூறிவிடுவாராம். ஆசிரியர் வியந்து தன்னைப் பாராட்டுவாராம். அந்தளவிற்கு படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். கல்வியின் மேல் அவர் நிறைய நாட்டம் உள்ளவர், நாங்கள் எல்லோரும் நன்றாய் படித்து பிற்காலத்தில் நல்லாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவரின் விருப்பப்படி நான் எனது உயர் கல்வியை தொடர முடியாமல் போனதையிட்டு மிகவும் வேதனைப்படுவேன்.

எனது தந்தையாரின் எடுப்பான தோற்றமும், சிரித்த முகமும் எல்லோருக்கும் பிடிக்கும். இதனால் அவர் எங்கு சென்றாலும் எந்தக் காரியத்தில் இறங்கினாலும் வெற்றியே கிடைக்கும். எமது ஊரில் எத்தனையோ பேர் புதமனை அமைக்கும் போது அத்திவாரக் கல்லு இவரைக் கொண்டே வைப்பார்கள். அத்திவாரக் கல்லு வைக்கப்பட்ட வீடுகள் எதுவித இடையூறும் இல்லாமல் கட்டி முடிந்ததை கண்கூடாகக் கண்டுள்ளேன். அத்தோடு புதுவருடம் பிறக்கும் போது எனது ஐயா நாவாந்துறை சந்தையின் பக்கத்தில் அமைந்துள்ள "மணியம் ஸ்ரோர்ஸ்" கடையை முதலாளியின் அழைப்பின் பேரில் ஒவ்வொரு வருடமும் அக்கடைக்குச் சென்று, பணம் கொடுத்து முதலில் பொருளை வாங்குவது வழக்கம். அந்தளவிற்கு அவரின் கைராசியை முதலாளி பெருமையுடன் பாராட்டியதை கண்டு மகிழ்ந்துள்ளேன். ஐயா யாழ்.மாநகரசபை உறுப்பினராக இருந்த ஆரம்ப காலங்களில் எமது ஊரின் வீதிப் புனரமைப்புச் செய்யும் தொழிலாளர்களுடன் மிகமிக அன்பாகவும் நண்பனாகவும் பழகுவார். மதிய வேளையில் வீட்டிற்கு அவர்களை வரவழைத்து உணவும், குளிர் பாணமும் கொடுத்து சந்தோஷப்படுத்துவார். புதுவருடம் அன்று அவ்வூழியர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து எங்கள் வீட்டிற்கு வந்து ஐயாவின் கையால் கைவிசேஷம் வாங்குவார்கள். அப்படி எனது ஐயா சாதாரண ஊழியர்களுடனும் அன்பாகவும் சாதி, மத பேதமின்றி நண்பனாக பழகுவதையிட்டு நான் சந்தோஷப்பட்டிருக்கிறேன். அவ்வூழியர்களின் ஒருவர் கந்தசாமி. அவர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து அம்மாவுடன் தனது குடும்பக் கதைகளை எல்லாம் கதைத்துப் பகிர்ந்து கொள்வார். அவர் திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தைகள் இல்லையென்று சொல்லி அழுவார். எனது ஐயா அவருக்கு ஆறுதல் கூறி மருதமடு மாதாவிற்கு நேர்த்தி வைத்து மடு திருப்பதிக்கு அவரையும் அவருடைய மனைவியையும் எங்களுடன் அழைத்துச் சென்று அங்கு காணிக்கை செலுத்தி மன்றாடினார். அடுத்த வருடமே அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வீட்டிற்கு வந்து ஐயாவின் கைகளைப் பற்றிக் கொண்டு அழுது நன்றி கூறிய அந்தச் சம்பவம் என் ஞாபகத்தில் உள்ளது. இப்படி ஐயா அன்போடும் பண்போடும் நற்போடும் எல்லோருடனும் சமமாக பழகும் நற்குணம் உடையவர்.

1981ல் யாழ். ப.நோ.கூ.சங்கத்தில் வேலைக்குச் சேர்ந்து முதல் நாள் காரியாலயத்துக்குச் சென்ற போது பொது முகாமையாளர் என்னை வரவேற்ற விதத்தைக் கண்டு நான் மெய்மறந்து போனேன். இன்னுமொரு சம்பவம், கனடா வருவதற்கு 1990ல் நானும் எனது மகனும் சிங்கப்பூர் சென்றிருந்தோம். அங்கே விசா புதிப்பிப்பதற்கு மலேசியா செல்ல வேண்டும். மலேசியா எம்பசிக்குச் சென்று வரிசையில் நின்று கொண்டிருந்த சமயம், அங்கு வேலை செய்யும் ஒருவர் என்னிடம் வந்து நீங்க வீரசிங்கத்துக்கு மகளா என்று கேட்டு, ஐயாவும் தானும் நெருங்கிய நண்பர்கள் என்றும், C.T.Bயில் வேலை செய்யும் டானிசியஸ்யையும் தெரியும் என்று கூறி, தான் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றும் சொன்னார். என்னிடம் பாஸ்போட்டை வாங்கி விசா பெற்றுத் தந்தார். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் நான் அவருக்கு மகளாய் இருக்கிறேன் என்று பெருமிதம் அடைந்திருக்கிறேன்.

சிறுவயதில் பல தடவைகள் ஐயாவுடன் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். பல பிரமுகர்கள் பேசுவார்கள், கைதட்டல்கள் நடக்கும், கடைசியில் தான் ஐயா பேசுவார். அவர் பேசும்போது, ஓயாமல் கைதட்டல்கள் கேட்கும். நானும் சந்தோஷத்தில் கைதட்டுவேன். வீடு திரும்பியதும் ஐயா மற்றவர்கள் பேசியதை விட நீங்கள் பேசும்போது நிறைய கைதட்டல்கள் கேட்கின்றதே ஏன்? அவர் சிரித்துவிட்டு போய்விடுவார். அறிவு வளர்ந்த பின்தான், எனக்கு புரிந்தது. அவருடைய பேச்சில், நல்ல கருத்தும், உண்மையும் ஆணித்தரமாக இருந்தமையால் மக்கள் வரவேற்றுக் கை தட்டினார்கள். அந்தளவுக்கு அவர் சிறந்த மேடைப் பேச்சாளன், அவருக்கிருந்த அரசியல் ஞானம் அவரது 19வது வயதிலேயே அரசியலை நாட வைத்தது. இத்தனையோ உத்தியோகங்கள் அவரைத் தேடிவந்த போதிலும் மக்கள் சேவையை தன் சேவையாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரிய தந்தை.

எங்கள் ஆறுபேருடைய வாழ்க்கையும் எங்கள் விருப்பப்படியே நிறைவேறியது. அவர் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் எங்களுக்கு வாழ்க்கை அமைத்துத் தந்தவர். அவருடைய ஆசீருடன் நாங்கள் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மருமக்களுடன் மதிப்பும் மரியாதையுடனும் பழகுவார். எனது மாமனாரும் (மனுவல் ஆசீர்வாதம்) எனது தந்தையும் நெருங்கிய நண்பர்கள். அரசியல், சனசமூக நிலையம் போன்ற விடயங்களில் இருவருக்கும் ஒத்த கருத்துக்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவும் இருந்ததுண்டு. முரண்பாடுகள் இருந்ததில்லை. எனது தந்தை அவரோடு மட்டுமல்ல ஊர் பெரியவர்கள், அயலவர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவருடன் மதிப்போடும், பண்போடும் பழகும் உன்னத மனிதர்.

அம்மா... அவ ஒரு பொறுமையுள்ள சீவன். அவ குடும்பத்தில் கடைக்குட்டி. தாய், தகப்பன், ஆசை அண்ணன், அக்காமாரின் பாசத்தில் செல்லமாக வளர்ந்தவ, திருமணத்தின் பின் அவவுடைய வாழ்க்கையில் நிறைய சோதனைகள், கஷ்டங்கள், துன்பங்கள் எல்லாவற்றையும் தாங்கி எளிமையோடு பொறுமையாக வாழ்ந்த தாய். அவவுடைய முழுச்சந்தோஷமும் ஒரு இலட்சிய மனிதனை கணவனாக அடைந்தது மட்டும் தான். வீட்டுக்கு எவர் வந்தாலும் அவர்களை இன்முகத்தோடு வரவேற்று, விருந்து கொடுத்து உபசரிப்பதில் அவ பெரும் திருப்தி அடைவா. கதைப்புத்தகங்கள், பத்திரிகை வாசிப்பது இவவுடைய தனிச் சிறப்பு. யாருடனும் கோபம் சாதிக்க இவவுக்குத் தெரியாது. ஆர்ப்பாட்டம் இல்லாத அடக்கமான ஒரு பிறவி. அப்பவும் இப்பவும் அவ கூறும் வேதவாக்கு இது.

"பொறுத்தார் அரசாள்வர்
பொங்கினார் காடுறைவர்
தாழ்த்தினோர் உயர்த்தப்படுவர்
உயர்தினோர் தாழ்தப்படுவர்"

இப்பவும் எங்களுக்கு இதை அடிக்கடி கூறுவார்.

நானும் என் தந்தையும் சந்தித்த கடைசி நாட்கள் 1996ம் ஆண்டு யூன் மாதம் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு வந்திருந்தார். திடீரென அவருக்கு முடியாமல் மருத்துவ மனைக்கு கொண்டு சென்ற செய்தி கேட்டு, ஓரிரு தினங்களில் நானும் எனது இரு பிள்ளைகளும் கொழும்புக்கு அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். அவர் சுகமாகி வீட்டுக்கு திரும்பி விட்டார். எங்களை கண்டவுடன் அவருக்குச் சொல்ல முடியாத சந்தோஷம். எனது மாமியாரைப் பார்க்க பெரியமடுவுக்கு செல்ல வேண்டும் என்று கூறினேன். அவர் இரண்டு நாட்களில் என்னை வற்புறுத்தி உறவினர்களுடன் அனுப்பி வைத்தார். அங்கிருந்து 20 நாட்களின் பின்பு கொழும்பு திரும்பினேன். ஐயா மீண்டும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதிகாலையில் அவரைப் பார்க்கச் சென்றபோது, அழத் தொடங்கி விட்டேன். என்னை அவர் அருகில் அழைத்து ஆறுதல் கூறி எனக்கு ஒன்றுமில்லை நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று கூறினார். சாவின் பிடியிலும் அவரது துணிச்சலைக் கண்டு பிரமித்துப் போனேன். அடுத்த ஓரிரு தினங்களில் சிகிச்சை பலனளிக்காது எம்மை விட்டு பிரிந்து விட்டார். இவரின் பிரிவு கேட்டு எனது சிறிய தந்தை (பாலசிங்கம்) மன்னாரிலிருந்து பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு வந்தார். தம்பியின் மேல் மிகுந்த பாசம் கொண்டவர். ஐயாவின் பிரிவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்க முடியாமல், என் பாசமிகு சின்னையாவும் ஐந்தாம் நாள் இவ்வுலகை விட்டு சென்று விட்டார். இருவருடைய நினைவுளும் என்னோடு என்றும் நிறைந்திருக்கும்.

ஐயாவின் பிரிவினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நல்ல தந்தையை, நண்பனை, ஆலோசகனை இழந்து தவிக்கின்றோம்.

ஐயா நீங்கள் வாழ்ந்த நாட்களை
நான் புரிந்து கொள்ளவில்லை
நீங்கள் கூறிய விடயங்களை
நான் உணர்ந்து கொள்ளவில்லை
இன்று உங்களின் அந்த நினைவுகளை
என் நெஞ்சங்களில் ஆழமாக பதித்து வைத்துள்ளேன்
மீண்டும் உங்கள் மகளாய்
பிறந்திட இறைவனை வரம் கேட்கின்றேன்.

**உங்கள் நினைவுடன்**
**அன்பு மகள்**
**அன்ரனி மேரிராணி**
**கனடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்

இம்மலரை வெளியிடுவதற்கு எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், பலவழிகளிலும், புகைப்படங்களும் தந்துதவிய முன்னாள் மறைந்த பிரபல சட்டத்தரணியும், யாழ் முன்னாள் மேயருமாகிய சின்னத்தம்பி நாகராஜாவுக்கும், அவரின் குடும்பத்தாருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், வெளிநாடுகளிலுள்ள எம் அன்பு உறவுகளுக்கும் எங்கள் ஊரின் அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றி நவில்தலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியும் பிள்ளைகளும்



மனைவியும் மருமக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியும் பேரப்பிள்ளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தமகள் குடும்பம்



இரண்டாவது மகள் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தமகன் குடும்பம்




இரண்டாவது மகன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளையமகன் குடும்பம்



இளையமகள் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் சகோதரர்களும் மூத்த சகோதரரின் மகள் இராஜேஸ்வரியும்




அமரரின் இல்லத்தில் இரண்டாவது மகளின் பதிவுத்திருமணதின் போது சம்மந்தியுடன்



மூத்தபேரனின் பிறந்தநாளின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரப்பிள்ளைகள் அனா, அன்ரனிராஜ், யோசப்ராஜ் இவர்களுடன்

இளையமகன் ராஜனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தபேத்தியின் பிறந்தநாளின் போது



பேரன் எதிர்ராஜின் பிறந்தநாளின் போது



பெறாமகளின் திருமணத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரரின் மகன் பிரான்ஸ்சின் திருமணத்தின் போது



பெறாமகளின் பதிவுத் திருமணத்தின் போது



இளையமகள் இந்திராவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family

Philip Sebastiyampillai (Retnam)
+
Asirvathamma (Sampooranam)

Alfred Thuraisingam
Former Manager
C.W.E of Jaffna
+
Agnessama
(Pushpam)

Balasingam
Former Jaffna Municipal
Council Worker
+
Lurthamma

**Veerasingham**
M.M.C. JP
Former Deputy Mayor
of Jaffna 1972

Amalasingam
+
Rasathi

C
(Th

Athi

Lorencia
(Singarani)
+
Gunasingham
(Kanthan)

Mary Luxshayini + Noyal Ronard
Maryanna
Antonistan

Ceciliya
(Maryrani)
+
Antonypillai
(Asirthasan)

Shelly Bharathi
Prakash
Darvin

Arokia
(Ethirsi
+
Mar
(Pus

Ethi
Math

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# amily Tree

Muthar Mariyampillai
+
Mariya Salomai

ngam

thi

Cecelia (Thangatha)
+
Athiriyampillai

Mariyamma (Thangamany)
+
Asirvatham

Philip (Muthurasa)
+
Lurthamma (Pooranam)

Thiressamma (Baby)
+
Navaretnam

Elizabeth (Marypillai)

Arokiathasan (Ethirsingham)
+
Margret (Pushpa)
→ Ethiraj, Mathujan

Antony (Janson)
+
Mary Pedatovana (Christella)
→ Antony Raj, Mary Norisiya, Mary Shelsiya

Mariyadas (Rajan)
+
Mary Mattilda (Anjelina)
→ Joseph Raj (Rajeevan), Mary Anusha

Mariyagorate (Indira)
+
Philip Didacus (Sylvester)
→ Dirushan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FAMIL

பிலிப் செபஸ்தியாம்பிள்ளை
(ரெத்தினம்)
+
ஆசீர்வாதம்மா
(சம்பூரணம்)


- அல்பிறட் துரைசிங்கம் (முன்னாள் C.W.E. முகாமையாளர்)
  + அக்கினேஸ்சம்மா (புஸ்பம்)
- பாலசிங்கம் (முன்னாள் யாழ். மாநகர ஊழியர்)
  + லூர்த்தம்மா
- **வீரசிங்கம்** (முன்னாள் M.M.C., J.P. Former Deputy Mayor of Jaffna 1972)
- அமலசிங்க
  + ராசாத்தி

---

- லோறன்சியா (சிங்கராணி)
  + குணசிங்கம் (கந்தன்)
  - மேரி லக்‌ஷாயினி + நோயல் றொனாட்
  - மேரி அனா
  - அன்ரனிஸ்ரன்
- சிசீலியா (மேரிராணி)
  + அன்ரனிப்பிள்ளை (ஆசீர்தாசன்)
  - ஷெல்லி பாரதி (BA Hons)
  - பிரகாஷ்
  - டார்வின்
- ஆரோக்கியதாசன் (எதிர்)
  + மாகிறெட் (புஸ்பா)
  - எதிராஜ்
  - மாதுஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMILY TREE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Abirami 94 776100454